Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

ஈழநாடு
வார மலர்

வேண்டுகோள்!

மில்க்வைற் விற்பனையாளர் களுக்கு ஓர் அன்பான வேண்டு கோள்: மில்க்வைற் நீலசோப் 72 கட்டி கொண்ட 'பண்டல்' மேலுறை 50 சேகரித்துக் கொடுத்தால் ஓர் அழகான படம் பிரேம்போட்டு இனமாக வழங்கப்படும்.

மில்க்வைற்
ஸ்தாபனத்தார்.

மலர் 11 | சௌமிய ஆடி 28 ஐ: அவ் 27 | (12-8-69) | செவ்வாய்க்கிழமை | இதழ் 181

# மாவிட்டபுரத்தில் குண்டுவீச்சு பொலிஸ் பாதுகாப்பு அதிகரிப்பு

## ஆடல் காணிரோ!



'தாண்டவச் செல்வம்' ஆனந்த இராசமாணிக்கமும், குமாரி பத்மினி நடராசாவும் சிவன்-சக்தியாக இங்கு காட்சி தருகிறார்கள். இந்தியப் புகழ் - கோபிநாத்தின் சிஷ்யரான கலைஞர் வேல் ஆனந்தன் தயாரித்தளிக்கும் பரதம்-கதகளி நாட்டிய நிகழ்ச்சியிலேயே இவர்கள் இப்படித் தோன்றுகிறார்கள். திருநெல்வேலி கலைக்கோவில் அளிக்கும் இந்த நாட்டிய நிகழ்ச்சி இம்மாதம் 18-ம் திகதி காங்கேசன்துறை யாழ். தியேட்டரில் நடைபெறவிருக்கிறது. 'இந்திரன் ஆணை' நாட்டிய நாடகம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறுகிறது.

## குண்டு வெடிப்பு சம்பவம்; கார் சிக்கியது; 7 பேர் விசாரணை

நல்லூர், அளவெட்டி நிருபர்

சப்பறத் திருவிழாவின் போது மாவிட்டபுரம் கந்தசாமிகோவிலில் நடைபெற்ற வெடிகுண்டு சம்பவத்தை தொடர்ந்து, பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேற்கு வீதியால் செல்லும் வாகனங்கள் பொலிஸாரினால் சோதனைக் குட்படுத்தப் படுகின்றன.

சப்பறத்தில் சுவாமி எழுந்தருளும் சமயம். மேற்கு வீதியிலுள்ள பழனி ஆண்டவர் சந்நிதி அருகில் ஒரு வெடிச்சத்தம் கேட்டது பொலிஸாரும், பக்தர்களும் பரபரப்புடன் அத்திசையை நோக்கி ஓடினார்கள். அவ்விடத்தில் ஒரு டோர்ச்லைட்டின் பாகத்தை சி.ஐ.டி பொலிசார் கண்டெடுத்ததாக அறியப்படுகிறது.

இதைத் தொடர்ந்து சுவாமி வீதிவலம் புறப்படு முன்னர் தலைமைக்காரியாலய இன்ஸ் பெக்டர் ஹரத் தலைமையில் பொலிஸார் வீதிகளை சோதனையிட்டபோது, கைக்குண்டொன்று கண்டு பிடிக்கப் பட்டது. அதன் பின் சுவாமி வீதிவலம் [illegible] பெற்றது.

## ரதோற்சவ விழா அமைதியாக நடந்தது

(அளவெட்டி, நல்லூர் நிருபர்கள்)

மாவை மேற்கு வீதியிலுள்ள பழனி ஆண்டவர் சந்நிதியில் குண்டொன்று வெடித்ததைத் தொடர்ந்து சுறுசுறுப்படைந்த பொலிசார் கைக்குண்டொன்றை சப்பறத் திருவிழா வன்று கண்டெடுத்ததையடுத்து கோவில் பகுதியில் பக்தர்கள் மத்தியில் எழுந்த பரபரப்பானசூழ்நிலையில்நேற்றுக்காலைபல்லாயிரக்கணக்கான பக்தர்களின் 'அரோகரா' கோஷத்துடன் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பஞ்சரதோற்சவம் நிறைவெய்தியது.

சப்பறத் திருவிழாவின்போது மேற்கு வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்பட்ட ஒருகாரை ரோந்து சுற்றிவந்த பொலிசார் சுற்றிவளைத்துப் பிடித்துக்கொண்டனர். காரில் இருந்த ஏழுபேர்கள் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இன்று காலை நடைபெறும் தீர்த்தோற்சவத்தைத் தொடர்ந்து நாளை நடைபெறும் மாம்பழத்திருவிழாவுடன் வருடாந்த உற்சவம் பூர்த்தியடைகிறது.

இன்று அதிகாலை மூன்று மணிக்கு சுவாமி புறப்பட்டு கீரிமலைக்குச் சென்று அதிகாலை 4-30 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். இன்று பிற்பகல் 3 மணிக்கு கீரிமலையிலிருந்து சுவாமி புறப்பட்டு இரவு எட்டு மணியளவில் மாவிட்டபுரத்தைவந்தடையும் நாளை நடைபெறும் மாம்பழத்திருவிழாவுடன் வருடாந்த உற்சவம் நிறைவுபெறும்.

---

சந்தேகத்திற்கிடமான முறையில் நேற்று முன்தினம் மேற்குவீதியில் காணப்பட்ட ஒரு காரை, ரோந்து சுற்றிச் சென்ற பொலிஸார் கைப்பற்றினார்கள். காரில் இருந்து ஓட எத்தனித்த 7பேர்களை பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

கொக்குவிலைச் சேர்ந்த முத்து சின்னத்தம்பி, மார்க்கண்டு சூசைமுத்து சின்னத்தம்பி தவராசா, ஞானம் செபமாலை, செல்லத்துரை கந்தசாமி, முத்தன் சின்னத்தம்பி, கோப்பாயைச் சேர்ந்த கந்தையா இராசதுரை ஆகிய 7 பேர்களும் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றனர்.

கோவிலைச் சுற்றிவர 24 மணித்தியாலமும் பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டிருக்கிறது.

நேற்று வடக்கு வீதியிலுள்ள அன்னதானப் பந்தலில் பொலிசாரின் செலவில் அன்னதானம் நடைபெற்றது. உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் தலைமையில் நடைபெற்ற அன்னதானத்தைப் பொலிஸார் சிறந்த முறையில் நடாத்தி வைத்தனர், பொதுமக்களுக்கும் பொலிசாருக்கு மிடையே நல்லுறவை வளர்க்க இது பெரிதும் உதவும் என்று பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

நேற்றிரவு கோயிலில் நடந்த வெடிகுண்டு சம்பவத்தை தொடர்ந்து அபாயச் சங்கு ஊதப்பட்ட போது உணவு அருந்துவதை கூட இடைநடுவில் நிறுத்திவிட்டு சில பொலிஸார் ஓடிச்சென்றதாக பொலிஸார் ஒருவர் தெரிவித்தார் சிலபொலிஸார் சாப்பிடாமல் கூட கடமையாற்றினார்களென்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றிரவு வெடிகுண்டு சம்பவம் நடைபெற்றபோதிலும் பக்தர்கள் எவ்வித அச்சமுமின்றி வழக்கம்போல சுவாமி தரிசனம் செய்ய வந்ததாகவும் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொருட்காட்சி - விஞ்ஞான

## கல்விச் சரித்திரம் காணும் விழா

### யாழ்ப்பாண நகரில் கல்வி நூற்றுண்டு தமிழ்த்தின விழா

— சி. தணிகாசலம்
[வடமாநில கல்வியதிபதி]

முதலாம் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகப் படிப்பு முடியும்வரை ஒரு மாணவன் தன்னுடைய தாய் மொழிமூலமேகல்விகற்கவேண்டியது விதி. தமிழ்ப் பாஷையில் திருத்தமான பயிற்சியில்லாவிடில் ஏனைய பாடங்களிலும்பயிற்சி குறைவாகவேயிருக்கும். ஆகவே தமிழ்ப்பேசும் பிள்ளைகள் தமிழ்பாஷையை சரியான முறையிலேகற்கவேண்டியது இன்றியமையாதது.

பாஷைகளின் பயிற்சியில் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் மனதை ஈர்க்கும் நோக்கத்துடன் கல்வி அமைச்சு சிங்களத்தினம், தமிழ்த்தினம், ஆங்கிலத் தினமென்று மூன்று தினங்களைக்கொண்டாடுவதற்கு ஒழுங்கு செய்திருக்கிறது.

ஒவ்வொரு தமிழ்ப்பாடசாலையிலும் தமிழ்த்தினப் போட்டிகள் ஆடி மாதம் முதற்பகுதிகளில் நடைபெற்றது. மூன்றும் நான்காம் வகுப்புகள் 'அ' குழுவாகவும், ஐந்து, ஆறும் வகுப்புகள் 'ஆ' குழுவாகவும், ஏழாம் எட்டாம் வகுப்புகள் 'இ' குழுவாகவும் மூன்று பிரிவுகளாக இப்போட்டிகள் நடாத்தப்பட்டன.

நாடகம், சொற்பொழிவு, பா ஓதல், சொல்வதெழுதல், எழுத்துக் கூட்டல், வாசிப்பு, கதை சொல்லல் முதலிய அம்சங்கள் போட்டியில் இடம்பெற்றன.

பாடசாலைப் போட்டியில் முதலிடத்தைப்பெற்றவர்கள் வட்டாரப்போட்டியில் பங்குபற்றினர். ஒவ்வொரு வட்டாரப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றவர்கள் ஆடிமாதக் கடைசிவாரத்தில் நடத்தப்பெற்ற மாவட்டப் போட்டியில் பங்குபெற்ருர்கள்.

அகில இலங்கைத் தினப் போட்டிகள் இம் மாதம் 14-ம், 15-ம், 16-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன. இலங்கையிலே இருக்கும் 23 மாவட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்ருேர் இந்த அகில இலங்கைப் போட்டியில் பங்குபெறவிருக்கிருர்கள்.

மொத்தமாக 485 பிள்ளைகள் 14-ம் தேதியன்று யாழ். இந்துக் கல்லூரியில் வந்து சேருவர். ஆண்கள் இந்துக் கல்லூரியிலும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும், பெண்கள் யாழ். இந்துமகளிர் வித்தியாலயத்திலும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பெண்கள்விடுதிகளிலும் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் இருக்கும் விடுதிகளில் அரசாங்கச் செலவில் போசனத்திற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பிற ஊர்களிலிருந்து வரும் பிள்ளைகளுக்கும் அவர்களுடன் வரும் ஆசிரியர் ஆசிரியைகளுக்கும் அரசாங்கம் பிரயாணச் சீட்டுகள் வழங்கும்.

இறுதி நாளில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் பகிரங்கக் கூட்டமும், பரிசளிப்பு விழாவும் நடைபெறும். அவ்விழாவில் அகில இலங்கையில் முதலிடம்பெற்றபிள்ளைகளின் நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

இப்படியான விழா கல்விச் சரித்திரத்திலே முதன்முதலாக நடாத்தப்படுகிறது. இவ்விழாவை யாழ்ப்பாணத்திலே நடத்துவதற்கு ஒழுங்குசெய்த கல்வி அமைச்சருக்கு எம்முடைய நன்றி.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக கலாநிதி சு. வித்தியானந்தனை கல்வி அமைச்சு அழைத்திருக்கிறது. உப மகாவித்தியாதிபதி திரு. டி. எம். ஹெற்றி ஆராய்ச்சியும் வைபவத்தில் பங்குபற்றுவார். யாழ்ப்பாணத்துக்கல்வி நூற்ருண்டு விழாவின் கடைசி நிகழ்ச்சியாக அகில இலங்கைத் தமிழ்த்தின விழா பங்குபெறுவது எம்மெல்லோருக்கும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

இத்தகைய மகத்தான விழாவில் வெற்றிபெறும் பிள்ளைகளுக்கு வைபவத்திற்கேற்கப் பரிசில்கள் வழங்குவதற்குதமிழபிமானிகளுக்கு வேண்டுகோள் அனுப்பியிருக்கின்ருேம். இற்றைவரை அன்பளிப்பு உவந்தவர்களின் பெயர்களை இவ்விதழிலே காணலாம்.

## விளையும் பயிர்களின் விருப்பூட்டும் சாதனைகள்

### அகில இலங்கையிலுமிருந்து யாழ்ப்பாணத்தில் கூடும் தமிழ்ச் சிறு வீரர்கள்

— வித்துவான் பொன். முத்துக்குமாரன் —

கல்வி நூற்ருண்டு வைபவத்தையொட்டி அகில இலங்கைப் பாடசாலைகளின் தமிழ்த்தினவிழா 14, 15, 16-8-69 ஆகிய மூன்று நாட்களிலும் யாழ். இந்துக் கல்லூரியில்நடைபெறவிருக்கின்றது. அவ்விழாவில் அமைந்த நிகழ்ச்சிகளாகத் தமிழ்ச்சிருர்களின் பேச்சு, பாட்டு, நாடகம் முதலிய இனிய சாதனைகள் இடம் பெறவிருக்கின்றன.

ஒரு பெருஞ் சபைநடுவே ஒப்பற்ற இசைவிற்பன்னர் ஒருவர் அமுதம்போல இசை விருந்தளிக்கின்ருர். அவ்விசையமுது அற்புதமானதாயிருப்பினும் அச்சபையிலுள்ள அனைவரும் அதனை ஒருமுகமாக இரசித்து மகிழ்தலை நாம்கண்டதில்லை. அச் சபையிலுள்ளவர்களில் ஒரு சிறுபிரிவினர் அவ்விசையிலுள்ள குற்றங்களையே தேடிக்கண்டுபிடித்துக்குறை கூறும் செயலிலேயே ஈடுபட்டிருப்பதைக் காண்பேசம். அதுபோலவே நல்லபொருள் பொதிந்த சொற்பொழிவு கண்ணையும் கருத்தையும் கவரவல்ல நாடகம் முதலியவை நிகழும்போதும் அவற்றைக் கண்டுகேட்டு அனுபவிக்கக் கூடியுள்ள மக்களிலும் எல்லோரும் அவற்றை ஒருமுகமாக நயந்தும் வியந்தும் அனுபவித்தலை நாம் காண்பது அரிது. ஆனல், இதற்கும் ஒரு விதிவிலக்கு உண்டு. சிறுவர்கள்-அவர்கள் தம் பிள்ளைகளாயினும் என்ன பிறர் பிள்ளைகளாயினும் என்ன-மேடை ஏறிஒரு சிறிய பாடலைப் பாடும் பொழுதோ சிறியதொரு பேச்சினை நிகழ்த்தும் பொழுதோ சிறியதொரு நாடகத்தினைப் பலர்சேர்ந்து நடிக்கும் பொழுதோ அந் நிகழ்ச்சியைக் காண்போர் அனைவரும் தம்மை மறந்து ஆனந்தம் கொள்கின்றனர். குறையோ குற்றமோ காணும் மனப்பாங்கு அப்பொழுது அச்சபையோரது உள்ளத்திலிருந்துஅடியோடு அற்றுப் போய்விடுகின்றது. ''குழலினிது யாழினிது என்பதம் மக்கள் மழலைச் சொற்கேளாதவர்'' என்ற வள்ளுவர் பெருமான் வாக்கிற்கிணங்க, சிறுவர்தம் இனியபேச்சும் செய்கையும் அச்சிறுவரைப் பெற்ற தாய் தந்தையர்க்குப் பேரின்பந் தருவதுண்மையாயினும் அவை பிறர் உள்ளத்திலும் மகிழ்ச்சி பிறக்கச்செய்கின்றன.

சிறுவர்கள் சிலர் சேர்ந்து மேடையேறி நாடகம் நடிக்கும் போதோ, திறமைவாய்ப்பச் சொற்பொழிவு நிகழ்த்தும் போதோ அதனைப் பார்ப்போருக்கு முதலில் மகிழ்ச்சியும் பின்னர் பெருமிதமும் ஏற்படுகின்றன. நம்தமிழ்மக்கள் பண்டுதொட்டுக் கல்விச் சிறப்பும் கலைத்திறனும் ஒருங்கு நிரம்பப்பெற்று உலகம் வியப்ப வாழ்ந்தவர்கள். அவ்வாறு தமிழர்கள் தம் கண்கள் போலக் காத்த கல்வியும் கலைத்திறனும் இனிவரும் எதிர்காலத்திலும் ஈடும் எடுப்புமின்றி விளங்கும் என்னும் பெருமித உணர்வு வருங்காலத்து வளரும் பயிர்களாகிய இச்சிருர்களின் இனிய சாதனையால் பார்ப்போர் உள்ளத்தில் உண்டாகும் என்பதிற் சந்தேகமேயில்லை.

''தம்மிற் றம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது'' என்பது பொய்யாமொழி. ஒரு மைந்தன் அறிவுடையனுனல்அம்மைந்தனுடைய தந்தை தாயர்களேயன்றி-அவர்களைக் காட்டிலும் அவன் பிறந்த நாட்டு மக்களனைவருமே நன்மையும் இன்பமும்அடைவர். அம்முறைமைப்படி பள்ளிச்சிருர்கள், பலர்கூடிய சபை முன்னிலையிலே தமது கல்விச்சிறப்பினையும் கலைத்திறனையும் விளங்கக்காட்டும் போது, அவர்களதுஆற்றலைக்கண்ட சபையினர் அச்சிறுவர்களால் எதிர்காலத்தில் இந்நாடு பொன்னுடாகும் என்னும் பெருமித உணர்வு பெறுதல் ஒருதலை.

[4ம் பக்கம் பார்க்க]

### பரிசில் வழங்க அன்பளிப்புச் செய்தவர்கள

கே. நாகலிங்கம் ஜே. பி,
79, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

எஸ். அருணசலம்,
பண்டாரவளை.

ரி. விஷ்ணுசுந்தரம்,
வல்வெட்டித்துறை.

உரிமையாளர்,
மில்க்வைற்சோப்.

சகலவிதமான உங்கள் தேவைகளுக்கும்—

கெஸ்டெட்னரின்

★ பிரதி எடுக்கும் யந்திரம்
★ ஸ்டென்சில்கள்
★ மைகள்
★ பிரதி எடுக்கும் கடதாசி முதலியவை
★ தஸ்தாவேஜு பிரதிமைசெய்தல்
★ உறுதிகள், சான்றிதழ்கள் முதலியன

விற்பனையும், சேவையும்:

95/2, ஸ்டான்லிவீதி,
யாழ்ப்பாணம்.

கெஸ்டெட்னர் ஒவ் சிலோன் லிமிட்.,

தலைமைக் காரியாலயம்
''கெஸ்டெட்னர் இல்லம்''
190, வக்ஷோல் வீதி,
கொழும்பு-2.

கிளைகள்:
யாழ்ப்பாணம்-
95/2, ஸ்டான்லிவீதி.
மாத்தறை-
எஸ். கே. பிளாட்ஸ்,
புராட்டீ வீதி.
கண்டி-
14, டி. எஸ். சேனநாயக்க வீதி.

விஞ்ஞானக் கல்வி மேலும் ஓங்கி வளர
எங்கள் முழு ஆதரவும் தருவதில்
மகிழ்ச்சி அடைகின்ருேம்.

வசந்தா சேலே அச்சகம்
42, கல்லூரி வீதி, :: :: யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாடு - தமிழ்த்தினவிழா சிறப்பிதழ்

## வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் சாதனைகள்

— சு. சண்முகநாதன் —

[கௌரவ பொதுச் செயலாளர், வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம்]

கல்வி நூற்ருண்டு விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் வடமாநில கல்விப் பகுதியும், வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கமும் இணைந்து ஆகஸ்டு பதின்மூன்ரும் திகதிமுதல் பதினைந்தாந்திகதிவரை நடாத்தவிருக்கும் பெருவிழாவாம் ''கல்விப் பொருட்காட்சியும் விஞ்ஞான மகாநாடும்'' நிகழவிருக்கும் போது சங்கம் தனது இலட்சியங்களையும் சாதனைகளையும் சிறிது ஆராய்வது சாலவும் பொருத்தமுடையதொன்ருகும்.

பதினைந்து ஆட்டைப் பருவத்தை அடைந்துள வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம் (The Northern-Province Teachers Association) பொதுவாக ஈழத்திலும் சிறப்பாக வடமாகாணத்திலும் அறிவறிந்தோர் அனைவருக்கும் அறிமுகமாகாத தொன்றல்ல. இச் சங்கத்தின் யாப்புக்கூறும் இலட்சியங்கள்.

அ. பாடசாலைகளில் விஞ்ஞானப்படிப்பை ஊக்குவித்து அதன் தரத்தை உயர்த்துதல்.

ஆ. விஞ்ஞான ஆசிரியர்களிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துதல்.

இ. சுயமொழியில் விஞ்ஞானக்கட்டுரைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியன வெளியிடல்.

ஈ. விஞ்ஞானம் கற்பித்தல்பற்றிச் சுய மொழியில் வகுப்புக்கள் நடாத்துதல்.

உ. விஞ்ஞானக் கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூதலியனவற்றை ஒழுங்குசெய்து நடாத்தி விஞ்ஞானம் பயிலாத மாணவர்களிடையேயும், பொது மக்களிடையேயும் விஞ்ஞானத்தின் நயங்களை அறியச் செய்தல்.

இவ்வரிய இலட்சியங்கள் வரையறுக்கப்பட்டன அல்ல. ஒவ்வொன்றையும் ஆழ்ந்து ஆராய்ந்தால் அவற்றின் அளப்பரிய தன்மை புலனுகும். பல்கிக் கிளைத்த பல வழிகளில் விஞ்ஞான அறிவைத் தேடவும், அதனை வளர்க்கவும் அவ்வறிவைப் பிரயோகப்படுத்தவும் இவ் விலட்சியங்கள் திசை காட்டுகின்றன. இச்சங்கம் போன்று மேல் நாடுகளில் அமைந்துள சங்கங்கள் அந் நாடுகளின் விஞ்ஞான வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளில் ஒன்றென்பது கண்கூடு.

வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தனது இலட்சியங்களை அடைய எடுத்த முயற்சிகளும், அம் முயற்சிகளின் பெறுபேறுகளும் பெருமைக்கும் பாராட்டிற்கும் உரியன என்ருல் அது மிகையாகாது. சங்கத்தின் ஒவ்வொரு முயற்சியையும் விபரித்துக் கூறுவது இங்கு சாத்தியமன்று. சுருங்கக் கூறி விபரம் தெரிவிக்கும் நோக்குடன் எழுதுவதானுல் சங்கத்தின் செயல்களை இரு பெரும் பிரிவினுள் அடக்கிக் கூறலாம். ஒன்று ஆராய்ச்சிப்பகுதி. மற்றையது வகுப்பறைப் பாடத்திட்டப்பகுதி.

ஆராய்ச்சிப்பகுதியுள் முதன்மையாக விளங்குவது தொண்டமானுறு நீரியல்—உயிரியல் ஆய்வு. (Hydro-Biological survey of Thondamanar Lagoon). டாக்டர் A. C. J. வீரக்கூன் அவர்களின் எண்ணத் தூண்டலினுல் 1960-ம் ஆண்டு வடமாகாண விஞ்ஞான ஆசிரியசங்கம் இவ்வாராய்ச்சியை மேற்கொண்டது. ஆசிய ஸ்தாபனத்தின் சிறப்புமிகு உதவியுடன் இத்திட்டம் நன்கு செயற்பட்டு வருகின்றது. தொண்டமானுறு உப்பு நீர்த் தடுப்பு அணை கட்டப்பட்டபின் படிப்படியாக நீரின் உப்புத்தன்மை குறைகிறதா? அங்குள்ள தாவர விலங்கினங்களில் வியாபித்தத்தில் மாற்றம் ஏற்படுகின்றதா? மண்ணில் பௌதிக இரசாயன மாற்றங்கள் ஏற்படுத்தப் படுகின்றனவா? என்பன போன்றவைகளை ஆராய்ந்து அறிவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இது ஒரு பத்து வருடத் திட்டமாகும். 1963-ம் ஆண்டிலிருந்து

(14-ம் பக்கம் பார்க்க)

## சுயதேவைப் பூர்த்திக்கு நம்பிக்கை ஊட்டும் பொருட்காட்சி

### வடமாநில கல்விப் பொருட்காட்சியும் விஞ்ஞான மாநாடும்

— சி. தணிகாசலம் —

[வடமாநில கல்வி அதிபதி]

வடமாநிலக் கல்வித் திணைக்களத்தினரும் வடமாகாண விஞ்ஞான ஆசிரிய சங்கத்தினரும் நடாத்தும் மாபெரும் கல்விப் பொருட்காட்சி இம்மாதம் 13-ம், 14-ம், 15-ம் தேதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும், வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவிருக்கிறது. 13-ம்தேதியன்று 9 மணியளவில் சம்பிரதாய முறைப்படி காட்சி திறந்துவைக்கப்படும். 14-ம் தேதியன்று விஞ்ஞான மகாநாடொன்றும் நடைபெறவிருக்கிறது.

விஞ்ஞானப் பொருட்காட்சிகள், கைப்பணி, சித்திரப்பொருட்காட்சிகள், சரித்திர, பூமிசாஸ்திர, மனையியற் பொருட்காட்சிகள் முதலியன சில பாடசாலைகளிற் தனிப்பட்ட முறையிலும், வட்டார ரீதியிலும் காலத்துக்குக்காலம் நடைபெறுவதைநாம் அறிவோம். அன்றியும் வடமாகாணவிஞ்ஞான **ஆசிரிய சங்கம்** இருவருடங்களுக்கொரு முறை மிகச் சிறந்த முறையில் விஞ்ஞானப் பொருட்காட்சி ஒன்றையும் அத்துடன் விஞ்ஞான மகாநாடொன்றையும் நடாத்தி விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கு ஊக்கமளித்துவருவதுகல்வியுலகம் அறிந்ததேயாம்.

இவ்வாண்டில் எமது அரசாங்கம் கல்வித்துறையிலே பங்கெடுக்கத் தொடங்கி நூற்ருண்டுகள் பூர்த்தியாவதையொட்டி இலங்கையிற் சகல பாடசாலைகளிலும், சகல பாகங்களிலும் நூற்

(13-ம் பக்கம் பார்க்க)

## சிந்தனையும் செயலும் விஞ்ஞானமாக வேண்டும்

— த. புத்திரசிங்கம் —

[தலைவர், வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம்]

வடபிரதேச விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தினதும் வடபிரதேசக் கல்வித்திணைக்களத்தினதும் கூட்டுமுயற்சியால் ஏற்படுத்தப்பட்ட விஞ்ஞான சங்கத்திலும் கல்விப்பொருட் காட்சியிலும் டி ஆசிரியர்சங்கத்தின் தலைவர் என்ற முறையில் யான் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன். நமது அன்ருட வாழ்வில் பிரிக்கமுடியாத அளவில் விஞ்ஞானம் பின்னிப் பிணைந்துள்ளது, கல்விமேதாவிலாசமோ தொழில்நுட்பத்திறனே ஒரு சிலருக்கே உரிமையாகும் நிலை இனிமேல் என்றுமே ஏற்படப்போவதில்லை. அமெரிக்கா, ருஷியா, பிரித்தானியா, மேற்கு ஜெர்மனி, யப்பான்முதலிய நாடுகளில் விஞ்ஞான ஆராய்ச்சி வானளாவ வளர்ந்து பரந்துபட்டமையையும், அதேவேளையில் இலங்கையும் அதனைப்போல் வளர்ச்சியடையாத நாடுகளும் அவ்விஞ்ஞான ஆராய்ச்சியில் மிகவும் பின்தங்கியுள்ளன என்பதையும் நாம் நன்கு அறிவோம். இந்நிலையில், நாம் இன்றைய முற்போக்கான நாடுகளுடன் தோளோடு தோளிணைந்து வாழ்க்கையென்னும் பாதையில் முன்னேற வேண்டுமேயானுல் நமது சிந்தனை செயல் அத்தனையும் விஞ்ஞானமய மாகவேண்டும். அப்பல்லோ-11, ஆளில்லா விண்வெளிக்கலம் ஆகியவற்றின் துணைகொண்டு சந்திரனையும் செவ்வாய் முதலிய சேய்மைக் கிரகங்களையும் நுணுகியாராயும் இந்த விஞ்ஞானயுகத்தில் வாழும் நாம் எமது நாட்டிலே விவசாயத்தையும் கைத்தொழிலையும் விருத்தி செய்வதற்கு வேண்டிய விஞ்ஞான அறிவையும் அது சம்பந்தமான ஆராய்ச்சியையும் அதற்கு வேண்டிய தொழில்நுட்பத்தையும் மாத்திரம் மெல்ல மெல்லப் பெறுவதோடு திருப்தியடைந்து விடக்கூடாது.

ஆகவேதான், இக்கல்விப் பொருட்காட்சியை, விஞ்ஞானத்திலே ஆர்வங்கொள்ளச்செய்ய வல்லதொரு தூண்டுகோலாகவும் அறிவியல்துறையினை மறந்து ஆழ்ந்து உறங்கிக்கிடக்கும் உள்ளத்தினைத் தட்டியெழுப்பவல்லதொரு காலை முரசமாகவும் நாம் கருதுகின்ரேம். நம் நாட்டில் உயர்தரப் பள்ளிகளிலும் தொழில்நுட்பக்கல்லூரிகளி

(13ம்பக்கம் பார்க்க)

''யாழ். பிரான்ட்''

★ அலுமினியம்

★ பித்தளை

★ செம்பு

சாமான்கள் உற்பத்தியாளர்கள்

நிக்கல், குரோமியம், சில்வர் பாத்திரங்களுக்கு முலாம் பூசுவதில் முன்னணியில் நிற்போர்

குஹோட்டா—உழவுயந்திர கலப்பைகள் விநியோகஸ்தர்கள்.

யாழ். உலோகத் தொழிற்சாலை

250—254, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:

63, பாங்க்ஷால் வீதி, கொழும்பு—11.

டெலிபோன்: 26150.

வெள்ளியம்பதி

தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும்

★ தட்டை பைல்

★ றிங் பைல்

★ போல் பெயிண்ட்

★ றி(f)பில்

★ கட்டிவைக்கக்கூடிய பைல்-

கிளிப்பைல்-ஸ்பிருல் குறிப்புக் கொப்பி

காரியாலயமும், தொழிற்சாலையும்

அளவெட்டி :: இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் ——— அரசியல் நிருபர்

# ஹர்த்தால் நினைவும்

இன்று ஆகஸ்ட் 12.

சுதந்திர இலங்கையின் சரித்திரத்திலேயே முக்கியத்துவம் பெற்றுவிட்ட தினம் இது. இலங்கையின் சரித்திரத்திலே புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்திப் பின்னர் நாட்டில் நிகழ்ந்த சம்பவங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் முன்னோடியாக நின்று வழிகாட்டி வைத்த தினம் என்ற பெயரைப் பெற்றதும் இந்த ஆகஸ்ட் 12 தான்.

16 வருடங்களுக்கு முன் இதே தினத்தில் இன்று பிரதம மந்திரியாகவிருக்கும் திரு. டட்லி சேனநாயகா தான் பிரதம மந்திரியாக இருந்தார். அப்போதும் பொருளாதார நெருக்கடியும் அரிசித் தட்டுப்பாடும் ஏற்பட்டது. ஆனால் திரு! டட்லிக்கு இன்றுபோல் அன்று துணிச்சல் இருக்கவில்லை. அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டதும் பங்கீட்டரிசியைப் பாதியாகக் குறைத்து அதை இலவசமாக விநியோகித்து, உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தையும் ஆரம்பித்து தீவிரப்படுத்தி, அரசியல் எதிரிகளின் எதிர்ப்பிரசாரங்களுக்குப் பதிலளித்து நிலைமையை வெற்றிகரமாகச் சமாளித்து வடுகிறார் இன்றைய டட்லி.

ஆனால் அன்று அதாவது 16 வருடங்களுக்கு முன்பு உலக சந்தையில் அரிசி விலை அதிகரித்தபோது, கூடிய விலைக்கு அரிசியை வாங்கி குறைந்த விலைக்கு இங்கு விற்பது அரசாங்கத்தை வங்குரோத்து நிலைக்குக் கொண்டுவந்து விடுமென அஞ்சப்பட்டது. இந் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு வேறு வழியில்லையென்று கருதிய அன்றைய டட்லியின் அரசாங்கம் அரிசியின் விலையை அதிகரித்தது.

இதை அன்றைய எதிர்க்கட்சிகள் சரியாகப் பயன்படுத்திக்கொண்டன. அரிசி விலை உயர்வை எதிர்த்து 1953-ம்ஆண்டு ஆகஸ்ட் 12-ந் திகதி ஒருநாள் அடையாளவேலை நிறுத்தமும் கடையடைப்பும் செய்யும்படி அவைகள்வேண்டுகோள் விடுத்தன. அதாவது ஒரு நாள் ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வழமைபோல் அரசாங்கமும் 'நிலைமையைச் சமாளிப்

## தமிழர் நிலையும்

பதற்கு' சகல ஏற்பாடுகளும் செய்து 'எல்லாம் சீராக நடைபெறும்' என்று அறிவித்தது.

வேலை நிறுத்தம், ஹர்த்தால், கடையடைப்பு என்பது எப்போதும் அமைதியாக நடைபெறுவதில்லையே!

ஆகஸ்ட் 12-ந்திகதி ஹர்த்தாலும் கல்வீச்சு, தீவைப்பு, தண்டவாளத்தில் நாசவேலை, போக்குவரத்து வாகனங்களுக்குச் சேதம், பொலிஸ் தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம், துப்பாக்கிப்பிரயோகம் என்று கொழும்பு நகரமும் சுற்றுப்புற இடங்களிலும் அல்லாமல் நாடு முழுவதுமே அல்லோல கல்லோலப்பட்டது.

அவசரகால நிலையும் ஊரடங்கு உத்தரவும் அன்றே பிரகடனப்படுத்தப்பட்டன.

அன்றைய சம்பவத்தில் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் சில உயிர்கள் பலிவாங்கப்பட்டன. கண்ணீர்ப்புகையினால் தன் கண்கள் பழுதாகிவிட்டதாக காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா ஆட்சிமன்றத்தில் கண்ணீர்விட்டுக் கூறினார்.

அன்றைய சம்பவத்தைத் தொடர்ந்து அரசியலில் திரைமறைவில் பல நாடகங்கள் நடைபெற்றன.

திரு. டட்லி 'உடல்நிலை' காரணமாக பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்து அரசியலிலிருந்தே ஒதுங்கி வாழ்ந்தார்.

1953-ம் ஆண்டு ஆகஸ்ட் 12-ம் திகதிய அரிசி ஹர்த்தால் அவசரகால நிலையை (நாடு அரசியல் சுதந்திரம் பெற்ற பின்னர்) முதல் தடவையாகப் பிரகடனம் செய்யவைத்தது. அதன் பின்னர் பிரதம மந்திரிகளாக வந்த எவரும் ஆட்சி பீடத்தில் அமர்ந்த எவரும் ஒரு சில மாதங்களுக்காவது அவசர காலச் சட்டத்தின் பாதுகாப்பில் ஆட்சிநடத்தாமலில்லை.

அன்று ஆரம்பித்த கல்வீச்சு, தீவைப்பு, கொலை கொள்ளை பின்னர் 1956-ம் ஆண்டிலும் 1958-ம் ஆண்டிலும் வேறு உருவத்தில் தொடர் நிகழ்ச்சிகளாகின.

1953-ம் ஆண்டின் ஒரு நாள் வேலைநிறுத்தம் பின்னர் அரசாங்கங்கள் மாறிய பின்னரும் தொடர்நிகழ்ச்சிகளாக நடைபெற்றன. அந்த ஒருநாள் ஹர்த்தால்இதற்கு மட்டும் வழிகாட்டவில்லை. ஜனநாயக சோஷலிஸமே தங்கள் கொள்கையென்று முன்னர் 'சோஷலிஸம்' என்ற வார்த்தையை உச்சரிக்கக்கூட அஞ்சியவர்கள், அருவருப்புக் கொண்டவர்களையும் 'சோஷலிஸம்' பற்றிப் பேசவைத்து நாட்டைப் புதிய பாதைக்குத் திருப்பிவிட்டதும் அந்த ஹர்த்தால்தான். ஆனால் சோஷலிஸத்தில் சிங்களவர் சோஷலிஸம், இஸ்லாமியர் சோஷலிஸம், தமிழர் சோஷலிஸம் என்று ஏற்பட்டிருப்பதுதான் விந்தை!

இன்று ஹர்த்தால் நினைவு தினம் பல இடங்களிலும் கொண்டாடப்படவிருக்கிறது. அரிசிப் பிரச்னையைப் பற்றி அதாவது பங்கீட்டரிசி பாதியாகக் குறைக்கப்பட்டதுபற்றியும் உணவுற்பத்தி அதிகரித்திருப்பதாகப் பிரதமர் கூறுவது உண்மையானால் வெட்டப்பட்ட ஒரு கொத்து அரிசியை மீண்டும் ஏன் வழங்கக்கூடாது என்றும் பலர் இந்த ஹர்த்தால் நினைவுக் கூட்டங்களில் கேட்பார்கள்.

'ஆகஸ்ட் ஹர்த்தால் ஒரு பிரதமரைப் பதவியிலிருந்து இறக்கியது. அரசாங்கத்தில் மாறுதல் ஏற்படுத்தியது; அரசியலில் திருப்பத்தை உருவாக்கியது அடுத்த தேர்தல் நெருங்குவதால் இந்த ஹர்த்தால் நினைவு தினம் தேர்தல பிரசாரத்துக்கு நல்ல வாய்ப்பல்லவா?

அடுத்த பொதுத்தேர்தலிலும் தமது கட்சி வெற்றியீட்டுமென்றும் மீண்டும் ஐந்து வருட காலத்துக்குத் தமது தேசிய அரசாங்கமே ஆட்சி பீடத்திலிருக்குமென்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துவருகிறார். வெளிநாட்டுச் செய்திச் சேவை நிருபர் ஒருவருக்கு அளித்த பட்டியிலும் அவர் இதே

### பிரதமரின் நம்பிக்கை

நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார். இதற்குள் மந்திரிசபையில் மாறுதல் ஏற்படலாமென்றவதந்தியும் அமைச்சர் ஒருவர் கட்சிமாறக்கூடுமென்ற வதந்தியும் அடிபடத் தொடங்கியிருக்கிறது அரசியலில்எதுவும்நடைபெறலாம். யு. என். பி.யின் '21 இழந்த வாக்குறுதிகள்' என்ற அடிப்படையில் தேர்தல் பிரசாரத்துக்கு எதிர்க்கட்சிக் கூட்டணியினர் திட்டம்தீட்டித் தயாராகின்றனர். இந்த 21 இழந்தவாக்குறுதிகளில் தமிழரசுக் கட்சிக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் இடம்பெற்றிருக்காதென நம்பலாம். முன்னைய அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகள் பற்றி இன்றைய அரசாங்கமும் பட்டியல் தயாரிக்குமோ?

நமது நாட்டில் ஆட்சிபீடத்தில் அமரும் வாய்ப்புப் பெற்றிருப்பவை இரண்டு பெரிய கட்சிகள் தான். கடந்தகாலத்தைப்போலவே இன்னும் சில ஆண்டுகளுக்கு இதே நிலைதான் நீடிக்கும் என்று நிச்சயமாகச்சொல்லிவிடலாம். யு. என். பி. எனப்படும் ஐக்கியதேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்தான் இந்த இரு கட்சிகளும். இதர கட்சிகளுக்கு இந்த வாய்ப்பு இப்போதைக்கு இல்லை என்பது தெரிந்ததும் அவைகள் இந்த இரண்டு கட்சிகளில் ஏதாவது ஒன்றுடன் சேர்ந்துகொள்ளுகின்றன. டாக்டர் தகநாயகாவின் லங்கா பிரஜா சுதந்திரக்கட்சி, திரு. ஐ. எம். ஆர். ஏ. இரிய கொல்லயின் பாஷா பெரமுனை, திரு. பிலிப் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி, திரு. சி. பி. டி சில்வாவின் ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸ்ட்கட்சிஆகியவை யு. என். பி. யுடன் சேர்ந்து ''தேசிய அரசாங்கக்கட்சி'' யாக இன்று விளங்குகின்றன.

டாக்டர் என். எம். பெரேராவைத் தலைவராகக் கொண்ட லங்காசமசமாஜக் கட்சியும் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவைத் தலைவராகவும் திரு. பீட்டர் கெனமனைக் காரியதரிசியாகவும் கொண்ட இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் திருமதி சிறிமா பண்டாரநாயகாவைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து கூட்டணியாக விளங்குகின்றன. இவைதவிர சந்தர்ப்பம் பார்த்து எந்தப் பக்கத்திலும் சேரும் கே. எம். பி. ராஜரத்தினாவின்(இப்போது திருமதி குசுமா ராஜரத்தினாவின்) ஜாதிக விமுக்திப் பெரமுனவும் ஆட்சிமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கையற்ற கம்யூனிஸ்ட் (பீகிங் சார்பு) கட்சி, புரட்சிவாத சமசமாஜகட்சிகளும் இருக்கின்றன. எந்தப்பக்கமும்இப்போது வேண்டப்படாதவராகக் கருதப்படும் திரு. ஆர். ஜி. சேனநாயகாவின் சிங்கள மகாஜனகட்சியும் இருக்கிறது. இந்தக்கட்சி [16ம் பக்கம் பார்க்க]

# வினையும் பயிர்களின்

(2ம்பக்கத் தொடர்ச்சி)

மறக்குடிப்பிறந்தஒருமுதிய தாயானவள் முன்னொரு காலத்தில் போர்க்களஞ் சென்றபோது அங்கே தன் சிறுவன் தன் தந்தையையும் தமையன்மாரையும் போல வீரஉணர்வு மிக்கவனாகித் தன்னிலும்பன் மடங்கு வலிமையும் மறத்தன்மையும் பொருந்திய மதயானையோடு போர்செய்து அதனுடைய துதிக்கையைத் துண்டுபட வெட்டி வீழ்த்தினமையைக் கண்டாள். கண்டதும் அவனையறியாமலே அவள் நா அச்சிறுவன் செயலை வியந்து கூறியது. ''இன்னவிறலும் உளகொல் நமக்கு!'' எனச் சொல்லிச்சொல்லி அவள் வியந்தாளாம். அதுபோல நமது மனையிலே அஞ்சி அடங்கிநிற்கும் சிறுவர்கள்—அதுவேண்டும் இது வேண்டும் எனஅழுது அடம் பண்ணும் சிறுவர்கள் பெரியோர்பலர் முன்னிலையில் மேடையிலே தோன்றிப் பிரமிக்கத்தக்க வகையில் பேசுகின்ற அழகினையும், மெய்மறந்து பாராட்டத்தக்க வகையில் நடிக்கின்ற மேன்மையினையும் காணும்போது, பெற்றோர்களேயன்றி மற்றோர்களும் ''இன்னவிறலும் உளகொல் நமக்கு!'' என வியக்காமல் இருக்கமாட்டார். இத்தகைய வியப்பும் நயப்பும் வேறென்றால் எல்லார்க்கும் ஒரேதன்மையாக உண்டாதலும் இல்லை.

மாணவ சிறார்களது கல்வித்தேர்ச்சி ஆண்டுதோறும் அவர்கள் எய்தும் வகுப்பேற்றத்தைக்கொண்டு மாத்திரம் மதிப்பிடப்படுவதில்லை. கல்வியென்பது அறிவும் செய்கையும் என இரு திறத்தினால் வளர்வதும் வளம் பெறுவதுமாகையால் மாணவர்கள் நூல்கள் பலவற்றின் வாயிலாக நுண்ணிய அறிவைப் பெறுதலோடு, பெற்ற நூலறிவிற்கேற்ற செயற்றிறனும் உற்றார் என்னும்போதுதான் அம்மாணவச் சிறார்களது கல்விச்சிறப்பும் கலைச்சிறப்புங்கண்டு அவரைப்பெற்ற தாய்தந்தையரும் அவர்பிறந்த நாட்டினரும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைவர். நாடோறும் கற்கும் கல்வியின் தரம் ஆண்டுமுடிவிலே எய்தும் வகுப்பேற்றத்தின்மூலம் அறிய வாய்ப்பு ஏற்படுகின்றது. அவ்வாறு அவர்கள் பெற்ற கலைத்திறனே இத்தகைய ஒவ்வொரு சிறப்பு விழாக்கள் மூலமே நாட்டுமக்களனைவர்க்கும் மகிழ்ச்சியினையும் பெருமிதத்தினையும் அளிக்கின்றது.

இவ்வாறு மகிழ்ச்சியினையும் பெருமிதத்தினையும் வியந்து பாராட்டும் மேன்மையினையையும் எல்லோருக்கும் ஒருங்கு தரத்தக்கதாக அமைந்துள்ளது தமிழ்த் தினவிழா. கல்விநூற்றாண்டு வைபவத்தினைஒட்டி, கல்வியையே தமது கருமமாகவும் தருமமாகவும் கொண்ட பள்ளிச் சிறுவர்கள் அவற்றை அளிக்கவிருப்பதுமிக்க பொருத்தமும் திருத்தமுமானதே. சாதாரணமாகவே சிறுவர்களது திறமைகள் பெரியோர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உவப்பைத் தருவன. அத்தகைய சாதாரண சிறுவர்களது அன்றி அச்சிறுவர் பலருள்ளும் போட்டியிற் தெரிந்தெடுக்கப்பட்ட திறமைவாய்ந்த சிறுவர்களது கலைத் திறன்களே தமிழ்த்தினவிழாவில் இடம்பெறவிருக்கின்றன. அங்ஙனமாயின், அகில இலங்கையிலுள்ள தமிழ்ச் சிறார்களுள்ளும்தேர்ந்தெடுக்கப்பட்ட திறமை வாய்ந்த அச்சிறியவீரர் யார்யார்? அவ்வீரர்களது ஆற்றல்கள் தாம் எவ்வளவு அற்புதமாயிருக்குமோ? தமிழில் தழைத்து வளரும் பயிர்களான அந்தத் தனிப்பெரு வீரர்களின் சாதனைகளைக் காண வாய்ப்பளித்த கல்விநூற்றாண்டுவிழா வினைக் கைகூப்பி வணங்குவோம்.


பொகுமால்ஸ்

ஸ்தாபனத்தார் அளிக்கும்

**விசேட மலிவு விற்பனை**

மகத்தான ஆரம்பம்

13-8-69 முதல் 31-8-69 வரை

| | வ.வி | ம. வி. |
|---|---|---|
| டிப்ளோமற் ரெற்ரேன் கொட்டன் சேட் | 22-50 | 16-00 |
| ,, நைலோன் புஸ் சேட் | 20-00 | 13-00 |
| ,, லக்ஸதி டெரலின் சேட் | 29-50 | 19 00 |
| டியூரோ நைலோன் பிளேன் சேட் | 29-50 | 19-00 |
| ,, நைலோன் ஸ்ரைப் சேட் | 29-50 | 25-00 |
| ஸோடியக் நைலோன் புஸ் சேட் | 20-00 | 14 00 |
| ஸ்கைவே டெரலின் சேட் | 24-50 | 17-00 |
| காப்ஸ்டன் டெரலின் சேட் | 24-00 | 20-00 |
| மெட்ரோ டெரலின் சேட் | 24-00 | 20-00 |
| ஒக்ஸ்வோட் டெரலின் சேட் | 29-50 | 25-00 |
| ,, டெரலின் புஸ் சேட் | 22-00 | 16-00 |

முக்கியமாக சகலவிதமான சேட்டு வகைகளும் மிக, மிக குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எமது சேட் பார்வைப் பகுதியைப் பார்வையிட மறந்து விடாதீர்கள்.

எந்தநாளும் உங்கள் ஆதரவை நாடும்

பொகுமால்ஸ்

49, மெயின் வீதி :: :: யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் இரண்டாவது பரிசுபெற்ற இரு சிறு கதைகளில் இதுவொன்று.**

# ஆறுதற்பரிசு

அப்பச்சி

மகாலிங்கம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**மா**லை நேரம். ஐந்தரை மணிக்கு மேலே, ஆறு மணிக்கு உள்ளே. சாம்பசிவம் கந்தோரில் இருந்து வந்து சைக்கிளைச் சுவரில் சாத்திவிட்டுத் தன் மனைவியைக் கேட்ட முதல் கேள்வி ''குமாரசாமியெண்ட வள்ளல் வந்துவிட்டாரா'' என்பதுதான். அவள் பதில் சொல்லு முன்னர் பக்கத்து வீட்டில் இருந்து பதில் ''எங்கடை கதை ஒருத்தருக்கும் தேவையில்லை; அவையவை தங்கடை அலுவலைப் பார்க்கவேண்டும்.''

இது குமாரசாமி சொன்ன பதில் அல்ல. குமாரசாமியின் தர்மபத்தினி சொன்ன பதில். சாம்பசிவம் தன் மனைவியைப் பார்த்தார். 'களத்தில் இறங்கிப்போது' என்ற கருத்து. அவள் சொன்னாள், ''வாயை மூடிவைச்சுக்கொள்ளுங்கோ, இல்லாவிட்டால் சந்தி சிரிக்கும்படி கக்கிப்போடுவன் உங்களைப்பற்றி'' பாடசாலையில் படிக்கும்போது பேச்சுப் போட்டியில் பரிசு வாங்கியவள் சாம்பசிவத்தின் மனைவி. ஐந்து பிள்ளைகளுக்குத் தாயாகினாலும் இளமையிற் கற்ற வித்தையை அவள் மறக்கவில்லை.

குமாரசாமியின் மனைவி பார்த்துக்கொண்டிருப்பாளா? திருப்பிச் சுடச் சுடக் கொடுத்தாள். தம் மனைவிமார் சண்டைபோடுவதைக் குமாரசாமியும், சாம்பசிவமும் பார்த்துக்கொண்டிருந்தனர். இடையிடையே சில நல்ல 'பொயின்டு'களைத் தம் மனைவிமாரிடம் கொடுத்தனர் மேலும் மேலும் பேசும்படி.

''இந்த அநியாயம் எங்கையாவது நடக்குமா? பரிசு விழுந்தால் பாதி தருகிறேன் என்று சொல்லிக் காசு வாங்கி ரிக்கெட் வாங்கி, இப்ப என்னடாவெண்டால் நீயார் என்று கேட்கிறியள். நீங்க நல்லாயிருப்பியளோ'' சாம்பசிவத்தின் மனைவி கேட்டாள்.

இதற்குப் பதில் ஏதும் பேசாமல் திடீரென உள்ளே போனாள் குமாரசாமியின் மனைவி. தோற்றுப்போய்விட்டாளா? சாம்பசிவமும் அவர் மனைவியும். பிள்ளைகளும் பார்த்துக்கொண்டிருந்தனர். மறுபடியும் குமாரசாமியின் மனைவி தோற்றமளித்தாள் வேலிப்பக்கம். இப்போது அவள் கையில் ஒரு கடுதாசி இருந்தது. சுவீப் ரிக்கெட் 15 M 12012.

ஒற்றைக் கையில் ரிக்கெட்டை உயர்த்திப் பிடித்த தோற்றம் பாண்டியன் சபையில் ஒற்றைச் சிலம்புடன் கண்ணகியாகக் காலம் சென்ற பசுபுலேடி கண்ணம்பாள் நின்ற தோற்றத்தை ஞாபகப்படுத்தியது.

''எடியே, இதைப்பார்! இதுதான் ரிக்கெட் அவர் வாங்கினார்; அவருக்குப் பரிசு விழுந்தது. உங்களிட்டை ரிக்கெட் இருந்தால் நீங்களும் போய் வாங்குங்களன். எங்களோடை ஏன் தனகிறியள்.''

குமாரசாமியின் பத்தினி ஒரேயொரு முறை பாடசாலை நாடகம் ஒன்றில் சாமரை வீசும் பெண்ணாக வசனம் எதுவும் பேசாமல் வந்துபோன அனுபவம் ஒன்றுதான் பெற்றிருந்தாள். ஆனால் அவள் முகபாவம் பேசிய பேச்சின் அட்சர சுத்தம், தொனி எல்லாம் அவளை ஒரு பிறவி நடிகையாகக் காட்டின. இலங்கையில் யாராவது கண்ணகி படம் தயாரிப்பதானால் அந்தப் பாத்திரத்திற்கே உயிரூட்ட வல்லவள் குமாரசாமியின் பத்தினிதான் என்பதைத் தயவு செய்து ஞாபகம் வைக்கவேண்டும்.

சாட்சியில்லா நியாயம் தம்பக்கம் இருந்தாலும் சட்டப்படி குமாரசாமியின் பத்தினியின் நியாயம்தான் ஊரில் கொடிகட்டும் என்ற எண்ணம் சாம்பசிவத்திற்கும், அவர் மனைவிக்கும் உறைத்தது. ஆகவே எதிரியை மடக்கச் சில குறுக்கு வழிகளைக் கையாண்டாலென்ன என்று சாம்பசிவம் கருதி அந்தப் 'பொயின்டை' மனைவியிடம் சொல்ல அவள் அகமகிழ்ந்து யப்பான் மேல் அமெரிக்கா போட்ட ஒரு அணுக்குண்டைப்போல ஒரு வார்த்தைக் குண்டைப் போட்டாள்.

''ஆரெண்டு தெரியாது பள்ளிக்குப் போய்வந்த தங்கடை குமர்ப்பிள்ளையை இடையிலை படிப்பை நிறுத்தி வீட்டிலை வைச்சிருக்கிறது. ஊரில் தெரிந்த இரகசியம் இது. அப்பிடி ஆட்கள் இல்லை நாங்கள்'' சாம்பசிவத்தின் பத்தினி சொன்னாள்.

குமாரசாமியின் புதல்வி பத்தாம் வகுப்பில் படித்து வந்தபோது கடிதம் எழுதும் கலை இயல்பாகவே அவளுக்குக் கைவந்ததும், ஒரு வாலிபன் அவள் வீட்டுப் படலையடியில் வந்ததும், அடிக்கடி சைக்கிள் பழுதாகி ரிப்பேர் செய்யத் தொடங்கியதும், விஷயம் விபரீதமாக முன்னர் (அல்லது விபரீதம் ஏதோ நடந்துவிட்டதென்ற பயப்பிரமையினலோ) அவளைப் பாடசாலைக்குப் போக வேண்டாமென்று குமாரசாமி மறித்துவிட்டார். நொந்த இடம் அது. அதில் தைக்கும்படி சொல்லிவிட்டாள்.

குமாரசாமியின் மனைவி அடிபட்ட நாகம் போலச் சிலிர்த்தெழுந்தாள்.

''என்னடி சொன்னாய்? யாரைப் பார்த்தடி சொன்னாய்? உன்னுடைய தங்கச்சியைப்போல நாங்கள் ஊர் பேர் தெரியாத மாப்பிள்ளையைக் கூட்டிக்கொண்டு உலாவவில்லை'' பதில் குண்டுதான் என்றாலும் பலம் குறைவுதான். எனவேதான் குமாரசாமியின் மனைவியின் ஆத்திரம் அடங்கவில்லை. ''என்ன பார்த்துக்கொண்டு நிக்கிறியள் அவளின்ரை நாக்கையடக்காமல்'' என்றாள் புருஷனைப் பார்த்து. குமாரசாமி நிலைமை மோச நிலையைக் கடந்து மிக மோச நிலையை அடைவதை அறிந்து தங்கள் வலிமையை இனிவாய்ச் சொற்களால் நிலைநாட்ட முடியாதென்று போர்ப்பிரகடனம் செய்தார்.

''இனி யாராவது எங்கடை குடும்பக் கதைபற்றி ஒரு சொல்லுச் சொன்னால் ஆண்பெண்ணென்று பார்க்கமாட்டன். முழங்காலிற் சில்லு கழட்டிப்போடுவன்''

தன்னுடைய கணவன் நிராயுதபாணியாக நின்று போர்ப்பிரகடனஞ் செய்ததைக் கண்ட குமாரசாமியின் மனைவி உள்ளே சென்று யாழ்ப்பாண மக்களின் தேசிய ஆயுதமாகிய உலக்கையைக் கொண்டு வந்து கொடுத்தாள். அதைத் தன் வலக்கரத்தினால் பெற்றுக்கொண்டு நிலத்தில் இரண்டுதரம் குத்தித் தன் வல்லமையைக் காட்டினார். தீபாவளியன்று இறைச்சிக்குத் தூள் இடித்த உலக்கையாதலால் தட்டிய வேகத்தில் தூள் பறந்து குமாரசாமியின் கண்களிற் படலால் அவர் கண்ணெரிந்தது. கசக்கியமையால் கண் சிவந்தது. தன் கணவன் கோபத்தினால் விழி சிவந்து யுத்த சன்னத்தனாக நிற்பதாக அவர் மனைவி எண்ணி மிக ஆனந்தம் கொண்டாள்.

இத்தனை ஆயத்தங்களும் அமர்க்களங்களும் வேலிக்கு அப்பால் நிகழ்வதைக் கண்ட சாம்பசிவம் சிறிது அசந்து போனார். குமாரசாமி அடித்துப் போடுவானா? இனியும்தானும் படைக்கலந் தேடாமல் நிற்பது சரியல்லவென்று நினைத்தவேளை அவரது குறிப்பறிந்த அவரது அருமை மனைவி ஆயுதந்தேடப் புறப்பட்டு யாழ்ப்பாண மக்களின் மற்றொரு தேசிய ஆயுதமாகிய அலவாங்கைக் கொண்டு வந்து தன் பர்த்தா கையிற் கொடுத்தாள். போன தைரியம் திரும்பிவர, ''டேய் குமாரசாமி ஏலுமானாற் தொட்டுப்பாரடா?''

''கதைச்சால் தெரியும் சங்கதி'' என்றார் குமாரசாமி

''என்னடா செய்வாய்? கதைக்கப் போறன்'' என்றார் சாம்பசிவம்.

''நாரியிலை அடிச்சு முறிச்சுப்போடுவன். மரியாதையாய்ப் போம்காணும்'' என்றார் குமாரசாமி.

இருவருக்கும் வேலியைக் கடக்கப் பயம். எல்லை தாண்டிப்போய் அடித்தவன்கேஸ் கோர்ட்டிலே பலவீனப்படும் என்பது இருவரும் அறிந்த உண்மை. எனவே தயங்கினர். ஆனால் அவர்கள் மனைவிமார் விடவில்லை. தூண்டிக்கொண்டிருந்தனர்.

''நீ ஒரு அயோக்கியன்'' என்றார் சாம்பசிவம்.

''வாயைக்கழுவு. நீபெரிய நீதிமானே'' என்ற குமாரசாமி உலக்கையைத் தூக்கிக் காட்டினார்.

''எடே இது பயந்த கட்டையில்லையடா'' என்று அலவாங்கை ஓங்கினார் சாம்பசிவம்

போர் தொடங்கவேண்டியதாயிற்று.

இரவும் இல்லை பகலும் இல்லையென்று சொல்லப்படும் அந்திமாலைவேளையில், குமாரசாமியின் காணியா சாம்பசிவத்தின் காணியா என்று நிச்சயம் சொல்ல முடியாத வேலி எல்லையில் உலக்கையைத் தூக்கியபடி குமாரசாமியும், அலவாங்கைச் சுழற்றியபடி சாம்பசிவமும் மோதிக்கொண்டனர்.

அவர்கள் பத்தினிமார் சண்டையென்றால் என்ன இரத்தமென்றால் என்ன என்பதை நேர்முகமாகக் கண்டார்கள். இதுவரை சண்டையைக்கண்டது சினிமாப் படத்தில்தான். அதுவும் தமிழ்ச்சினிமாப் படத்தில் தான் படத்தில் வந்த சண்டையை ரசிக்க முடிந்தது. இது மகாகோரமாயிருந்தது. ''ஐயோ பாவி, என்ரை அவரை அடிக்கிறானே'' எனத் திருமதி குமாரசாமி கூக்குரலிட அவள் சொன்னதையே நான் சொல்வதா என வார்த்தைகளை மாற்றி ''என்ரை அவரைப் படுபாவி கொல்லுறானே'' என்று திருமதி சாம்பசிவம் ஒப்பாரி வைக்க இருபக்கத்துக் குழந்தைகளும் 'அப்பா, அப்பா' என்று ஓலமிடச் சண்டைநடைபெற்றது.

அருமையான வாய்ச்சண்டையைத் திறந்தவாய் மூடாமல் ரசித்துக்கொண்டிருந்த அந்த ஒழுங்கையைச் சேர்ந்த பெருமக்கள் (பெண்கள்தொகை கணிசமான அளவுகூட) அடிதடியைக் கண்டவுடன் சாட்சி சொல்ல வேண்டிவருமே என்று பயத்தால் வீடுநோக்கிச் செல்வாரும். விலக்குப்பிடிக்கச்செல்வாருமாய் இருந்தனர். வேலிப் பூவரசொன்றைப் பிடுங்கி தன்பெரிய வண்டியைஆட்டிக்கொண்டுநடுவே புகுந்த சுப்பையர் 'விடுங்கடா' என்று சொல்லி பூவரசந்தடியை வலமும் இடமும் ஆட்டிப் பந்தோபஸ்துச்சபையின் வேலையை மேற்கொண்டார்.

சண்டை நின்றது. குமாரசாமியும் சாம்பசிவமும் தரையில் கிடந்தனர். இரத்தம் பெருகி வேட்டியெல்லாம் இரத்தக்கறை. ''ஆராவதுபோய்க் கார்பிடிச்சு வாருங்கோ, பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வேண்டும்'' என்றார் சுப்பையர்.

கார்கள் வந்தன. ஒருகாரில் குமாரசாமியை ஏற்றினர். அவரது மனைவியும் மூத்தமகளும் சுப்பையரும் அதில் ஏறினர். மற்றக்காரில சாம்பசிவம் ஏற்றப்பட்டார். அவருக்குத் துணையாக அவர் மனைவியும் மகனும் ஏறினர். கார்கள் புறப்பட்டன. கார் புறப்படுவதற்கு முன்னர், திரும்தி குமாரசாமி தனது கலைந்த கூந்தலை முடிந்துகொண்டே ஒரு சபதம் செய்தாள். ''லொத்தரில் விழுந்தது எழுநூறும் செலவழிஞ்சாலும் செலவழியட்டும். என்ரை அவரைத் தொட்டபாவியை இரண்டு மாதமாவது மறியலுக்கு அனுப்பாவிட்டால் நான் ஆரெண்டுபார்ப்பம்''.

0 0 0 0

மற்றநாள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக் காயவார்ட் ... .... நேரம் பகல் 12-30 மணி. நோயாளரைப் பார்வையிட அனுமதியுள்ள காலம். பக்கத்து வீட்டுக்காரரான குமாரசாமியும் சாம்பசிவமும் பக்கத்துப்பக்கத்துக் கட்டிலில் கிடந்தார்கள். குமாரசாமிக்கு வலதுகாலிலும் தோள்மூட்டிலும் தலையிலும் காயம். சாம்பசிவத்திற்குத் தலையிலும் இரண்டு கால்களிலும் காயம். புதுமாப்பிள்ளைக்குத் தலைப்பாகை கட்டினது போல் தலையில் வெகுஅழகாகக் கட்டியிருந்தார்கள். ஆளைஆள் பார்க்காமல் கிடந்தார்கள்.

இருவரது பத்தினிமாரும் பிள்ளைகளும் உறவினரும் கட்டிலின் பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருக்கும் அவ்வேளையில் குமாரசாமியார் தனது மகள் வைத்திருந்த அன்றைய பத்திரிகையை வாங்கிப் படித்தார். ரொடீஷியாப்பிரச்னை, வாலிபன் கன்னத்தில் கன்னி அறைந்த விபரம்,. மனைவியின் தொல்லை தாங்காமல் கணவன் தற்கொலை செய்த சம்பவம் (அவன் புத்திசாலி) ஆகிய விஷயங்களைப் பார்த்துக்கொண்டு வந்த அவர் திடீரென நின்றார். விழியை உயர்த்தி எழுத்து எழுத்தாக அந்தச் செய்தியை இரண்டுமுறை படித்தார். அழுகை, சிரிப்பு, ஆத்திரம் எல்லாம் கலந்து வந்தன.

''மச்சான்'' என்றார் சாம்பசிவத்தைத் திரும்பிப் பார்த்து. சாம்பசிவம் திரும்பவில்லை. பெண்களுக்கோ ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. குமாரசாமிக்குப் பைத்தியமா? பரம எதிரியை உறவுசொல்லி அழைக்கிறாரே.

(6-ம் பக்கம் பார்க்க).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழநாடு 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் ஆறுதற் பரிசு பெற்ற நான்கு ஓரங்க நாடகங்களில் இதுவுமொன்று.**

# தாஜ்மகால்

## (''யாழினி'')

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### காட்சி—8

(ஷாஜகான் - ஆஸத்கான்)

ஷாஜ: சீ! வெட்கக்கேடு. சித்திரக்கலையில்செயலாற்றும் வல்லவர்கள் இத்தரணியில் எங்குமேயில்லையா? இன்பம் இன்பம் என்பதெல்லாம் ஏமாற்றத்தின் சாயல் தானு? என் காதல் மனைவி மும்தா ஜின் கல்லறைக்கு மாளிகை கட்ட மாதிரிப் படம் கொடுக்க இக்காசினியில் எவருமே இல்லையா வெட்கம்...வெட்கம்...வேதனை!

ஆஸப்: அரசே! வேதனை வேண்டாம். ஆஸப்கான் சோதனையொன்றில் வெற்றிபெற்றுவிட்டான். அரசரும் அதனுல் பெருமை கொள்ளப்போகிருர்!

ஷாஜ: இடிந்த என் உள்ளத்திற்கு வேதனை கொடுக்காமல் சுருக்கமாக உன் சோதனையைச் சொல்...ஆஸப்கான்!

ஆஸப்: ஆலம்பனுஹ்! அன்றே சொன்னேன், அந்த உஸ்தாத் ஈசாமுகமது என்ற சிற்ப சுயநலக்காரன், சுரண்டல்காரன், அயோக்கியன் என்று நீங்களோ என் வார்த்தைகளை நம்ப மறுத்து நானிலம் புகழும் சிற்பியெனச் சிந்தையில் மகுட மிட்டீர்கள். இன்றே நீங்கள் பேகம் சாகிபாவின் நினைவுச் சின்னமாக ஓர் அற்புதமான கட்டிடம் கட்ட உலகிலுள்ள சிற்பிகள், கலைஞர்களை நாட அந்த அயோக்கிய சிற்பி உஸ்தாத்தோ தன் அழகரசி நஸீமுக்கு மணிமாடம் கட்டக் களிமண்ணிலே மாதிரி செய்து மலர் போல மணந்து கொண்டு மகிழ்ச்சியிலே திளைக்கிருன். இங்கே நீங்கள் தவிப்பிலே துவழுகிறீர்கள். பேகம் சாகிபா தாஜ்மகாலின் பெயர் உலகில் நிலைத்து நிற்க விருப்பமில்லையாம். தன் காதலிக்குக் கட்டப் போகிருனும் காதல் மாளிகை! மடையன், மண்ணைக் கவ்வும் ஆசையில் என்னேடு போட்டிபோட்டுவிட்டான். பரவாயில்லை! நீங்கள் எழுப்பும் மாளிகை உருவம் அவனிடம் இருந்ததால் சும்மா வந்தேன். இல்லையேல் அவன் பிணத்தைத்தான் சுமந்து வந்திருப்பேன்.

ஷாஜ: ஆஸாத்! உடனடியாக உஸ்தாத்தையும், மாளிகை மாதிரியையும் ஒரு நிமிடத்தில் கொண்டுவா!

ஆஸப்: பழிக்குப் பழி! சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி! வெற்றிக்கு வெற்றி வருகிறேன்!

(திரை)

### காட்சி—9

(நஸீம் வீடு, ஆஸத்கான் வரல்.)

உஸ்தாத்: வருக! வருக!! தளபதி அவர்களே வருக!!! தங்கள் வரவு எங்கள் இல்லத்துக்கு நல்வரவாகட்டும்.

ஆஸத்: ஆம்... நல்வரவாகட்டும்! ஹ...ஹா...ஹா... நயவஞ்சகப்புலியே! நாட்டுமன்னர் துன்பத்தால் துடிக்க நீயோ நஸீமுக்கு மாளிகை கட்ட மாதிரியமைக்கிருய்! அப்படித்தானே!

உஸ்தாத்: நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லை. விபரமாகச் சொல்லுங்கள்.

ஆஸப்: அதோ நீ ஆக்கி வைத்திருக்கும் மாளிகை அமைப்பை அரசர் வாங்கிவரும்படி ஆணையிட்டுள்ளார். தட்டாமல் கொடுத்துவிடு மாளிகையை!

உஸ்தாத்: யார் யாருக்குக் கொடுக்க வேண்டும். ஆஸாத் ஆடக்கமாகப் பேசு. அது என் மனைவிக்குப் பரிசாக நான் கட்டப்போகும் மாளிகை! இது என் சொந்த முயற்சி. குறுக்கிடாமல் போய்விடு.

ஆஸப்; அந்நிய நாட்டிற்குதவாது. நம் அரசனுல் வளர்ந்திருக்கும் அனுதைக்கு ஒரு உழி வேறு! சிற்பியென்ற ஒரு பட்டம்...மறுத்தால் மாளிகையை நான் கொண்டு செல்கிறேன்! மற்றதை மன்னனிடம் வந்து புலம்படாமடையா!

உஸ்தாத்: ஆஸப்...இது அநீதி... என் மாளிகையில் உன் கைபட்டாலே களங்கமாகிவிடும். தொடாதே!

ஆஸப்: தொடுகிறேன்! உன்னை இந்தச் சவுக்கால் தொட்டுத் துடியாய்த் துடித்து இறக்கச்செய்கிறேனடா! அனுதைச் சிற்பிக்கு ஆத்திரம் வேறு வருகிறதோ!

நஸீம்: ஆஸாப் இராசாங்க பாதுகாவலனுன நீ தனிமனிதனின் சுயஉரிமையிற் குறுக்கிடுவதை கடவுள் கூடப் பொறுக்கமாட்டார். அவரை அடிக்காதே...விட்டு விடு...

ஆஸப்: பழிக்குப்பழி!...நஸீம் உன் கணவன் என் அடிபட்டு அணுவணுவாய்ச் சாகவேண்டும். அதை நான் பார்த்துச் சிரிக்கவேண்டும்! நீயோ துடித்துத் துடித்துக்கதறவேண்டும். பாரசீகம் பெற்றெடுத்த சிற்பியே உன் பதமான உடலுக்கு இந்தச் சவுக்கு காணுதடா!...ஹ...ஹ...ஹா...!

(அப்பொழுது ஷாஜஹான் வரல்)

ஷாஜ: ஆஸப்கான் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிருய்? ஆகா! அருமையான மாளிகை அற்புதமான சிருஷ்டி! உஸ்தாத் உன்னை நான் மறந்தேன்! ஆனுல் நீ மட்டும் என்னை மறக்கவில்லை. என் அன்பு மனைவிக்கு ஏற்ற அழகு மாளிகையை ஆக்கி வைத்திருக்கின்ருய்! உன்னை நான் எப்படிப் பாராட்டுவது. அற்புதமான கலாசிருஷ்டி. பலநாடுகளிலிருந்து கட்டட மாதிரிகள் வந்து குவிந்து கிடக்கின்றன. அவைகளில் எதுவுமே உன் சிருஷ்டிக்கு ஈடாகமாட்டாது! உஸ்தாத் உடனே நீ இதை உருவாக்கித்தரவேண்டும். நாளைக்கே வேலையைத் தொடங்கு! ...ஆஸாப் ... மாளிகை மாதிரியை எடுத்துவா!

ஆஸப்: கட்டளை!

### காட்சி—10

நஸீம்: உஸ்தாத், கட்டும் மாளிகை இன்பத்தில் ஒளியைச் சிந்துகிறதாம்! இணையற்ற எழிலாய்ப் பிரகாசிக்குதாம். ஆறு வருடங்களில் மாளிகையின் அரைவாசி கட்டிமுடிக்கமுன்னமே போட்டி, பொருமை, பூசல் கிளம்பிவிட்டன. மிகுதிக்கட்டடம் முடிக்குமுன் அவரையே இந்த ஆக்ரா மனிதர்கள் விழுங்கி விடுவார்கள் போல் தெரிகிறதே! யாரோ பக்கிரி மாளிகை மகிழ்வின் உணர்வைப் பிரதிபலிக்கின்றதெனச் சொல்ல அந்த யிட்டு அரசர் அவரைப் பேட்டியின் போது [illegible] தூற்றலாமா?...

உஸ்தாத்: நஸீம்! நான் இன்பமாக வாழ்வது ஷாஜஹான்ஷாவுக்குப் பிடிக்கவில்லை; பொறுக்கவுமில்லை! வேதனை, துக்கம், கஷ்டம் என்ருல் எப்படி இருக்குமென்பதை நான் அனுபவித்து உணர்ந்தால்தான் தன் மாளிகையும் பூரணசோபை பெறுமாம்!

நஸீம்: மகிழ்வின் உச்சியில் ஓடோடி ஊஞ்சலாடும் நாம் மன்னரின் கருத்தில் உண்மையிருப்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்!

உஸ்தாத்: என்ன உண்மையிருக்கிறது? இதற்காகத் தானே ஆதியிலேயே இந்த அற்புத மாளிகையை ஷாஜஹான்ஷாவின் அரசிக்கு அர்ப்பணிக்காமல் என் ஆசை மனைவிக்கு அன்புப்பரிசாய் அளிக்கப்போகிறேன் என்று துடித்தேன்! இன்று அந்த அன்புப்பரிசு துன்பப்பரிசாய் மாறவேண்டுமாம்! இதற்கு நான் என்ன செய்வது... நஸீம்...நஸீம்...ஏன் தயக்கம்.

(நஸீம் மயங்கி விழல்)

உஸ்தாத்: காதல் ஓவியமே! நஸீம்... உன் பவளம் சிந்தும் பட்டுடல் ஏன் இப்படிக் கறுத்து இளைத்து வெளுத்துவிட்டது. உனக்கு என்ன நடந்து விட்டது? என் நெஞ்சையெல்லாம் வேகவைத்து என்னை ஏமாற்றி விடாதே! இதோ வைத்தியரை அழைத்து வருகிறேன்.

(போய் வைத்தியருடன் வருதல்)

(வைத்தியர் பரிசோதனை செய்துவிட்டு)

வைத்தியர் ஷெரிபூ: உஸ்தாத் உன் மனைவிக்குத் திடீர் அதிர்ச்சியால் இரத்தம் நீராகிவிட்டது. நாள் படக்குணமாகிவிடும். அதிர்ச்சியான செய்திகளை அவள் காதில் விழவிடாதே! இதோ இந்த மாத்திரையை மூன்று நேரம் கொடு!...

(வைத்தியர் போகிருர்)

(தொடரும்)

---

# ஆறுதற் பரிசு

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

''மச்சான் சாம்பசிவம், பெரிய கோவம் வந்துவிட்டுது. உனக்கு என்ன? இந்தப் பேப்பரைப்பார்'' பேப்பரைத் தன் பிள்ளையிடம் கொடுத்துவிடச் சாம்பசிவமும் ஆச்சரியம் தாங்காமல் பேப்பரை வாங்கினுர்.

''இரண்டாம் பக்கத்திலை மேலைபார்'' என்ருர் குமாரசாமி. சாம்பசிவம் பார்த்தார். அதில் இருந்த செய்தி இது;

''சுவீப் முடிவுகள் — ஒருதிருத்தம்

நேற்று எமது பத்திரிகையில் வெளியாகிய சுவீப் முடிவுகளில் ஒருதவறு நேர்ந்ததற்கு வருந்துகிறேம். ஆறுதற்பரிசுபெற்ற ரிக்கெட் நம்பர்களில் ஒன்று 15 M 12012 என்று வெளியாகியிருந்தது. அதுதவறு, அந்த ரிக்கெட் நம்பர் 15 M 13012 என்பதாகும்''.

முதலில் தனக்குள் வாசித்த சாம்பசிவம் இரண்டாம்முறை சகலரும் அறிய உரக்க வாசித்துவிட்டுச் சிரித்தார் வேதனையுடன். பெண்களின் முகத்தைப் பார்க்க முடியவில்லை.

''விழாத பரிசுக்காக அடிபட்டோம். மச்சான் ஆஸ்பத்திரிச் செலவோடை போகட்டும் கோட்டடிக்குப் போய் வேப்பமரத்தின் கீழையிருந்து மேலும் செலவு வேண்டாம். நீ என்னசொல்லுருய். காயம் உனக்குப் பலமோ'' என்று கேட்டார் குமாரசாமி.

சாம்பசிவம் பேசவில்லை. அவரது காயம் வலித்தது, வேதனையோடு சிரித்துத் தலையாட்டினுர்.

(முற்றும்)

---

விகட கவிதைப் போட்டிக்கு வந்த கவிதைகளில் சில:

### வேலை தேடும் பட்டதாரிகள்

கொழும்புநகர்
சென்றிடுவார்.
'இன்ரவியூ' என்றிடுவார்
'இன்ரவியூ' முடிந்து
விட்டால் 'இன்வுளுவன்ஸ்'
என்றிடுவார்
வேலை கிடையா
ஏக்கத்திலை உண்ணு
விரதம் இருக்கப்போவார்
என்ன செய்தும் என்ன
பயன், பரிதாபத்திற்கிட
மான நிலை
பெயரின் பின்னுற்
பட்டத்தினைச் சுமந்த
தனுல் ஐயகோ!
அவர்களுடையும்
துயர்தான் என்னே!!

-சரோஜா சொக்கலிங்கம்
ஏழாலை மேற்கு,
சுன்னுகம்.

வீட்டினிலே கூப்பன்
மாவுக்கு வைத்திருக்கும்
காசை
ஆச்சியிடத்திலே அழுது
மன்ருடி வாங்கி, எழுதி
ஏட்டினிலே எல்லாக்
கந்தோர்களுக்கும் மனுப்
போடுதலே வேலை தேடி
யலைந்து திரியும்
பட்டதாரிகளின்
முடிவேயில்லாச் சோகக்
கதை இதுவேயாகும்.

—ச. சாரதா
மே/பா தங்கசாமி குருக்கள்,
கோப்பாய் வடக்கு.

கட்டிளங் காளையரைக்
கட்டிட வேண்டு
மென்பார்
பொட்டிடும் பாவையரைப்
பொருந்திட வேண்டு
மென்பார்
நாற்காலி உத்தியோகம்
நாணுது நாடுவார்
நாஷனல் சேவிசென்பார்
நானூறு சம்பள
மென்பார்
நாற்பது பக்ரறிப்
படியேறும் பட்டதாரிகள்.

—ச. மரகதவல்லி.
'லிங்கவாசம்',
திருநெல்வேலி.

---


## தம்பி அன் கோ.,

284, K. K. S. ரேட், வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 8 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 9 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |
| ரூ. 10,000/-க்கு மேல் | — | வருடம் 12 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

வட்டி ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் தயாரான 'வெண்சங்கு' விரைவில் திரைக்கு வருகிறது!



'வெண்சங்கு' கதாநாயகி குமாரி ராஜம்!

ஈழத்தில் தயாரிக்கப்பட்டு விரைவில் திரைகளுக்கு வரவிருக்கும் தம்புவின் 'வெண்சங்கு' சமீபத்தில் பத்திரிகையாளர்களுக்கும், கலை சம்பந்தப்பட்டவர்களுக்கும் போட்டுக் காண்பிக்கப்பட்டது. தரமான நல்ல தமிழ்ப்படங்களை இங்கும் எடுக்கமுடியும் என்ற நம்பிக்கையை நூற்றுக்குநூறு வீதம் '...ங்கு' நிரூபித்துவிட்டது!

அற்புதமாகப் படத்தைப் பிடித்திருக்கிறார்கள் நடிகர்கள் தெரிவுகூட அறுபதுவீதம் சரியாகவே நடந்திருக்கிறது என்று சொல்லலாம்.

இந்தப் படத்தின் கதாநாயகியாக நடிக்கும் குமாரி ராஜம் என்ற ராஜாமணி தமிழகப்படங்களின்கதாநாயகிகளுக்குச் சோடைபோகாமல், பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். நூற்றுக்கணக்கான நாடக மேடைகளில் நடித்த அனுபவ முத்திரையை இவரது நடிப்பில் காணமுடிகிறது. தம்பு அவர்கள் குமாரி ராஜத்தைத் தகுந்தபடி பயன்படுத்தியிருக்கிறார்கள்!


'வெண்சங்கு' இலங்கையில் திரையிடப்படவிருக்கும் அதேசமயத்தில், தமிழ்நாடு, மலேஷியா ஆகிய நாடுகளிலும் திரையிடுவதற்கு ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாக செய்திகள் அடிபடுகின்றன.

இந்தப்படத்தின் வெற்றிக்கு காரணமாக அமையப் போவது தம்பு அவர்களின் ஆற்றலும் நெடுங்கால அனுபவமுமே என்று சொன்னால் மிகையாகாது. இனங்கண்டு ஆளை வலை போட்டு, தன்பக்கம் இழுத்துக்கொள்வதில் தம்புவுக்கு நிகர் தம்புதான்! 'வெண்சங்கு'வுக்குபொது ஜன உத்தியோகத்தராக (விளம்பரம்) கலையுலகத்தைக் கரைத்துக்குடித்த 'மானா' என்ற இளைஞரை சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். 'புதுமை' செய்யும் இவர் நிச்சயம் படத்தின் வெற்றிக்கும் ஏதாவது புதுமை செய்வாரென எதிர்பார்க்கலாம்!

ஈழத்து தமிழ் திரைப் படக்கலையில் மறக்க முடியாதவரான ரகுநாதனின் 'நிர்மலா'வுக்குப் பிறகு வெளிவரவிருக்கும் 'வெண்சங்கு'வைப் பார்ப்பவர்களுக்குத் தமிழகப் படமொன்றைப்பார்க்கும் உணர்வு ஏற்படும் என்பதை முன் கூட்டியே சொல்லிவைக்கிறோம்.

—பாமா.

## 'ஜெய்' ஈழம் வருகிறார்!



சமீபத்தில் கல்லூரிமாணவியான கீதாவைதிருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கைக்குள் மூழ்கியிருக்கும் தமிழக 'ஜேம்ஸ் பாண்ட்' ஜெய்சங்கர் விரைவில் மனைவி சகிதமாக இலங்கை வரவிருக்கிறார் என்ற செய்தி நமக்குக் கிடைத்துள்ளது. இவ்வருட இறுதிக்குள், அவர் இங்கு தனிப்பட்ட, தன் நெருங்கிய நண்பர் ஒருவரின் அழைப்பை ஏற்று இலங்கை வருவார் என அச்செய்தி கூறுகிறது.

நாடக விமர்சனம்:

## 'ஒருத்தி சொன்னாள்'

# அர்த்தமில்லாத கதைகளை நாடகமாக்கி ரசிகர்களை பொறுமையிழக்க செய்கிறார்கள்!

அமரர் அண்ணா ஞாபகார்த்த விழாவை முன்னிட்டு பாக்கியலட்சுமி கலை மன்றத்தினர் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 'ஒருத்தி சொன்னாள்' என்ற சமூக நாடகத்தை மேடையேற்றினர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வெள்ளைத் துரைகளாலும் முதலாளிகளாலும் சுரண்டப்பட்டு நாடு கடத்தப்படுவதாகவும் அவர்களது வாழ்க்கைப் பிரச்னைகளைச் சித்தரிப்பதாகவும் நாடகத்தின் கதை அமைந்திருந்தது. இதை வெகு உன்னிப்பாகக் கவனித்தபோதுதான் கதை ஓரளவேனும் புலப்பட்டது. மேலோட்டமாக இந்நாடகத்தைப் பார்த்த எவருக்குமே கதைத்தெளிவு ஏற்படவில்லை. காட்சிகளுக்குப் பொருத்தமாகக் கதை பின்னப்படவேயில்லை. இது நாடகத்தின் மிகப்பெரிய குறையாகும்.

வீரமும், துடிப்பும் அதே வேளைகளில் தீய செயல்களும் மிக்க இலங்கையனாக 'சங்கானைச் சோமு' நடிக்கிறார். இவர் மிக விறுவிறுப்பான நடிகராக மேடையில் உலாவினார். ஆனால் அடிக்கடி ''ஹூம்... ம் ...ம் ...'' என்று உறுமிக்கொண்டே இருந்தார். இந்த உறுமலை அவர் சில இடங்களில் தவிர்த்திருக்கலாம். என்றாலும் இவரது பாத்திரம் பலரைக் கவர்ந்துவிட்டது. இலங்கையனின் தளபதி பொன்னையிரமாக வரும் ப. முத்தையா மிடுக்காகத் தோன்றி எடுப்பாக நடித்தார். வேலைக்காரன் துரையாக வீ. ஏ புரட்சிமணி தோன்றி மிகமிக இயல்பாக நடித்தார். அசல் வெகுளியாகவே தோன்றினார். இவருக்கு ஜோடி சேர்ந்து மேகலையாக வந்த லீலாரஞ்சனி மிகவும் சுறுசுறுப்பாகப் பாத்திரமுணர்ந்து நடித்தார். மணியரசனாக வந்த எம். ஆர். ராஜா பரவாயில்லை.

இளங்கோவாக கே. ஏ. ஜவாகர், தமிழ்வாணனாக ரி. வி. ஸ்ரீநிவாசன், குணசீலனாக ரி. எம். எஸ் றகீம், வீரப்பனாக பி. இராமலிங்கம் ஆகியோர் நடித்தனர். இவர்களில் பலர் மேடை வசனங்கள் பேசி நாடக இயல்பையே பொருத்தமில்லாமல் செய்தனர். இவர்களுக்கு இராஜ நாடகங்கள் ஒருவேளை பொருத்தமாக இருக்கலாம்.


சாந்தியாக பி. ஆர். விஜயா, மாலினியாக பி. ரி. அமுதா, பாவாக பி. எம். ஜெயா ஆகியோர் தோன்றினார்கள். இவர்களது நடிப்பும் பரவாயில்லை.

வீ. ஏ. புரட்சிமணிதான் இந்த நாடகத்தை டைரக்ட் செய்திருந்தார், ஒரு நல்ல கதையைத் தேர்ந்தெடுத்து இவர் டைரக்ட் செய்திருக்கலாம். ஏராளமான பணத்தைப் போட்டு அர்த்தமில்லாத கதைகளை நாடகமாக்கி ரசிகர்களைப் பொறுமையிழக்கச் செய்வதைவிட நல்லதோர் கருத்தைப் பின்னணியாக வைத்து நாடகம் எழுதியிருக்கலாம்.

இதே ரீதியில் போனால் ஈழத்தில் நல்ல நாடகாசிரியர்களே கிடையாதா என்ற சந்தேகம் வலுக்கும். எந்த வகை நாடகம். என்றாலும் கதையில் ரசிகர்களுக்குத் தெளிவை ஏற்படுத்த வேண்டும்.

மொத்தத்தில் நாடகத்தின் தயாரிப்பாளரான 'சங்கானைச் சோமு'வின் ஆர்வத்தைப் பாராட்ட வேண்டும். அவர் தமது ஆர்வத்தை இனிமேல் நல்ல சமூகக் கதைகளைத் தெரிந்து அவற்றை மேடையேற்றுவதில் காட்டவேண்டும்.

—க. பேர...



## எம். ஜி. ஆரும் நம்மவரும்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆரை அவர் மீதும் அபிமானமும், அன்பும், மதிப்பும் கொண்ட அவரது ரசிகர் சுந்தரலிங்கம் (யாழ். எம். ஜி. ஆர்.) அவர் இல்லத்தில் சந்தித்து நீண்டநேரம் உரையாடினார். தன் மீது அன்பு கொண்ட தன் ரசிகரை அன்புடன் வரவேற்று சிரித்துச்சிரித்து மனம்விட்டு பழகினாராம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்து நதியின்மிசை நிலவி

## பழந் தமிழர் வாழ்வை எண்ணி புதுமைக்கவி சமைத்தான் பாரதி

ஹெராஸ் அடிகள் சிந்து சமவெளி கல்வெட்டு எழுத்துக்களை ஆராய்ந்து தொகுத்த சொற்றொடர்களைத் தமிழ்ப்படுத்தியபோது அதில் பல சங்க காலத் தமிழ்ச்சொற்களை ஞானப் பிரகாசர் அடிகள் கண்டுபிடித்தார்.

சிந்துநதி சமவெளி நாகரிகம்பற்றிய புதிய கண்டுபிடிப்புகள்பற்றிய தகவல்களைச் சேகரித்து இக்கட்டுரையை எழுதியவர் —'பேனு'.

''சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன் நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்தே
தோணிகள் ஓட்டி விளையாடிவருவோம்''

இளந்தமிழ் நெஞ்சங்களின் எதிர்கால இன்பக் கனவுகளை மகாகவி பாரதியார் இவ்வாறு உணர்ச்சி பொங்க பாடி மகிழ்ந்திருக்கிறார் என்று எண்ணிக் கொண்டிருந்த நமக்கு இன்னுமொரு உண்மையையும் பாரதியார் சுட்டிக்காட்டியிருப்பது இப்பொழுது புலனாகின்றது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இதே சிந்து நதியின் தீரத்திலே நம் மூதாதையரான தமிழ் இளம் காதலர்கள் தோணிகள் ஓட்டி உல்லாசமாக ஆடிப்பாடி மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதே அந்த உண்மை. சிந்து நதியின் சமவெளிகளிலே மிகவும் சிறந்ததோர் நாகரீக சமுதாயமாக வாழ்ந்து மறைந்த அன்றைய மக்கள், இன்றைய தமிழர்களின் மூதாதையர்தான் என்று அறியும்போது உள்ளம் பூரிக்கத்தான் செய்கின்றது. சிந்து நதியின் செல்வக் குழந்தைகளாக அவர்கள் அதன் மடியில் தவழ்ந்து விளையாடி மகிழ்ந்திருந்த பெற்றியை எண்ணித்தான் போலும் 'அந்தநாளும் வந்திடாதோ' என்ற பாணியில் பாரதி சிந்துநதியின்மிசை நிலவினிலே' என்று பாடிமகிழ்ந்திருக்கிறான் என்று எண்ணத் தோன்றுகின்றது.

### தமிழர் தாம்

'சிந்து நதியின் சமவெளிகளிலே வாழ்ந்து மறைந்த தொல்குடிகள் தமிழர்கள் தாம், (திராவிடர்) என்ற கருத்தை சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் மு. ஆரோக்கியசாமி வலியுறுத்தி கூறிவருகின்றார்.

''சிந்து சமவெளி நாகரீகத்தைக் கொண்டே நாம் பழங்காலத் தமிழர் நாகரீகத்தை நன்கு அறிய முடியும். பாண்டியன் சின்னம் மீன் என்பதை நாம் அறிவோம். இதையே அரசுச் சின்னமாக சிந்துவெளிக் கல்வெட்டுக்களும் காட்டுகின்றன. தமிழ்மொழி உலக மொழிகளில் மிகப் பழமையானது. இதுவும் சிந்துவெளி நாகரீகத்தோடு நம்மைக் கலக்கின்றது. சிந்து சமவெளி நாகரீக காலத்தில் தமிழ் இல்லையென்றாலும் தமிழ் ஒலிகள் இருந்தன. கி. மு. 500 ல் தொல்காப்பியம் பிறந்ததென்றால் கி.மு. 1000 த்திலாவது தமிழ்பிறந்திருக்கவேண்டும். இதற்கும் சிந்துவெளி மொழிககும் தொடர்பு உண்டு என்று கூறுவதில் வியப்பில்லை. இதேகாலத்தில்தான் திரமிலி என்ற பெயரால் ஆசியா மைனர் பிரதேசத்திலிருந்த திராவிடர் அழைக்கப்பட்டனர் என்று நாம் அறிகின்றோம். தமிழ்-திரமிலி திரமிளர் - திராவிடர் என்று இப்பெயர் பிறந்திருக்கவேண்டும்'' என்கிறார் பேராசிரியர் ஆரோக்கியசாமி.

பேனு

### தமிழ்ச் சொற்கள்

இவர் கூற்றை உறுதிப்படுத்துவதாக அறிஞர் ஹெராஸ் அடிகளின் கண்டுபிடிப்புகள் அமைந்துள்ளன. சிந்துவெளி நாகரீகத்தை விளக்குபவையாகக் கருதப்படும் சுமார் 1,800 எழுத்துப் படிவங்களை ஹெராஸ் அடிகள் ஏறத்தாழ 18 ஆண்டுகள் துருவித் துருவி ஆராய்ந்தார். இந்த ஆராய்ச்சியின் பயனாக அவர் அநேகமாக பல எழுத்துக் குறியீடுகளின் இரகசியங்களைக் கண்டுபிடித்தார். இந்த எழுத்துப்படிவங்களில் சங்க காலத் தமிழ்ச் சொற்களையொத்த ஏராளமானதமிழ்ச் சொற் பிரயோகங்களை அவர்கண்டுபிடித்தார். அறிஞர் ஹெராஸ் அடிகள் நடத்திய ஆராய்ச்சிகளின் போது திராவிட மொழி இயல் பகுதியில் தமிழ் மொழித்துறையில் ஈழத்தைச் சேர்ந்த வண. ஞானப் பிரகாசர் உதவியாய் இருந்தார். ஹெராஸ் அடிகளின் கண்டுபிடிப்புகளில் இருபத்தைந்து செய்யுள் வரிகள் காணப்பட்டன. இவைகளில் ஐந்து தமிழ்மறையான திருக்குறள் 'யாப்பு' முறையில் அமைந்திருப்பதாக ஞானப்பிரகாசர் அடிகள் கண்டுபிடித்தார்.

மேலே உள்ள எழுத்துப் படிவம் குறள் 'யாப்பு'க்கிணங்க அமைந்த ஒரு செய்யுள் என்று கருதப்படுகின்றது. ஆரிய இனத்தவர்கள் சிந்துநதி சமவெளிகளுக்குள் பிரவேசித்தபோது அவர்கள் தம்முடன் எழுத்து முறை எதையும் கொண்டுவரவில்லை. ஏற்கனவே அங்கு வாழ்ந்துகொண்டிருந்த தொல்குடிகளின் எழுத்துக் குறியீடுகளையே அவர்களும் பின்பற்றலானார்கள் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள்.


### திராவிட மொழிகளுக்கு தாய்மொழி

சிந்து நதியின் சமவெளிகளில் வாழ்ந்து மறைந்த ஆதிவாசிகள் பேசிய மொழி, இப்பொழுது இந்தியாவிலும் பிறநாடுகளிலும் பேசப்படும் திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாய் விளங்கியிருக்கவேண்டும்.

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆரியவம்சத்தினர் சிந்துநதி சமவெளிகளுக்குள் பிரவேசித்து அங்கிருந்த ஆதிவாசிகளை தம் அதிகாரத்துக்குள் வைத்துக் கொண்டபொழுது அவர்களிடமிருந்து தமக்கு வேண்டியவற்றை எவ்வாறேனும் தம் இச்சைபோல் எடுத்துக்கொண்டிருக்க முடியும். அதுபோலவே தமது பழக்கவழக்கங்கள், மொழி இயல்புகள் போன்றவற்றை அவர்கள்மீது திணித்திருக்கவும் முடியும். அடிமைப்பட்ட மக்கள்மீது அவர்களின் எஜமானரது மொழி, கலை, கலாசாரம்முதலியவை ஆதிக்கம் பெறுவது இயற்கையே. இந்தக் காலத்தில் ஆங்கில மொழியின் ஆதிக்கமும் பிறமொழிகளின் திணிப்பும் எந்த அளவுக்கு இருக்கின்றன எபதை கருத்தில் கொண்டால் சரித்திரகாலத்துக்கு முன்னர் மனிதன் எந்த அளவுக்கு நிர்ப்பந்தங்களுக்குள்ளாகியிருப்பான் என்பதை உய்த்து உணரலாம்.

தற்காலத்தில் பல்வேறு கிளைகளாசக் காணப்படும் திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாக விளங்கிய ஆதிதிராவிட மொழியைப் பேசிய மக்கள் சிந்து நதி சமவெளிகளில் தமக்கென அமைந்த சிரிய பண்பாடுகளை வளர்த்துக் கொண்டு ஒரு காலத்தில் தனித்துவமாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை பல அறிஞர்கள் ஏற்கனவே நிலைநாட்ட முயன்றிருந்தபோதிலும், சமீபகாலத்தில்தான் அந்தக் கருத்து உறுதியாக நிலைபெறுவதற்கான ஆதாரங்கள் கிடைக்கத்தொடங்கியுள்ளன. இந்தவகையில் பின்லாந்து நாட்டு அறிஞர்களின் கண்டுபிடிப்புகள் பெரிதும் உதவியாயிருக்கும். இவர்கள் தமது கண்டுபிடிப்புகளின் பூரண விபரங்களை வெளியிடும் நன்ந... மொழி வல்லுநர்கள் ...லோடு எதிர்பார்த்... கொண்டிருக்கிறார்கள்.

ஹோபன் ஹெஜனிலு... ஆசிய கல்விக்கான ஸ்... டினேவியன் மொழிக்கழ... தைச் சேர்ந்த நான்கு ... லாந்து நாட்டு அறிஞர்க... சிந்துநதி சமவெளிக... அகழ்ந்தெடுக்கப்பெ... புராதன எழுத்துப் படி... களை ஆராய்ந்து கட... பெப்ரவரி மாதத்தில் ... பற்றிய ஒரு அறிக்கை... வெளியிட்டார்கள். இ...




குழந்தைகள் தெருச்சுவரில் கிறுக்கி விளையாடியதுபோ... நாம் இன்று அழகாக எழுதி மகிழும் தமிழ் மொழியின் ... மாகத்தான் இருக்கும். குறள் 'யாப்பு'க்கமைய ஆ... எழுதிவைத்துள்ள ஒரு செய்யுளின் எழுத்து வடிவம் இது... களில் காணப்படுவது...

நிபுணர்களில் மூவர் பெ... வல்லுநர்கள். ஒருவர் க... வியல் புள்ளிவிபர நிபு... ஆஸ்கோபார்ப்பொலா (... இவர் சமஸ்கிருதம் ப... வர். வேதகால மொழி... துறையில் அதிக ஈடு... கொண்டவர். இவரது ச... தரர் சிமோ பார்ப்பொ... (25) ஆஸ்ஸிரிய மொழி... ஆராய்வதில் இவர் அ... நாட்டம் கொண்ட... பென்ட்டி ஆல்ட்டோ (... இந்திய ஐரோ... பிய மொழிகளை ... ஆராய்பவர், செப்... கொஸ்கோன்னிமி(30)பு... விபர நிபுணர். பின்லா... வுள்ள சர்வதேச வர்... யந்திர கூட்டுத் தாப... தின் விஞ்ஞான ஆலோச...

---

'ஈழநாடு' 10வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பெற்ற இலக்கியப் போட்டியில் ரூபா 500-00 பரிசு பெற்ற காவியம்.




(சென்றவாரத் தொடர்ச்சி)

கர்ச்சனை செய்தனன் சங்கிலி-அந்தக்
காளையின் தோள்கள் துடித்தன-கோபம்
நர்த்தனம் செய்தது கண்களில்-அவன்
ஞாலம் நடுங்கச் சிரித்தனன்-கொடுஞ்
சர்ப்பத்தின் முன்னரா தேரைகள்-இந்தச்
சதிகள் புரிவது என்றுமே பல
வர்க்கத் தாருமங்கே பேசினர்-மன்னன்
வாய்திறந் தாங்கன் உரைப்பனே.

போற்றும் மறக்குல வீரனே— ஒரு
புலியை நிகர்த்தவென் மைந்தனே - உன்தன்
சீற்றத்தின் முன்னந்த வன்னியர் - ஊரும்
சிற்றெறும் பாக அழிவரே -அந்த
ஆற்றலை யாவரும் ஒப்புவர் - எனி
ஆத்திரமென்பது தீயவே - பெருங்
காற்றடித் தாலும் விளக்கொளி -நல்ல
கண்ணாடிக்கூட்டுள் அணையுமா?

வன்னிய ரோசில ராயினும் - இந்த
வஞ்சம் புரிகிறார் என்றிடில் - யாரோ
அன்னியரின் துணையுள்ளதே - இதை
ஆராய்தல் எங்கள் கடமையே - இங்கு
பன்னெடுங் கால மடங்கியே - தொண்டு
பார்த்தவர் இன்று பகைக்கிறார் - இவர்க்
கென்ன வலிமையுண் டென்றுமே - நாங்கள்
எள்ளி நகைத்திடல் தக்கதோ.

வீரம் மிகுந்தவர் வன்னியர் - பல
வெற்றி புரிந்தவர் வன்னியர் - இன்று
சோரர்க ளாகியெம் நாட்டினை - தினம்
சுரண்ட முயலினும் அன்னவர் - எமக்
காரென வெண்ணுதல் நல்லதே - அவர்
அன்புச் சகோதர ரல்லவோ - சற்றும்
... தடும்
(இ)லஞ்சமே தஞ்சமென் றெண்ணுறார்.

எம்மை யிரண்டு படுத்தியே - பய...
எய்த முயலும் பறங்கியர் - ப...
நம்முன் விதைத்திடப் பார்க்கிறார் ...
நாச முணர்ந்திடாவன்னியர் - ...
தம்மைக் கருவிகளாக்கினர் - எ...
சார்ந்துள்ள வன்னியர் நல்லதே...
செம்பிற் செழும்பு பிடித்திடில் - ...
தேய்ப்பதை விட்டுமெறிவரோ...

மன்னவன் அப்படிக் கூறிட - அவ...
மைந்தன் எழுந்துரை செய்குவ...
முன்னவ ரோகொலைப் பட்டனர் ...
மூடரே இச்செயல் செய்தனர் ...
என்ன மொழியினும் தந்தையே - ...
எப்படி ஆறும்; அதுநிற்க - ...
சின்னவ னேஅர சாண்டிட - நீங்க...
செப்புதல் ஞாயமோ கூறுவீர் ...

அப்பொழு தாங்கொரு மந்திரி - ...
அத்தனையுந் தங்க மானவன் - ...
செப்பும் அரசியல் ஏடெலாம் - ந...
தேர்ந்த புலமை உடையவன் ...
கெப்பொழு துந்துணை யானவன் - ...
எப்பிழை செய்யினும் சொல்...
ஒப்பும் முடிவை உரைப்பவன் - த...
துள்ளக்கருத்தை மொழிகுவன் ...

இன்றைய சூழ்நிலை தன்னிலே - இ...
இராச்சிய பாரத்தை ஏற்பவ...
நன்கு புரிபவ னாகவும் - மக்கள்
நல்லெண்ணம் பெற்றவ னாக...
கொன்று குவிப்பவ னாகவும் - பகை...
கொண்டு நடத்துவோ னாகவு...
...ன்னை நடத்தா தொழிவனேல் - ...
த... தாழ்ச்சி யடைவது உண்மையே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ளிலே

...ன் நாளை
...ள் ஆவ
...ர்த்துக்
...ள்.

...னிலுள்ள
...ஸ்கெண்
...க்கழகத்
...கு பின்
...ஞர்களும்
...களில்
...ப்பெற்ற
... படிவங்
...கடந்த
...ல் அது
...க்கையை
... இந்த

இவர்கள் வெளியிட்டுள்ள முதல் அறிக்கையில் 'சிந்து சமவெளி எழுத்துப் படிவங்களின் இரகசியம் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது. என்றாலும் இன்னும்ஏராளமான எழுத்துக்களை நாம் ஆராய வேண்டியிருக்கிறது' என்று ஆஸ்கோ பார்ப்பொலா குறிப்பிட்டுள்ளார். இவர்களின் இரண்டாவது அறிக்கையில், சிந்துநதி சமவெளிகளில் வாழ்ந்து மறைந்துபோன ஆதிவாசிகள் திராவிடர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பது மட்டுமல்ல அவர்கள்இந்துசமயக்



...துபோல் இருக்கிறதல்லவா? இதுதான் ...யின் ஆதிவடிவம் என்ருல் ஆச்சரிய ...ய ஆதிகால தமிழர்கள் (திராவிடர்) ...ம் இது. சிந்துநதி சமவெளி கல்வெட்டுக் ...டுவது.

...ர் மொழி
...ர் கணித
... நிபுணர்.
...லா (27)
...ம் படித்த
...ழியியல்
... ஈடுபாடு
...து சகோ
...ப்பொலா
...மாழிகளை
... அதிகம்
...ண்டவர்.
...டா (51)
...ரோப்
... இவர்
...ப்போ
...30)புள்ளி
...ன்லாந்தி
... வர்த்தக
... தாபனத்
...லேசகர்.

கடவுளர்களையே வணங்கினார்கள்என்றும் மொஸபெத்தேமியர்களுக்கு முன்பதாகவேவான சாஸ்திரம்பற்றி அறிந்திருந்தார்கள் என்றும் நிறுவுவதற்கு முயன்றிருக்கிறார்கள். அந்த தொல்குடிகள் இன்று நாம் வணங்கும் சிவபெருமான், கிருஷ்ணர் போன்ற கடவுளர்களையொத்த விண்தேவதைகளை வணங்கியிருக்கிறார்கள் என்பதற்கு சான்றுகள் கிடைத்துள்ளன. இத தெய்வ வணக்கம்பற்றிய கண்டுபிடிப்புகளின் காரணமாக வானசாஸ்திரத்தின் வரலாற்றையே மாற்றி எழுதவேண்டியிருக்கும் என்று இந்த அறிஞர்கள் கருதுகிருர்கள். சிந்து சம

(12-ம் பக்கம் பார்க்க)

ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர்

## நாவலர் பேச ஆரம்பித்தால் —

# நான்கு மணிநேரம் அசையாமல் நின்று பேசுவார்

மழை பெய்யத் தொடங்கும்பொழுது ஒரேநேரத்தில் எங்கும் பெய்வதில்லை. முதலில் ஓர் இடத்தில் பெய்யும்: பின்னர் தொட்டம் தொட்டமாகப் பரவிப் பல இடங்களிலும் பெய்யும். அதுபோல பெருமானின் சைவப்பிரசங்கமும் முதலில் ஓர்இடத்தில்தான் ஆரம்பித்தது. பின்னர் மாரியாகஎங்கும் பரவியது.

நாவலர்பெருமானின் பிரசங்கமாரி மகாபிரபு வைத்திலிங்கச்செட்டியார் கட்டுவித்த சிவன்கோவில் மண்டபத்தில் முதலில் ஆரம்பித்தது. பிரசங்க ஒழுங்குகளை சதாசிவப்பிள்ளையவர்களும் தில்லைநாத பிள்ளையவர்களும் மிக்க சிரத்தையுடன் செய்துவந்தார்கள். பிரதி வெள்ளிக்கிழமை தவருது பிரசங்கம் நடந்துவந்தது, வெங்கடேசநாதன் மகனை கார்த்திகேய ஐயரும் இடையிடையே பிரசங்கம் செய்துவந்தார். இவர் நல்லூரைச் சேர்ந்தவர்.

அறநெறிக் காவலர்

### முதலியார் செ. முத்துத்தம்பி

பெருமானுடன் சேர்ந்து கற்றவர். பெருமானைப்போன்று பிறவிப் பேச்சாளனில்லாவிடினும் சிறந்த பேச்சாளன். பெருமானின் பேச்சைக் கேட்பதற்கு மக்கள் குவிவதைப்போன்றே இவர் பேச்சைக் கேட்கவும் குவிவர்.

ஒருவெள்ளிக்கிழமை. அன்று கார்த்திகேய ஐயர் பேசும்முறை. வெகுதொலைவிலிருந்துவந்து அவர் பேச்சைக் கேட்பதற்கு மக்கள் திரண்டிருந்தனர். பிரசங்கம்தொடங்குவதற்குச்சற்று முன்பாக பெருமானிடம் ஐயர்வந்து தமது தாயார் கடுமையான சுகவீனமுற்றிருப்பதாகவும், எனவே தாம் அன்று பிரசங்கம் செய்யமுடியாதிருப்பதாகவும், தமக்குப் பதிலாகப் பெருமானரே பிரசங்கம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அதற்கு பெருமானர் தாம் பிரசங்கம் ஆயத்தப்படுத்தவில்லையென்று சொல்லவே, கேட்டிருந்தவர்களெல்லாம் பலமாகச் சிரித்தார்கள். மக்கள் தம்மை நகைப்பதைக்கண்ட பெருமானருக்கு இங்கிலாந்தில் நடை

மாறு கேட்டிருப்பதாக அவன் கருதினன். சூன்யத்திலிருந்து கடவுள் உலகைப் படைத்தான் என்ற பொருளைவைத்து அந்த மாணவன் ஒரு நீண்ட கட்டுரையே எழுதியிருந்தான்.

அவர்கள் நகைத்ததுபெருமானுக்குப் பிடிக்கவில்லை. அவர் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். 'ஆயத்தமில்லை' என்றவார்த்தையை மூன்றுதடவைகள் சொல்லி உரக்கக் கூவினர். 'மரணத்துக்கு ஆயத்தமில்லை' என்ற பொருள்பற்றி பெருமான் பிரசங்கமாரி பொழிந்தார். நகைத்தவர்கள் எல்லாரும் திகைத்தார்கள்.

பெருமான் பிரசங்கத்திற்கு ஆயத்தப்படுத்துவதெப்படி? பிரசங்கம் செய்வதற்கு முன் ஒரு தனியிடத்தில் பத்து நிமிடம் தனித்திருந்து, தான் பிரசங்கிக்கப்போகும் பொருளுக்கு மேற்கோளாக, ஆதாரமாகப் பல நூல்களிலிருந்து சில செய்யுள்களை ஒரு தாளில் குறித்துக் கொள்வார். அவ்வளவுதான். இந்தக்காலத்தில் சிலர் ஐந்து நிமிடந்தானும் பேசுவதற்குச் சக்தி சிறிதுமில்லாமல்

பெற்ற ஒருகதை நினைவுக்கு வந்தது.

இங்கிலாந்தில் நடந்த ஒரு பரீட்சையின்போது பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சைப் பத்திரம் வழங்கப்பட்டது. அதில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி எழுதுமாறுகேட்டிருந்தது. ஒருமாணவனுக்கு விஷயமெதுவும் குறிக்கப்படாத வெறும் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மாணவன் ஊகித்தான். சூனயத்திலிருந்து கடவுள் உலகைப்படைத்தான் என்ற கருத்தினையே தன்னை எழுது

எழுதிப் படிப்பார்கள், சிலர் நிறையக் குறிப்புகள் எழுதிக்கையில் வைத்துக்கொண்டு சபையோரைப் பார்த்து ஏதோ பேசுவார்கள். சபையோருக்கு அலுப்புத் தட்டிவிடும். கொட்டாவி விடுவர் நித்திரை தூங்குவர். பிரசங்கத்தை விடுத்துப் பேசிப் பொழுது போக்குவர்; கூச்சலிடுவர்; சில பேச்சாளர் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வார்கள். சொற்பஞ்சம், கருத்துப்பஞ்சம் இருக்கும். ஆனல் பிறவிப் பேச்சாளரான பெருமானுக்குச் சொற்கள் நீரோட்டம் போல் வந்துகொண்டிருக்கும். கருத்துக்களோ வற்ருத சமுத்திரம் போலிருக்கும். சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தின் தன்னிகரில்லாத சிறப்பை அவர் எடுத்துரைப்பார். பரமதமாகிய கிறிஸ்து சமயத்தை மறுக்கமுடியாத ஆதாரங்கள் காட்டிக் கண்டிப்பார். கண்டனங்கள்இராமபாணங்கள் போலிருக்கும். தர்க்கரீதிக்கு அமையப் பேசுவார் சொற்குற்றம் பொருட் குற்றம் இருக்கவே இருககாது. லௌகீகவிஷயம் பேசும் பொழுது நின்றுதான் பேசு

## அவர் கடைசிப் பிரசங்கம் யாவரையும் கண்கலங்க வைத்தது

வார். சமயவிஷயம் புராண படனம் செய்யும்பொழுது இருந்துகொள்வார். ஒரு பிரசங்கம் செய்துமுடிக்க நான்கு மணித்தியாலம் பிடிக்கும். நான்கு மணித்தியாலமும் பெருமான் அசையாது நின்று கொண்டிருப்பார். பேச்சு கேட்கக் கேட்கத் தெவிட்டாது. அவர் உயர்ந்த பீடத்திலோ ஆசனத்திலோ தானிருப்பார். பக்கத்தில் ஒருவர் கூட இருக்கமாட்டார்கள். பிராமணராக இருந்தாலும் சரி, மகாவித்வான்களானலும்சரி எல்லாரும் கீழேதானிருப்பார்கள். பிரசங்கத்தைக் கேட்டு மக்கள் ஆனந்தக் கண்ணீர்சொரிவார்கள். பிரசங்க முடிவில் சகலரும் பலமுறை விழுந்து நமஸ்காரம் செய்து விபூதி பிரசாதம் பெற்றுக் கொள்வார்கள்.

சைவத்தையும் தமிழையும் காக்க கருணைநிதியான சிவபெருமானல் தாம் அனுப்பப்பட்டவரென்று உறுதியாகச் சொல்வார்.

இருபத்தைந்து வயதில் தொடங்கிய பிரசங்கமாரி முப்பத்திரண்டு வருடங்கள் ஈழத்தில் பொழிந்தது. பரதகண்டத் தமிழ்நாட்டிலும் பொழிந்தது. கடைசிப் பிரசங்கம், அவரது ஐம்பத்தேழாவது வயதில் அவர் இறைவனடி சேர்வதற்கு இரு வாரங்களுககு முன் சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை தினத்தன்று அவரால் கட்டப்பட்ட வண்ணர் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் செய்யப்பட்டது.

அந்தப் பிரசங்கத்தைக் கேட்ட மண்ணுமுருகிற்று; மரமுமுருகிற்று. எல்லாரும் கண்ணீர் சொரிந்தார்கள். பெருமான், "இதுவே எனது கடைசிப் பிரசங்கம். இனி மேல் நான் பிரசங்கம் செய்யமாட்டேன். உங்கள் ஏச்சும் பேச்சும் கேட்டுக் கொண்டு முப்பத்தைந்து வருடங்கள் பிரசங்கம்செய்தேன். இனி நீங்களொடு சைவப் பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள். என்னைப்போலச் சைவமும் தமிழும் தெரிந்த ஒருவரை உங்களுக்குத் தேடமுடியும். ஆனல் ஒன்றுமாத்திரம் சொல்லுகிறேன். என்னைப் போல, நீங்களெனக்குச் செய்த நிந்தனைகளையும், இடையூறுகளையும் பொறுத்துக்கொண்டு, உங்களுக்குத் தொண்டுசெய்ய ஒருவனும் வரமாட்டான்" என்ருர். இதைக்கேட்ட சபையிலிருந்தவர்கள் விம்மிவிம்மியழுதார்கள். அடுத்த நாளிரவு அவர்கள் பெருமானைக்

(14-ம் பக்கம் பார்க்க)

... நயன்
... - பகை
...கிஞர் - இந்த
...யர் - சிலர்
... - எமைச்
...ல்லரே - ஒரு
...ல் - அதைத்
...வரோ.

... - அவன்
...ய்குவான் - என்தன்
...டனர் - வன்னி
...தனர் - நீங்கள்
...யே - உளம்
... - இந்தச்
... நீங்கள்
...றுவீர்.

...ிரி - உளம்
...வன் - புவீ
... - நன்கு
...பவன் - மன்னம்
...வன் - எவர்
...சொல்பவன் - மக்கள்
... - தன
...துவன்.

... - இந்த
...பவன் - காவல்
...கள்
...ஞகவும் - துயர்
... படை
...ஞகவும் - ஆட்சி
...னல் - நாங்கள்
...மையே.

தூர திருஷ்டி படைத்துள - எங்கள்
சுபதிட்டர் கூறிய வார்த்தையை - இங்கு
யாரும் மறுத்திட லாகுமா - அவர்
ஆதார மின்றி மொழிவரோ - துன்பம்
நேரும் அறிகுறி யுள்ளன - என
நேற்று மொழிந்த தோடன்றியே - இந்த
வீரனுக் கும்முடி சூட்டிட - எமை
வேண்டினர் நன்மை விழைந்துமே.

ஆன படியினுல் அன்பரே - இதில்
ஆராய்வதற் கொன்று மில்லையே - மனம்
போன படிக்கு நடப்பதால் - ஒரு
புண்ணியஞ் சேருவ தில்லையாம் - அந்த
ஞானியின் எண்ணப் படிக்குயாம் - இந்த
ஞாலம் புரக்கும் பொறுப்பினை - வரும்
மாநிலம் உய்யப் பிறந்துள்ள - எங்கள்
மைந்தனுக் கீவது நல்லதே.

அப்பா முதலி

என்றவ் வமைச்சன் உரைக்கவும் - அதை
ஏற்க மனமிலா ஞகிய - ஆட்சி
மன்றத்தி லேயுள்ள மந்திரி - பெரும்
மாசு படிந்தவோர் சிந்தையான் - பிறர்
நன்மை யடைதல் பொறுத்திடான் - குள்ள
நரிகளை யும்வெல்லும் சூழ்ச்சியான் - என்றும்
தன்னல மேயுரு வானவன் - ஏதோ
சாற்ற நினைந்தே யெழுந்தனன்.

அப்பா முதலியென் ருேதிடும் - அந்த
அமைச்சன் நகைத்துரை செய்குவான் - இங்கு
தப்பிலா ஆட்சி புரிந்திடும் - எங்கள்
தன்னிக ரற்ற அரசனே - இன்று
எப்படி உன்மனம் மாறியே - மர
பேற்காத செய்யத் துணிந்தனை - இதை
ஒப்பில் உலகம் பழிக்குமே - என்ற
உண்மையைச் சொல்லல் கடமையே.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் மலர்

### உலகச்சுழற்சியை முதலில் கண்டறிந்து மெய்ப்பித்த ஞானி

# ஜீன் பியோ போகால்ட்

— வே. தவராஜா —

பிரெஞ்சு நாட்டிலுள்ள ரியூ டி அசாஸ் என்ற ஊரில், சாதாரண பத்திரிகையாளரின் மகனாக 1819-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பிறந்தார். இயற்கையிலே உடல் நலம் குன்றி வளர்ந்து, பள்ளியிலும் கல்லூரியிலும் திறமையை வெளிக்காட்ட முடியாமல் வாழ்ந்து, இன்று உலகம் போற்றும் மேதைகளில் ஒருவராஞல், அவரின் அறிவுதான் என்னே!

17-ம் நூற்றுண்டில் உலக மக்களுக்கெல்லாம் உலகம் சுழன்று கொண்டேயிருக்கிறது என்ற உண்மையை பரிசோதனை மூலம் தெரிவித்தவர் இவரே.

தன்வீடே ஆராய்ச்சிநிலையமாய்க்கொண்டு, அவ்வீட்டின் 6 அடி உயரமான மேல் தளத்தில், தன் ஆராய்ச்சிக் கருவியான, வீடுகட்டுவோர் உபயோகிக்கும் தூக்குக் குண்டின் அமைப்பையொத்த அவருடைய கருவியை உபயோகித்து பரிசோதனைசெய்துபார்த்தார். அவர் முதலில் 5,000 கிராம் எடையான பித்தளைக் குண்டை 200 சென்டிமீட்டர் கம்பியில் கட்டிதொங்கவிட்டார். குண்டின் கீழ் மணலைப்பரப்பி அதில் வட்டம் ஒன்று இட்டு, குண்டை சீரிவாக ஒரு நூலினுல்கட்டி அசைவற்று நின்றதும் எரியும் விளக்கினுல் நூலைத் கொளுத்தினுர். குண்டு நுனி மணலில் தொட்டுக்கொண்டிருந்ததால்ஒவ்வொருஅசைவிற்கும் ஒவ்வொரு கோடு கீறியது. இக்கோடுகள் மிக அருகருகே முதற்கோட்டின் வலப்பக்கமாக வட்டம்முழுவதும் கீறியது.

அசைவுத்தளம் வலம் சுழியாக நகர்ந்து சென்றது. ஏறக்குறைய 33 மணிநேரத்தில் வட்டத்தின் முழுவதும் கோடு கீறப்பட்டது. நியூட்டனின் முதல்விதியை அதாவது ''வெளிஆற்றல்களினுல் பாதிக்கப்படாமலிருக்கும் போது ஒரேயொழுங்காக செல்கின்றது''- என்ற விதியை தெரிந்திருந்த போகால்ட், தன் ஊசல் எப்போதும் குறிப்பிட்ட திசையில் ஆடிக்கொண்டிருக்கின்றது என்பதையும் அறிந்தார். இதிலிருந்துஊசலுக்கு கீழ் உள்ள வட்டம் சுற்றிக் கொண்டிருக்கிறது என முடிவுக்கு வந்தார்.

ஆனுல் ஊசல் மட்டும் சுற்றவில்லை. காரணம், கம்பியில் சுதந்திரமாய் தொங்கும் குண்டு எத்திசையிலும் சுற்றமுடிகிறது. ஆனுல் பூமியோடிணைந்திருக்கும் வீடு, பூமியின் திசையிலேயே சுற்றவேண்டியுள்ளது.

இவ்வாறு உலக சுழற்சி உண்மை எனமெய்ப்பித்துக் காட்டினுர் அம்மேதை.

இவர் மேலும் மேலும்பல ஆராய்ச்சிகள் செய்து 19-ம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் (1862ல்) காற்றில் ஒளி (Light) வேகம் விநாடிக்கு 1,86,000 கல் என்பதை அளவிட்டார்.

புகழேணியின் உச்சியை அடைந்திருந்த இவர் திடீரென பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டார். இந்நோயே அன்னுரின் ஆராய்ச்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது.

இவர் 1868 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதி உலகவாழ்வை நீத்தார்.

அவரின் கூற்றும் புகழும், உலகம் சுழன்றுகொண்டிருக்கும் வரை நிலைத்திருக்கும்.

---

### அதிகமானவர்களுக்கு உணவளிக்க...

சூரிய சக்தியின் 20 சதவீதத்தை மட்டும் நாம் பயன்படுத்துவோமாயின் இன்றுள்ள ஜனத்தொகையைக் காட்டிலும் 1,00,000 மடங்கு அதிகமான பேர்களுக்கு இம்மண்ணில் வாழ்வளிக்க முடியும் என்கிறுர்கள் சோவியத் விஞ்ஞானிகள்.

— 'க'

---

## சேவல்

கொக்கரச் கோவெனக் கூவுதுபார்! சேவல்
சொக்க ரம்மான் வீட்டுக் கூரையிலே
திக்கு வெளுத்துச் சிவக்குது செவ்வானம்
கொக்கரக் கோவெனக் கூவி டவே!

புள்ளின மார்க்கப் பொழுது புலர்ந்திடக்
கொக்கரக் கோவெனக் கூவுது பார்!
அள்ளித் தெளித்திட அழகினை வானமும்
கொக்கரக் கோவெனக் கூவுதுபார்!

கோவில் மணிகள் 'ஓம்' என வார்த்திட
கொக்கரக் கோவெனக் கூவுது பார்!
நேயமுடன் கூடிக் கோயில் வலம்வரக்
கொக்கரக் கோவெனக் கூவுது பார்!

செங்கதிர் கண்ணைத் திறந்து விழித்திடக்
கீழ்வானிற் கற்றை ஒளிபரவத்
தங்க முலாமிட்ட குழந்தையைக் கண்டங்கு
தாமரை யாளவள் முகம் மலர.

எங்கும் விடிந்தது, விடிந்தது வாழ்வென
இன்னமும் கொக்கர கோ எனவே
வந்தனன் கதிரவன் வானும் வெளுத்திட
வையகம் எங்கும் மலர்ந்திடவே!

—இளம்பரணன்.

---

# எலியும் பூனையும் அகலிகையும் இந்திரனும்

## கம்பர் கவி விருந்து

— ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரான்

தையலாள் நயன வேலும்
மன்மதன் சரமும் பாய
உய்யலாம் உறுதிநாடி
உழல்பவன், ஒருநாள் உற்ற
மையலால் அறிவு நீங்கி
மாமுனிக்(கு) அற்றம் செய்து
பொய்யிலா உள்ளத்தான் தன்
உருவமே கொண்டு புக்கான்.

இந்தப்பாட்டிலே ''உய்யலாம்'' என்ற இந்தச் சொல் எதுகையில் அமைந்து இப்படியெல்லாம் பிரசங்கம்செய்யும் அழகைப்பாடிப் பாடி அனுபவிக்கவேண்டும். இந்தச் செய்யுள்களுக்குத் தனி அழகுதந்து, இவ்வளவு தொனிப்பொருளும் தந்து. நம்மை வசீகரிக்கும் மந்திரச் சொல் இது.

அகலிகைக்குத்தேவராஜா என்று தெரியாது; கணவரென்றே நினைத்துக்கொண்டிருந்தாள். ஆனுல் அவள் மட்டும் தன் சித்த சக்தியைச் சரியானபடி பயன்படுத்திக் கொண்டிருந்தால்? விச்வாமித்திரன்;

''புக்கவளோடும் காமப்
புதுமண மதுவின்தேறல்
ஒக்க உண்டிருந்தலோடும்
உணர்ந்தனள்;
உணர்ந்த பின்னும்
தக்க(து), அன்(று)!''
ஒராள் தாழ்ந்தனள்
இருப்பத்தாழா
முக்கணுன் அனைய
ஆற்றல் முனிவனும் முடுகி
வந்தான்.

''புது மண மதுவின் தேறல்'' என்று உணர்ந்த பின்னும் ''அது தக்கது, அன்று!'' என்று அவள் ஆராய்ந்து பார்க்கவில்லையாம். அறிவைக்கொண்டும் சித்த சக்தியைக்கொண்டும் இப்படி விச்வாமித்திரன் சொல்லும்போதே, அதற்குத் தானு இவளுக்குத் தண்டனை என்று இராமன் நினைக்கக் கூடுமல்லவா? சரி, விச்வாமித்திரன், ''கௌதம முனிவர், தாம் வஞ்சிக்கப்பட்டதை உணர்ந்துகொண்டதும் வெகு வேகமாகத் திரும்பி வந்தார்'' என்று கதையைத் தொடர்ந்தார்.

கௌதம மஹரிஷி ஆச்சிரமத்துக்குத் திரும்பியதும் அகலிகை அப்படியே பயந்து நின்றுவிட்டாள். இந்திரனே நடுநடுங்கி ஒரு பூனையாய் அங்கேயிருந்து நழுவிவிடப் பார்த்தான். கௌதம மஹரிஷிக்கு வரம்கொடுக்கும் அனுக்கிரக சக்தியும் உண்டு. சாபம் கொடுக்கும் சக்தியுமுண்டு. இவருடைய சாபம் எவராலும் தடுக்கமுடியாதாம். வில்லம்பைக்காட்டிலும் இவரது சொல்லம்பு அவ்வளவு கொடியதென்கிறுன் கவிஞன் அத்தகைய சாபமும் குற்றத்திற்குப் பிராயச்சித்தமாகி முடிவில் நன்மை தருவதால் ''சாபம் வல்ல வரம்தரு முனிவன்'' என்கிறுன்கௌதமரை. இவ்வளவு ஜாக்கிரதையாக [illegible] கொடுக்கும் கவிஞன் அகலிகையை ''மாயா நிரந்தரம் உலகில் நிற்கும் நெடும்பழி பூண்டாள்'' என்று கூறுவது கொஞ்சம் அதிசயமாகவே இருக்கிறதல்லவா? தேவேந்திரனைத் ''தீவினை நயந்து செய்ததேவர்கோன்'' என்று கூறி, அவன் கௌதம வேஷம் பூண்டுவந்த அவனை வஞ்சித்தான் என்றும் கூறி விட்டு, அகலிகையை இவ்வளவு தூரம் பழித்துப்பேச வேண்டுமா, விச்வாமித்திரன் கூற்ருக? ''காமப்புது மணமது'' என்று அந்தப் புதுமையை உணர்ந்தபின்னும், ''தக்கது அன்று'' என்று பகுத்தறியாத அநத ஒரு குற்றம்தானே அகலிகைக்கு? அந்தக் குற்றத்திற்கும், விச்வாமித்திரனே ''காமப்புதுமணமது'' என்ற அந்தச் சொல் தொடரிலேயே ஒருவகைச் சமாதானம் தருகிருனே? அந்த மது நெறியில் மயங்கிவிட்டாள், சித்த சக்தியை இழந்து தாழ்ந்துவிட்டாள்!'' என்று சொல்லிவிட்டானே? அகலிகையின் குற்றத்தை இவ்வளவு லேசாக்கிவிட்டு, இப்போது ''மாயா நிரந்தரம் உலகில் நிற்கும் நெடும்பழி பூண்டாள்'' என்று விச்வாமித்திரன் சொல்வதற்குக் காரணம்தான் என்ன? கௌதம மஹரிஷி வந்து விட்டார். கடுங்கோபத்துடன் அகலிகையை நோக்கினுர். அவளுக்கு ஒருகொடிய சாபம் கொடுக்கப்போகிருர்! அந்த மன நிலையோடுதான் விச்வாமித்திரனும்-என் கவிஞன்கூட-இப்போது அகலிகையை நோக்குகிருன். ''வஞ்சிக்கப்படோமே; மதியிழந்து, சித்தசக்தியும் இழந்து விட்டோமே! கௌதம பத்தினியாகிய நமக்கும் இப்படி நேர்ந்ததே!'' என்றெல்லாம் எண்ணச் சுழல்களில் அகப்பட்டு மஹரிஷியைக் கண்டதும் பயந்து அப்படியே நின்றுவிட்ட அகலிகையின் அப்போதைய மனநிலையையும் கலைக்கண்கொண்டு பார்த்துத்தான் கவிஞன் அந்த நெடும்பழியை இப்படி வற்புறுத்துவதுபோலத் தோன்றுகிறது. இது எப்படியிருந்தபோதிலும், அகலிகையை வஞ்சித்துக் கௌதமரையும் வஞ்சிக்கத்துணிந்த இந்திரனை, எலியை வஞ்சித்துப் பிடிப்பதிலும் நம்மை வஞ்சித்துப் பாலைக்குடிப்பதிலும் வல்ல பூனையோடு ஒப்பிடுவது எவ்வளவு பொருத்தம்! முதல்முதல் பூனையாக நழுவப்பார்த்த இந்திரனைச் சபித்தார் கௌதமர். ராமனை நோக்கி விச்வாமித்திரன்,

''தீவிழி சிந்த நோக்கிச்
செய்ததை உணர்ந்து
செப்ப
தூயவன், அவனை நின்கைச்
சுடுசரம் அனைய
சொல்லால்''

(14-ம் பக்கம் பார்க்க)

மங்கையர் அங்கங்களுக்கு அதீத அழகைக் கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள்...
இன்றே விஜயஞ்செய்யுங்கள்



தெய்வா நகை மாளிகை
173, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பல்லுப்போனால்சொல்லுபோகும்'

எமது உடம்பு ஓர் இயந்திரம் போன்றது. இயந்திரத்தின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் சீராகவிருந்தால் தான் இயந்திரம் நல்ல முறையில் இயங்கும். இதே போன்று எமது உடம்பிலுள்ள பல்வேறு உறுப்புகளும் நன்றாக இருந்தால் தான் நமது உடம்பும் நோயின்றி இயங்கும்.

நாம் கவனமெடுக்கவேண்டிய உடல் உறுப்புகளில் பல்லும் ஒன்றாகும். பற்களைச் சுத்தமாக வைத்திருந்தால் பல்வேறுபட்ட குடல் வியாதிகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

ஆரம்பத்திலிருந்தே ஒரு தாய் தன் குழந்தையின் பற்களில் கவனம் செலுத்த வேண்டும். பல் முளைக்கும் வரை குழந்தைகளுக்கு மாவுச்சத்து நிறைந்த ஆகாரத்தைக்கொடுக்கக்கூடாது. அரிசி, உருளைக்கிழங்கு, பிஸ்கட் போன்ற பொருள்களில் மாவுச்சத்து அதிகம் சிறு குழந்தைகளால் இவற்றை எளிதில் ஜீரணிக்க முடிவதில்லை. இரண்டு வயது ஆவதற்குள் பச்சைக் காய் கறிகள், பழங்கள் கொடுக்கக் கூடாது.

குழந்தையின் பல் தந்தம் போல் இருக்க வேண்டும். பஞ்சுபோன்ற வெண்ணிறம் காணப்பட்டால் சுண்ணாம்புச் சத்துக் குறைவு என்பதற்கு அது அறிகுறியாகும்.

குழந்தைகள் உட்படப் பலருக்கு, பல் ஈற்றில் புண் ஏற்பட்டு, வலி ஏற்படுதல் உண்டு. அப்பொழுது நீரில் கடுக்காய்ப் பொடியைக் கரைத்து வாயில் விட்டுக் கொப்பளித்தால் புண்கள் ஆறும். சாதாரணப் பல் வலிக்கு ஒரு துண்டு சுக்கை வாயில்போட்டு அடக்கிக் கொண்டாலேபோதும். வலி அதிகமாகவிருந்தால் கடுகை அரைத்துப் பல்வலி இருக்கும் பக்கம் கன்னத்தின்மேல் பற்றுப்போடக் குணமாகும். கடுக்காயைப் பொடி செய்து தினசரி பல்துலக்கி வந்தால் வலிமட்டுமன்றி, பல் சம்பந்தப்பட்ட வேறு பல நோய்களும் நீங்கும்.

அநேக மக்கள் பல்லில் பாசியுள்ளவர்களாக காணப்படுகிறார்கள். உமிக்கரியால் பற்களை நன்றாகத் தேய்த்து விட்டு பின்னர் பிரஷ் கொண்டு துலக்கினால் பாசி நீங்கிவிடும். இன்று நாம் பல்வேறு பற்பசைகளை, எமது பற்களை வெண்மையாக்க உபயோகிக்கிறோம். இப்பற்பசைகளிலும் பார்க்க பயனுள்ளவைகளை நமது முன்னோர்கள் பயன்படுத்தினார்கள். ஆலம் விழுது, வேலம்குச்சி, நாயுருவிவேர் போன்றவற்றை எமது சித்த வைத்தியர்களின் சிபார்சின் பேரில் அவர்கள் உபயோகித்துத் தங்கள் பற்களைப் 'பளிச்'சென வைத்திருந்தார்கள் இதனாலன்றோ 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி' என்றனர் எமது மூதாதையர்.

மேற்கூறியவைகளை யாம் எல்லோரும் கவனித்து நடந்தால் பற்சொத்தை. பல்லரணை, பல்வலி, பல்லீறு வீக்குதல், பயோறியா போன்ற பல் வியாதிகளிலிருந்து தப்பித்துக்கொள்வதோடு இளமையிலேயே பல்விழுதலையும் தடுத்துக்கொள்ளலாம். பற்கள் விழுந்துவிட்டால் தெளிவாகப் பேசவோ விரும்பியவற்றை உண்ணவோ இயலாது. இதனாற்றான் 'பல்லுப் போனால் சொல்லுப்போகும்' என்பர் அறிஞர்.

---

சமையல் பகுதி

## —சுவைமிகு—
## சீனிச் சம்பல்

-மீனலோசனி-சின்னத்துரை-

தேவையான பொருட்கள்

பம்பாய் வெங்காயம் -1 றாத்தல்
மாசி -1/2 றாத்தல்
மிளகாய்த்தூள் – 4 தேக்கரண்டி
விளாகிரி -1 கோப்பை
நீர் -1 கோப்பை
சீனி -2 தேக்கரண்டி
உப்பு ஏலம், கறுவா, கராம்பு, இஞ்சி, உள்ளி, தேங்காய் எண்ணெய்.
வேண்டிய அளவு.

செய்முறை

வெங்காயத்தை உரித்துக் கழுவி மெல்லிய துண்டுகளாக வெட்டவும். இந்த வெங்காயத்துடன் தூளையும் உப்பையும் சேர்த்துச் சிறிதுநேரம் வைக்கவும். பின்னர் எண்ணெய்ச் சட்டியை அடுப்பில் வைத்து 4 மேசைக்கரண்டி தேங்காய் எண்ணெயை விட்டு எண்ணெய் கொதித்தவுடன் தூள் உப்பு சேர்த்த வெங்காயத்தை அதற்குள் போட்டு நன்றாக வதங்க விடவேண்டும்.

பின்னர் தூளாக்கிய மாசையும் சீனியையும் வாசனைப் பொருட்களையும் போட்டு வேகவிடவும். இதன்பின்னர் விளாகிரியில் புளியை அளவாகக் கரைத்து வெங்காயத்தினுள் ஊற்றிக் காய்ச்ச வேண்டும். நன்றாக நீர் வற்றியபின்னர் அடுப்பிலிருந்து இறக்கிப் பரிமாறலாம். இச் சீனிச் சம்பல் பழுதடையாமல் சில நாட்களுக்கு வைத்துப் பாவிக்கலாம். மாமிசம் உண்ணாதவர்கள் மாசியைத் தவிர்த்து இச் சீனிச்சம்பலைச் செய்யலாம். பாண், ரொட்டி, ஆகியவற்றோடு சேர்த்து உண்ண மிகச் சுவையாக இருக்கும்.

---

# பித்தம் தெளிய

**— பாவலர் பசும்பொற்கிழார் —**

பலவகையாம் பித்தத்தில் தலையும் சுற்றும்
பசியின்றி சிலர்வாயால் கக்குவார்கள்,
சிலருடல்கள் சிலவேளை படபடக்கும்.
சிந்திப்பீர்! சுருக்கமான மருந்திங்குண்டு
நலமாகும் மூன்றுநாளில் முறையாய்ச் செய்க.
நம்நாட்டு ''மொசுமொசுக்கை' என்பர் காட்டில்
சிலசெடிகள் இடையிடையே கிடக்கும் அஃதைச்
சிறிதளவு ஒருகொத்துப் பிடுங்கிக் கொள்க.

★

அடுப்பதனில் மண்சட்டி வைத்துத் தீயை
அதிகமாக எரித்து சட்டி வெப்பம் ஏற்க
அடுத்தவேலை யாகஇந்த இலையின் சாற்றை
அச்சட்டிக்குள்ளே ஊற்றி மூடு
முடித்தவுடன் நன்றாகக் கொதிக்கும் ஆனால்
முன்னதாக ஆவிவரும் அதனைக் கண்டு
பிடித்தவுடன் கொதிப்பறிந்தே இறக்கிவைக்க
பிறழாமல் இம் முறையில் செய்துகொள்க.

முப்பத்தைந்து மணித்துளிகள் முடிந்த பின்னர்
அதைப் பார்த்தால்
வெப்பம் ஆறித் தெளிந்திருக்கும்
வடிக்கவேண்டும் தெளிநீரை
செப்பம் செய்யும் எலுமிச்சைச் சாற்றைப்
பிழிந்துவிடவேண்டும்
ஒப்பிப் பருகப் பனைவெல்லம் உடன்
சேர்த்தருந்த வேண்டுமையா.

★

அதிகாலைப் பொழுதினிலே குடிக்க வேண்டும்
ஆக இந்த முறைப்படியே மூன்று நாட்கள்
இதமான இம்மருந்தை யுண்டால் பித்தம்
இல்லாமல் குறைந்துபோகும் மாதம் தோறும்
இதையொருநாள் அருந்திவரல் நலமேயாகும்
எம் இல்லாள் குணமடைந்த துய்ப்பில்
சொன்னேன்

புதுப்பித்தம் ஏறுதலும் ஏறாதோடும்!
போய்ச் செய்க மொசுமொசுக்கை மருந்துநீரே!!

---

## அழகுப் போட்டி ஆரம்பமான திகதி

அழகுப் போட்டி எப்பொழுது ஆரம்பமானது என்ற கேள்விக்கு இப்படியொரு பதில் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த பூ உலகில் இரண்டாவது பெண் எப்பொழுது தோன்றினாளோ அப்பொழுது தான்.

---

குடும்பச் சுடர்



தயாரிப்பு: குணம்

# விவசாயக்கல்வி-

**'விவசாயக்கல்வி வேலையில்லாப்பிரச்னையை ஒழித்து வேலை வாய்ப்பளிக்கிறது. இது மட்டுமா பசியைப் போக்கிப்பஞ்சத்தை விரட்டிநாட்டை வளம்படுத்தி பொருளாதார சுபீட்சத்தை யுண்டாக்குகிறது' என்கிறார், மட்டுவில் மகாவித்தியாலய விவசாய போதனாசிரியை திருமதி பவளம்முத்தையா. குண்டசாலை விவசாயக்கல்லூரியில் விவசாயப்பயிற்சி பெற்று இன்று விவசாயிகள் மத்தியில் உள்ள பாடசாலையில் விவசாயம் கற்பிக்கும் இவர் 'குடும்பச்சுட'ருக்கு அளித்த பேட்டி இங்கு தரப்படுகிறது.**

கேள்வி: இன்று பெரும்பாலான பெண்கள் கலை, விஞ்ஞானம், மருத்துவம் முதலிய துறைகளில் ஈடுபடுகிறார்களே? அவ்வாறிருக்க நீங்கள் விவசாயக் கல்வியை கற்று அத் துறையில் பணியாற்ற விரும்பியதேன்?

பதில்: விவசாயத்தினால் மட்டுமே எமதுநாட்டின்பஞ்சத்தையும் பசிப்பிணியையும் அகற்றமுடியும். இதற்கான ஒரு சமுதாயத்தை உருவாக்கவேண்டுமென்பது எனது பலநாளைய அவா. இதுமட்டுமல்ல நீங்கள் மேலே குறிப்பிட்ட துறைகளில் கற்றுப் பட்டம்பெற்ற பலர் இன்று வேலையின்றி அலைகிறார்களல்லவா? இந்த நிலை விவசாயக் கல்வியைக் கற்பதனால் உண்டாகாது என்பதையும் ஆரம்பத்திலேயே உணர்ந்திருந்தேன். எனவே எனது விவசாயக் கல்விக்கு அரசாங்கம் வேலை வாய்ப்பளிக்காவிட்டாலும் அக்கல்வி எனக்கு வேலையில்லாப் பிரச்னையையுண்டாக்காது. வீட்டில் இருந்து கொண்டே தொழிலில் ஈடுபடத்தக்க வசதியை எந்நேரமும் அளிக்கும் என்ற திடமான நம்பிக்கையின் அடிப்படையிலேயே விவசாயத்துறையில் நான்இறங்கினேன்.

கே: நீங்கள் விவசாயக் கல்வியை எவ்வெவ்விடங்களில் கற்றீர்கள்? இக்கல்வி வேறெவற்றை அடக்கியுள்ளது?



ப: நான் எனது விவசாயக்கல்வியை கண்டி குண்டசாலை பெண்கள் விவசாயப் பயிற்சி கல்லூரியில் [illegible]ரம் கற்றேன். [illegible] என்னும்பொழுது தனியே பயிர்ச்செய்கையை மட்டும் குறிக்கவில்லை, ஆடு, மாடு, கோழி வளர்ப்பு ஆகியனவும் அதில் அடங்கும். குண்டசாலையில் பயிர்ச் செய்கையோடு ஆடு, மாடு, கோழி வளர்ப்பு சம்பந்தமாக விரிவான பயிற்சியளிக்கிறார்கள். பயிற்சிபெறும்போது நாங்கள் பயிர்ச்செய்கையிலும் பார்க்க ஆடு, மாடு, கோழி வளர்ப்பிலேயே கூடிய கவனம் செலுத்திக் கற்றோம். பெண்கள் வீட்டில் இருக்கும் பொழுது இவைகளை வளர்த்து எந்நேரமும் பயனடையலாமல்லவா? இதனாற்றான் நாங்கள் இவற்றில் அதிக அக்கறை காட்டினோம்.

கே: இப்பொழுது நீங்கள் [illegible] கற்பிக்கும் மாணவமாணவிகள் விவசாயக் கல்வியில் கூடிய கவனம் செலுத்துகிறார்களா?

ப: இங்குள்ள மாணவ மாணவிகள் மற்றப்பாடங்களிலும் பார்க்க விவசாய பாடத்தில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். காரணம் எமது மகாவித்தியாலயம் விவசாயிகள் மத்தியில் உள்ளது. இதனால் மாணவர்கள் தாம் பெற்ற கல்வியை உடனுக்குடன் பிரயோகப் படுத்தக் கூடியதாகவிருக்கிறது. நகரப்பாடசாலைகளுக்கு இத்தகையதொரு வசதி இருக்கமுடியாது. விவசாயிகளாகிய தங்கள் பெற்றோருக்கு சிறந்தமுறையில்உதவி செய்யவும் உதவியளிக்கிறது. எனவே சூழலுக்கேற்ப விவசாயக்கல்வியில் அவர்கள் கூடிய நாட்டம் செலுத்துவதில் வியப்பில்லை. இத்தகைய ஊக்கமும் நாட்டமும் உள்ள இந்த மாணவர்கள் வருங்காலத்தில் வேலையில்லாப் பிரச்னையை எதிர்நோக்கவேண்டியதில்லை. இவர்கள் இத்துறையில் மேன்மேலும் ஈடுபட்டால் விஞ்ஞான ரீதியில் விவசாயத்தை வளர்த்து தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கத்தக்க நல்லதொரு எதிர்காலம் இவர்கள் முன் உள்ளது.

கே: 'பாம்பின் காலைப் பாம்பறியுமல்லவா?' பெண்கள் விவசாயத் துறையில் ஈடுபடுவது குறித்து விவசாயத்துறையில் ஈடுபட்ட உங்கள் கருத்தையறிய விரும்புகிறேன். கூறுவீர்களா?

ப: ஆண்களிலும் பார்க்க விவசாயத்தில் பெண்கள் தான் கூடியகவனம் செலுத்தவேண்டும் என்பது என் கருத்து. விவசாயம் என்றவுடன் ஏர் பிடித்து உழவேண்டுமென்பதல்ல. இத்தகைய கடினவேலைகளுக்கு விஞ்ஞானம் யந்திர சாதனங்களை யுதவியுள்ளது. இவர்கள் வீட்டுத்தோட்டங்களை உண்டாக்கி வீட்டுக்கு வேண்டும் காய்கறிகளைப்பெறலாம். இதைவிட கோழிப்பண்ணைகள், ஆடு, மாட்டு பண்ணைகள் நிறுவி அதனால் வீட்டின் பொருளாதாரத்தையும் நாட்டின் பெருளாதாரத்தையும் முன்னேற்றலாம்சுவிற்சர்லாந்து, டென்மார்க், ஒல்லாந்து, பெல்ஜியம் போன்ற விவசாயநாடுகளில் இத்தொழில்களில் பெரிதும் ஈடுபடுபவர்கள் பெண்களே. இத்தொழில்களை பொறுமையோடும் அதிக கவனத்தோடும் ஆண்களிலும் பார்க்க பெண்கள் செய்யத்தக்கவர்கள். ஆகவே ஓய்வுநேரங்களைப் பெண்கள் பயன்படுத்தி இத்தொழில்களில் ஈடுபடவேண்டும் என நான் விரும்புகிறேன்.

பேட்டி: **'தேன்மொழி'**

# வேலைவழங்கும்!
# பஞ்சத்தை விரட்டும்!!
# பசியைப் போக்கும்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈழநாடு" 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற இரண்டு கவிதைகளில் இதுவுமொன்று.

# திருவிழாவாற்றுப்படை

("ஈழுச்சேனு")

### நேரிசை ஆசிரியப்பா

கைலாச வாகனத் திருவிழாக் காண
நல்லூர் செல்லும் நங்கை ஒருத்தி
விளாம்பழப் புலவரின் வீட்டினை அடைந்து
பணிவுடன் அவரைப் பார்த்துப், "புலவரீர்,
அடியேன் நல்லூர் அறியேன்; அறுமுகன்
கைலாச வாகனத் தெழுந்தருள் காட்சியைக்
காண விரும்பினேன்; காணுமாறு எதுவோ?
நீங்களோ அங்கு நாள்தொறும் செல்பவர்;
தயவுசெய் தவ்வழி தெரிவிப்பீர்" என
மொழிந்தனள்; புலவர் மனம்பல நினைந்தது;
இரண்டொரு நிமிடம் இருந்தனர் மௌனமாய்;
சுரந்திடும் இழிவரற் சுவையுடன் அந்த
நங்கையை நோக்கி நவிலத் தொடங்கினர்:
"பெண்ணே! திருவிழா என்னும் பேரினில்
கண்ணை மயக்கிக் கருத்தினை அழிக்கும்
களியாட் டத்தையே கைலாச வாகனத்
திருவிழா என்று தெரிவிப் பார்அதன்
திறந்தேர்ந் துணர்ந்து தரிசிப் பதற்கென
ஒரு வழி யுரைப்பேன் உற்றுக் கேட்பாய்."

### [I. இ.போ.ச.மோட்டார்ப்பயணஆற்றுப்படை]

வடதிசை யிருந்து தென்திசைச் செல்லும்
மோட்டார் வண்டியை மறிப்பா யாயின்
இடமிலை யாயினும் உடனே நிறுத்துவர்;
"சில்லறை உண்டா?" என்பர்-சிரிப்புடன்;
'ஓம்' என் றுரைத்தால் உட்புக விடுவர்
படியில் ஏறிநீ முகட்டுத் தடியைப்
பிடிப்பதன் முன்னர் வண்டி புறப்படும்!
அதனால்,
"விழுந்து விடுவமோ!" என்றுநீ அஞ்சேல்!
பழுதை சுமக்குங் கழுதைகள் போல,
ஆடவர் பெண்டிர் அத்தனை பேரும்
ஆளொரு குழந்தையை அல்லது பொதியைத்
தூக்கிச் சுமந்து திசைக்கொரு துணையாய்
உன்னைத் தாங்கி உடலா டாமல்
வைத்திருப்ப ராதலின் விழுவ தெங்ஙனம்?
அருகில் ஆண்கள் சொருகி நிற்றலால்
அருவருப் புண்டாம்; ஒருதனி வெட்கமும்
கூச்சமும் வந்து குறுக்கிடச் செய்யும்;
வீடு திரும்பும் வேட்கையும் வந்திடும்.
ஆயினும்,
முன்வைத்த காலைப் பின்வைக்க லாமோ?
ஆணுக்குப் பெண்ணிங் கிளைத்தவ ளாவளோ
சரிநிகர் சமானம் இல்லையோ?... சரிசரி!
என்று தேறி எவ்வித இடரையும்
பொருட்படுத் தாமற் போவா யாயின்
படலைக் கொருதரம் 'படக்'கென நிறுத்துவர்
இறக்குதற் கன்று! ஏற்றுதற்காக!!
அக்கால்:
முன்னும் பின்னும் மெய்படத் தோய்ந்து
இன்னும் இதுபோல் எய்தா தோவென
ஊஞ்ச லாடி உவப்படை வார்பலர்,
இத்துணை இன்ப அனுபவம் பயிற்றி
முத்திரைச் சந்தையை மெத்தென அடைந்த
அற்புத வண்டி அரைமணி நிற்கும்!
நின்றதும்:
பெட்டியில் அடைத்துக் கொட்டிய பஞ்சு
குமுறிப் பெருகும் கோலம் போலவும்
தடியால் தள்ளத் தன்செயல் இன்றிப்
பிதுங்கி வருங்குழற் பிட்டுப் போலவும்
மிண்டித் தள்ளும் மக்களின் துணையால்
வண்டியி லிருந்து வெளிவரு வாருடன்
அம்மா நீயும் இறங்குவை சுகமாய்.
அதன்பின்......?

### [II. நடைப்பயண ஆற்றுப்படை:]

கந்தனில் அன்பு கொண்டவ ராகிக்
கைகளைத் தலைமேற் கூப்பிய வண்ணம்
"அரஹரா முருகா அடைக்கலம் உன்பாதம்
வரமருள் வாய்நீ வள்ளி மணாளா"
எனவாய் மொழிய எழில்மனங் கசியக்
கண்ணீர் சொரிந்து மண்மிசை நடக்கும்
அடியா ருடன்சென் றறுமுகன் கோயிலை
அடையலாம்" என்றுநீ அற்பமும் நினையேல்
உன்னுடன் இறங்கிய உத்தமர் யாவரும்
வண்டியில் வருங்கால் வாங்கிய வருத்தம்
இம்மியும் மறவா இயல்பின ராதலின்
'இ...போ... ச...'வின் இருஞ்சீர் இயம்பியும்
'கொண்டக்டர்' செய்த கொடுமைகள் கூறியும்
'இறைவரின்' அற்புத வித்தையை இயம்பியும்
வண்டியில் ஏற்றி வலிந்து பயிற்றிய
நிற்றல் இருத்தல் நெளிதல் நிமிர்தல்
விழுதல் எழுதல் வளைந்து கூனுதல்
தட்டுதல் தழுவுதல் முட்டி மோதுதல்
தடியைப் பிடித்துத் தாவிப் பாய்தல்
பின்புறம் முன்புறம் 'புகைவண்டி' விடுதல்
கொடுக்கிற் பற்றிக் கொழுத்தாடு பிடித்தல்
கெந்தி அடித்தல் கிளித்தட்டு மறித்தல்
இடித்தல் வருடுதல் இவைமுதல் எண்ணிலா
உடலப் பியாசம் ஒழுங்காய்ப் பழகிய
அநுபவஞ் சிந்தித் தயர்வுடன் செல்வர்.
அவருடன் நடந்து அமைதியாய்ச் செல்க!
அவ்வழி:
கள்வர் ஒருகால் கடைக்கணித் திடலாம்
கழுத்திற் காதிற் கையில் இருப்பன
கொழுத்த பெறும்தி கொண்டன வாதலின்
முந்தானை கொண்டு முக்காடிடுக
முன்கை களையும் மறைத்துக் கொள்க
முந்தானை மூலையில் முடிந்த பணத்தைப்
பத்திர மாகப் பொத்திப் பிடித்துச்
செல்லுதல் நன்று; செல்லுங்காலை
இறங்கிய இடம்முதல் அரசடி யீறாய்
எந்தச் சந்தையும் இணையில தாம்படி
ஒன்றுக்குப் பத்தாய் இலாபந் தேடும்
குந்தகம் மலிந்த விந்தைக் கடைகள்
கண்ணுக் கினிதாய்க் காட்சி யளிக்கும்
அவ்விடம்:
காசு பறித்தலிற் கண்ணுங் கருத்துமாய்
நல்லூர் முருகனை நற்சாட்சி யாக
ஆணை யிட்டுநின் றொரும் அறியாப்
பொய்பல கூறிப் பொருள்எனுங் கண்ணியை
வைத்தப கரிக்கும் வியாபா ரத்தால்
நல்லவ ரல்லவர் நலமெலாம் நலியும்
கோலங் காணலாம், மேலும் சொல்லக்கேள்!

### [III. வளையற்கடை வைபவ ஆற்றுப்படை]

காலை முதலாய் மாலை வரையும்,
வரிசையா யடுக்கிய வண்ண வளையற்
காப்புக் கடையிற் காரிகை மார்கள்
நாட்டங் கொண்டு கூட்டம் போடும்
கோலக் காட்சி சாலவு மதிசயம்!
அதனைக் கண்டோர் அப்பால் இப்பால்
நகரார்; சிலைபோல் நினைவிழந் தவராய்
வைத்தகண் வாங்கா வியப்புடன் விழித்து
வாயிற் கையை வைத்து நிற்பர்!
அச்சமும் மடமும் நாணமும் பயிர்ப்பும்
மெச்சிடப் பொருந்தி இச்சகமீதில்
கணவனை யன்றிப் பிறரைக் கனவிலும்
தீண்டியறியாத் திருமதி மார்களும்
பூண்ட கல்விப் பொருள்புறத் திட்டு
மாண்ட அறிவின் மாணவி மார்களும்
அக்கம் பக்கம் நின்று மக்கள்
புதினம் பார்ப்பதும் புரியா தவராய்
வணிகனை விளித்து வளையலைச் சுட்டி,
"இந்த வளையலில் இரண்டு சோடி
எந்தனுக் களவாய் இடுக" வென்று
வேண்டி நிற்க வணிகன் மகிழ்ந்து
இடக்கரங் கொண்டு வலக்கரம் பற்றி
இதழ்க்கடை முறுவல் ஒழுக இணைவிழி
ஓரப் பார்வை உடல்நலம் அளக்க
இரண்டு நிமிடத் தணியும் வளையலை
இருபது நிமிடம் ஒழியும் வரையும்
சொருகித் தள்ளி உருவித் திணித்துத்
திருக்கூத் திடுதலைத் தெருத்தொறுங் காணலாம்.
கண்டால்;
நீயும் நிற்பாய்; "நினது மனமும்
பாயும் அவ்வழி; போயொரு சோடி
போட்டால் என்ன? போ!போ." என்று
தூண்டும்! ஆயினும், தூயைநீ துணிந்து
ஆசையைத் தணித்துடன் அப்பாற் சந்நிதி
நோக்கி நடக்க நேரிடின், அங்கே
நிகழுங் காட்சியை நவிலக கேளாய்:

### [IV. கைலாசவாகனக்காட்சி ஆற்றுப்படை]

நண்பரைக் கண்டு நாலு வார்த்தை
பேசலா மென்று புறப்பட் டவரும்
சட்டி பானை சீப்புடன் ஆடி
பெட்டி கடகம் பாய்முதற் பலவித
பண்டம் மலிவாய்ப் பெற்றுச் செல்ல
வண்டியோடு வந்தடைந் தவரும்
சினிமாப் பார்க்குஞ் சிந்தனை யோடு
விழாவைச் சாட்டி விரைந்து வந்து
மாலை ஆறு மணிவரை தங்கிக்
காலங் கடத்துஞ் சீலத் தவரும்
உளவியல் அறிந்து களவியல் வழியில்
நுழைந்து பார்க்க விழைந்துவந் தவரும்
இன்னும் உனக்குச் சொல்ல லாகாக்
காரியம் பலவுங் கருதிவந் தவருமாய்க்
கூடிய சந்தைக் கும்பலே கோயிலின்
நாலு வீதியும் நிறைந்து நிற்கும்
ஆதலின்:
அதற்குட் போதல் ஆபத்தாகும்
எதற்கும் அஞ்சா வியல்புடை யோரே
இடித்துட் புகுவர்; ஈடிலாக் கற்பும்
ஒழுக்கமும் இழப்பர்: இறக்கும் வரையும்
உயிரினும் மேலாம் ஒழுக்கம் பேணும்
உத்தமர் அஞ்சி ஒடுபுறம் ஒதுங்கினர்;
அதனால் நீயும் அறுமுகன் சந்நிதி

(15ம்பக்கம் பார்க்க)

## சிந்து நதி ..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளி ஆதிவாசிகள் நட்சத்திரங்களை வணங்கியிருக்கிறார்கள் என்பதற்கு நிறைய சான்றுகள் இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர், பூமியில் நாசங்களை விளைவிப்பவையென்று கருதப்பட்ட கிரகங்களை அவர்கள் பூஜித்திருக்கிறார்கள்.

"சிந்துசமவெளி தொல்குடிகளுக்கும் யூப்பிரட்டிஸ் — டைகிரிஸ் சமவெளி தொல்குடிகளான சமேரியர்களுக்குமிடையில் நிறைய தொடர்புகள் இருந்துள்ளனவென்பது நன்கு தெரிந்த விஷயம், இருதரப்பிலும் பரஸ்பரம் பல விஷயங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளன, வான சாஸ்திரம் சோதிடம் ஆகியவற்றின் ஆரம்பகர்த்தாக்கள் ஆதிவாசிகளான திராவிடர்கள்தாம் என்பதில் எமக்கு இப்பொழுது நம்பிக்கை பலப்பட்டிருக்கின்றது" என்கிறார்கள் இந்த அறிஞர்கள்

### சாதி அமைப்பு முறை

"இந்தியாவில் காணப்படும் இன்றையசாதிஅமைப்புமுறையை ஆரம்பித்தவர்கள் திராவிட இனத்தவர்தான் என்று நாம் வலியுறுத்தவில்லை, ஆனால் இந்த மக்களின் சமய, தொழில் வேறுபாடுகளும் அவர்கள் மீது ஆக்கிரமிப்பு மேற்கொண்ட ஆரியர்களின் சமூக அமைப்பு முறைகள் இரண்டறக் கலந்திருக்க வேண்டுமென்று நம்புகிறோம்" என்கிறார் டாக்டர் பார்ப்பொலா.

4000 ஆண்டுகளுக்கு முன் வழக்கிலிருந்து அழிந்து போன ஒருமொழியின் எஞ்சியிருந்த குறியீடுகளையும் படிவங்களையும் இந்த அறிஞர்கள் மிக சிரமங்களுக்கிடையில் ஆராய்ந்ததில் அவைகளில் பொதிந்துகிடந்த இரகசியங்கள் வெளியாகியுள்ளன.

### ரஷ்ய அறிஞர்கள் ஆராய்ச்சி

இந்தப் படிவங்களை ஆராய்ந்த ரஷ்ய ஆராய்ச்சியாளர்களும் சிலகாலத்துக்கு முன் இவை திராவிடப்பான்மையுடையவைஎன்று விபரமாக அறிவித்திருந்தனர். ஆனால் அவர்களிடமிருந்து தகவல்கள்கிடைக்கவில்லை. இந்தப் படிவங்களில்ஐந்திலொருபகுதியை பின்லாந்து அறிஞர்கள் ஆராய்ந்து முடித்துள்ளனர்.

பின்லாந்து அறிஞர்கள் கூறுகிறபடிசிந்துசமவெளிகளில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளும், எழுத்துக்களும் திராவிடமொழிப்படிவங்கள்தாம் என்பது சரியென்றால் ஏற்கனவே ஆர்.டி. பனர்ஜி ஹெராஸ் அடிகள்போன்ற மொழிவல்லுனர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களை இது உறுதிப்படுத்துவதாகும் என்று இந்திய அறிஞர் ஒருவர் அண்மையில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்த ஆராய்ச்சிகளையெல்லாம் பார்க்கும்போது, 'கல்-தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி, என்று நம்மவர்கள்பெருமைப்பட்டுக் கொள்வதில் அர்த்தம் இருக்கிறதென்பது தெளிவாகின்றதல்லவா? அந்த மூத்தகுடியின் சொந்தக்காரர்கள் என்றவகையில் நம் எல்லாருக்குமேதான் பெருமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதாரத் துறையில் இலங்கையின் எதிர்காலம்

# முன்னேற்றத்திற்கு இன்று வகுப்புவாதமும் சாதிபற்றிய ஐதீகமும் தடைபோடுகின்றன

கலாநிதி க. குலரத்தினம்
(புவியியல் பேராசிரியர், இலங்கைப் பல்கலைக் கழகம்)

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாதனவான அபிவிருத்தித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாக மூளவள ஆய்வுக் குறைபாடு முக்கியமாக உள்ளது போன்றே சாதிபற்றிய பாரம்பரிய ஐதீகக் கொள்கைகள், வகுப்புவாதப்பிரச்சினைகள்போன்ற அரசியல் காரணங்களும் பொருளாதார அபிவிருத்தியை எதிர்நோக்கியிருக்கும் தடைகளாகவுள்ளன. பல்வேறு மொழியைப் பேசுபவர்களும், வேறுவேறு மதத்தைச் சார்ந்தவர்களுமான மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதி, சந்தேகங் காரணமாக நாட்டின் அபிவிருத்திக்காகச் செலவிடப்படவேண்டிய அவர்களது சக்தியானது வீணுகப் பல்வேறு திசையில் பிரயோசனமற்ற வற்றில் விரயமாகிறது. இத்தன்மைக்கு ஒரு அடிப்படையும் கிடையாது. ஆனுல் இதுசுயநலவாதிகளான அரசியல்வாதிகளால் தங்கள் தங்கள் தொகுதியில் தங்கள் நன்மையின் பொருட்டு உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது இதனுல்தான் நாட்டில் பலதீமைகள் விளைகின்றன. இதற்குக்காரணம் நாட்டின் அரசியல் அமைப்பேயாகும்! அடுத்துச் சாதிப்பாகுபாடும் இதனுல் ஏற்பட்டதொன்ருகும். உண்மையான சமூகவரலாற்றைநாம் அலசிஆராய்ந்தோமானுல் இனத்துவேஷத்துக்கு சரியான அடிப்படைக்காரணம்இல்லையென்பது புலனுகும், நாட்டின்பல் வேறுபட்ட சமுதாயங்களும் தொன்றுதொட்டு இயற்கையிலேயே வழமையாக ஒற்றுமையோடு அவ்வச்சமுதாயத்தின் வாழ்க்கைமுறைக்கேற்ப ஒன்றையொன்று மதித்துச் சகிப்புத்தன்மையோடும் மரியாதையோடும் சிலநூற்ருண்டுகளாக வாழ்ந்துவந்திருக்கின்றன. நல்லெண்ணத்தை நன்நோக்கத்தை விளைவிக்கத்தக்க இந்த வரலாற்றை நாம் பிழையின்றிப் படித்துப் பார்த்தோமானுல் வருங்காலம் வளமானதாகவமைய வாய்ப்புண்டு.

இனஒற்றுமையை வளர்ப்பதற்கு எமது நாட்டில் தொன்றுதொட்டு வாழ்ந்துவந்த பல்வேறு இன மக்களின் வரலாற்றை ஒருவர் ஆராயின் அது பொருத்தமுடைத்தாகவிருக்கும். சிங்களவரும் தமிழரும் தங்களை ஒருவர்க்கொருவர் பகைவர்களாகப் பாராட்டிக்கொள்ள அங்கு ஏதும் அடிப்படைக் காரணம் காணப்படுகிறதா?

இலங்கையில் ஆதிகாலத்தில் கற்கால மனிதன் வசித்துள்ளான் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. சிங்களவர் தமிழர்கள் ஆகியோரது மூதாதையர்கள் இந்நாட்டுக்குக் கொண்டுவந்த மொழி, கலாச்சாரம் ஆகியன இவர்கள் வருகைக்கு முன்னர் வாழ்ந்த இந்தக் . கற்கால மனிதர்களால் பல்வேறு வகையில் கைக்கொள்ளப்பட்டவையாகும் என்பதைத் தெளிவாகத் திரு. பரணவிதான விளக்கியுள்ளார். "எனவே இன்று சிங்களமும், தமிழும் பேசும்மக்களில் பெரும்பான்மையானவர்கள் இக்கற்கால மனிதர்களின் வம்சாவழியினரே எனக்கூறலாம்.

"இலங்கையின் புராதன வரலாறு தொடர்ச்சியான இந்தியச் செல்வாக்கை விளக்குகிறது' இதற்குக் காரணம் இவ்விருநாடுகளும் மிக அண்மையில் இருப்பதனுல் எனலாம். முன்பு இலங்கை பல பெயர்களால் அழைக்கப்பட்டுவந்தது. இப்பெயர்களில் செரண்டிப், ஈழம், தபுரோபேன் ஆகிய மூன்று பெயர்களும் நெருங்கிய தென்இந்தியத்தொடர்புள்ளவை. செரண்டிப் என்பது இந்தியாவின் தென்மேற்குக் கரையோரப்பகுதியில் வியாபாரத்தின் பொருட்டுத் தங்கியிருந்த அராபிய வர்த்தகர்களைக் குறிக்கும். (இதனுல் அப்பகுதியில் உள்ள மக்களைக் குறித்து சேரர்களது அல்லது கேரளர்களது தீவுஎனக் குறிப்பிடப்பட்டது)அடுத்து ஈழம் (ஈழவர்களின் நாடு. இப்பொழுதும் ஈழவர்கள் என்ற ஒரு சாதியினர் கேரளத்தில் வசிக்கின்றனர்.) இங்கும் தென்னிந்தியத் தொடர்பைத் தெளிவாகக் காணலாம். இந்த ஈழம் என்ற பெயர் இலங்கையின் ஆதிக்குடிகளின் மொழியோடு (ஈழு) தொடர்புடையது எனவும் கருதப்படுகிறது. மூன்ருவது பெயரான தபுரோபேன் என்பது பாண்டிநாட்டிலுள்ள ஒரு ஆற்றின் பெயரான தாமரவரணியின் திரிபு எனவும் கொள்ளப்படுகிறது.

கி. மு. 500-ல் இந்தியாவிலிருந்து விஜயனும் அவனது சகாக்களும் இலங்கைக்கு வந்தனர் என வரலாறு கூறுகிறது. இதற்கு முன்னரும் இதன்பின்னரும் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் இருந்து படையெடுப்புமூலமும் குடியேற்றமூலமும் மக்கள் காலத்துக்குக்காலம் வந்து இங்கு குடியேறியுள்ளனர். இவர்களின் குடியேற்றத்துக்குப் பல வருடங்களுக்குப் பின்னர் இவர்களைத் தொடர்ந்து 1507-ல் போர்த்துக்கேயர் இலங்கையின்கரையோரப்பகுதிகளில் வந்து குடியேறி அப்பகுதிகளை ஆண்டுவந்தனர். 1658-ல் ஒல்லாந்தர் வந்து குடியேறிப் போர்த்துக்கேயரின் ஆட்சியைக் கைப்பற்றி அவர்கள் வலிமையைக் குறைத்தனர். 1796-ல் இலங்கையை வந்து கைப்பற்றிய பிரிட்டிஷாரால் இந்த ஒல்லாந்தர் ஆட்சியும் வீழ்ச்சியுற்றது. 1948-ல் இலங்கை சுயாட்சி பெற்று சுதந்திரத்தைப் பெற்றது. சுதந்திரம் பெற்ற இப்பொழுது நாடான இலங்கை இரு பிரதான சிறப்பம்சங்களோடு கூடியதாக விளங்கியது. ஒன்று செழிப்பான பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை. மற்றது பெரும்பான்மையினரான சிங்களவர் சிறுபான்மையினரான தமிழர் ஆகிய இரு இனத்தவர்களிடையே நிலவிய இன ஒற்றுமை. ஆனுல் ஒன்று தமிழ்ச் சமூகத்தவர் வரலாற்றைத் தவருக உணர்ந்த அரசியல் வாதிகளால் அழிக்கப்பட்டதோடு தவருன வழியிலும் இட்டுச் செல்லப்படுகின்றனர். அதே வேளையில் மாற்றமடையும் உலக நிலைமைகள் சிங்களவர்களைப் பெலவீனர்களாக்கியுள்ளன.

"கிறிஸ்து சகாப்த முற்பகுதியில் திராவிடர்கள் சிங்கள இனத்தை உருவாக்க உதவினர் என்பதற்கு ஆதாரங்கள் பல உள. 1017—1076 வரை உள்ள காலப் பகுதியில் சோழர்களின் படையெடுப்புகளினுலும்குடியேற்றத்தினுலும் இச்செல்வாக்குக் குறிப்பிடத்தக்க அளவுக்கு இருந்தது, இதன் பின்னர் ஏற்பட்ட பாண்டிய படையெடுப்பினுல் இச்செல்வாக்கு மேலும் வலுப்பெற்றது. தமிழர்களின் இரத்தக் கலப்பு சிங்களவரில் எந்த அளவுக்குள்ளது எனத் துணிந்து கூறுதல் கஷ்டமெனினும் குறிப்பிடத்தக்க அளவுக்கு உண்டு எனக் கூறுதல் பிழையாகாது. இதைக் கூருவிடில் சிங்களமொழி அமைப்பிலும், சொல்லாட்சியிலும் தமிழ்மொழியின் சாயலைப் பின்பற்றியமைந்துள்ளதையும், சிங்கள சாதிமுறை தென் இந்திய சாதிமுறையோடு ஒத்திருத்தலையும் விளக்குதல் கடினமாகவிருக்கும். இடங்களின் பெயர்களை நோக்கும்போதும் இரண்டுக்கும் உள்ள ஒற்றுமையைக் காணலாம்.

தமிழ் அடிப்படையில் இடங்களின் பெயர்கள் மட்டுமன்றி சிங்களப்பகுதிகளிலுள்ள பல இடங்களில் குடும்பப் பெயர்களும் தனிப்பட்டவர்களின் பெயர்களும் தமிழ் அடிப்படையிலமைந்தனவாகவுள்ளதைக் காணலாம்.

பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் இலங்கையில் வாழ்கிருர்கள். இதற்குக் காரணம் இலங்கையின் புவியியலமைப்பும், இந்தியாவோடு உள்ள வரலாற்றுத் தொடர்புகளுமாகும்."

"சிங்கலவர்கள் ஒரு கலப்பினத்தவராவர். தமிழினத்தின் கலப்பே கூட எனலாம்... "சிங்களவர்கள் இந்நாட்டில் வாழ்ந்த காலம் தொட்டு தமிழர்களும் வாழ்ந்துவருகிருர்கள். அத்துடன் அவர்களுக்கு அரசர்களும் இருந்து அவர்களை ஆண்டுவந்தார்கள். சிங்கள அரசுகளில்கூட தமிழர்கள் முக்கியஇடத்தை வகித்தார்கள். இதற்கு விசேஷமாக 7-ம்நூற்ருண்டிலிருந்து 11ம் நூற்ருண்டுவரையுள்ள பகுதியைக் குறிப்பிடலாம்."

தற்போதைய இந்திய வம்சாவழியினரான தமிழர்கள் அதாவது இந்தியத்தமிழர்கள் அல்லது மலைநாட்டுத்தமிழர்கள் 19-ம் நூற்ருண்டில் புதிதாக ஆரம்பித்த கோப்பி, பின்னர் தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்வதற்கு பிரித்தானிய பெருந்தோட்டப்பயிர் செய்கையாளர்களால் வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

இங்குள்ள முஸ்லிம் மக்களைப்பொறுத்தளவில் அவர்களும் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்களென்பதை திரு. பஃர்மர் தெளிவாக விளக்கியுள்ளார். "இந்தமுஸ்லிம்கள் அராபிய செல்வாக்குடையவர்களாகவிருப்பினும் தென்னிந்தியாவில் வியாபாரத்தின் பொருட்டு வந்து குடியேறி தென்னிந்தியர்களையும்விவாகம் செய்தவர்களாவர் அங்கிருந்துவந்துதான் இவர்கள் இலங்கையில் குடியேறி இலங்கையரையும் விவாகம் செய்தனர்." இந்த முஸ்லிம்களின் பழக்க வழக்கங்கள்

(16-ம் பக்கம் பார்க்க)

## சுயதேவைப் பூர்த்திக்கு—

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

ருண்டு விழாவை விமரிசையாகக் கொண்டாடவேண்டுமென நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாடசாலையிலும், ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு மாநிலத்திலும், தலைநகரிலும் விழாக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

வடமாநில விழாவின் அம்சங்களாக நடாத்தப்படவிருந்த பொருட்காட்சிகளெல்லாவற்றையும் ஒருங்குசேர்த்து விஞ்ஞானக் காட்சிக்கு முக்கிய அந்தஸ்து அளிக்கும் நோக்கத்துடன் வடமாகாண விஞ்ஞான ஆசிரிய சங்கத்தையும் சேர்த்து கல்விப்பொருட்காட்சியை ஒழுங்குசெய்திருக்கிருேம்.

மாணவர்கள் தமது ஆக்கத்திறனை நுட்பமான செயல்முறைகளைக் காட்டுவதற்கு இப்பொருட்காட்சி நல்ல வாய்ப்பளிக்கிறது. அன்றியும் எமது மாணவர்களிடம் மறைந்துகிடக்கும் ஆற்றலகளை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பமளித்திருக்கின்றதென்பதைக் காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்களிலிருந்து உணரலாம்.

இதுவரை பிற நாடுகளிலிருந்து இங்குவரும் அநேக பொருட்களை, அந்நிய செலாவணியின்றி நம்நாட்டிலும் உற்பத்தி செய்யலாமென நமது பொருட்காட்சியிலே எடுத்துக்காட்டப்படுகின்றது. இப்பொருள்களை உற்பத்திசெய்வதற்கு ஏற்ற உற்சாகமளிப்பது பொதுமக்களின் கடமைகளிலொன்ருகும்.

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதிகுறைந்தவர் காசு தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்"

அன்றியும் சித்திரம், கைப்பணி, மனையியல் முதலியமிக முக்கியமான துறைகளிலும் எமதுசமுதாய வளர்ச்சியின் பொருட்டு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கவேண்டும். இத்துறைகளில் எமது பாடசாலைகள் அடைந்திருக்கும் முன்னேற்ற நிலைமையை அளவிடுதற்கு இது ஒரு சந்தர்ப்பமாகும்.

வாழ்க்கை வளம்பெற வேண்டின் தொழில் நுட்பம் சிறக்கவேண்டும்; தொழில் நுட்பம் சிறக்கவேண்டிற் கல்வியறிவுசிறக்கவேண்டும். ஒரு நூற்ருண்டுகாலத்திலே எமதுகல்வித்திறனின்வளர்ச்சியின்அளவை ஊகிப்பதற்கு இப்பொருட்காட்சி ஏதுவாயிருக்குமென்பது எமது நம்பிக்கை.

அதிக செலவுடனும், மிக்க பிரயாசத்துடனும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும்இந்தக் கல்விப் பொருட்காட்சியை ஒவ்வொரு பெற்ருேரும் தரிசித்து நம் சிருர்களுக்கு உற்சாகமளிப்பார்களாக.



## வரி விளம்பரம்

### விற்பனை

யாழ்ப்பாணம்நகரில், ஈச்சமோட்டைஒழுங்கையில் ஒவ்வொன்றும்மூன்றுபரப்புகள் கொண்ட முன்பக்கம் வீதியும், மின்சார, தண்ணீர் வசதிகளும் உள்ள கச்சேரிக்கும் பாடசாலைகளுக்கும் அருகாமையில் மூன்று கட்டிடக் காணித்துண்டுகள் ஒவ்வொன்றும் ரூ. 16,000க்கு விற்பனைக்குண்டு. பிலிப்ஸ், 26, சார்ல்ஸ் டிரைவ், கொழும்பு-3. 1292



## சிந்தனையும் செயலும்

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

லும், பல்கலைக்கழகங்களிலும் தொழிலியல்நிறுவனங்களிலும், ஆராய்ச்சிநிறுவனங்களிலும் அளிக்கப்படும் விஞ்ஞானக்கல்வியில் நாம் இன்னும் போதிக்கவும் பயிற்சியளிக்கவும் இருக்கும் கல்வியானது கடல்போலப் பரந்து கிடக்கின்றது.

எனவே, விஞ்ஞான அறிவினதும் ஆராய்ச்சியினதும் பெறுபேருக இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும் அன்ருட வாழ்வில் பிரிக்க முடியாத அம்சங்களாய் அமைந்துவிட்ட முற்போக்கான நாடுகளோடு நாமும் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கு நாம் நமது கல்விமுறையிலும் தொழில் துறையிலும் புரட்சிகரமான மாற்றத்தைப் புகுத்தவேண்டும்.

நமது எதிர்காலமுன்னேற்றத்தைப்பற்றிய இப்பொருட்காட்சியில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்கல்லூரிகளிலுள்ள ஆய்வுகூடச் செயல்திறன்களையும் உயர்நிறுவனங்களிலும் தொழிற்சாலைகளிலும் கையாளவிருக்கும் தொழில் திறன்களையும் காட்டுவதோடு மாத்திரமன்றி, மேலைநாடுகள் விஞ்ஞானத்திலும் தொழிலியலிலும் இதுவரை சாதித்த நவீன சாதனைகளையும் அந்நாடுகளின் இராசப் பிரதிநிதிகளின் உதவியுடன் திரைப்படக்காட்சிமூலமும், மாதிரிப்பொருட்காட்சிமூலமும் நாம் விளக்கிக்காட்ட வேண்டியவர்களாயிருக்கின்ருேம்.

இவ்வாருதலால், மாபெரும் வளர்ச்சியைக் காணவிருக்கும் நமது எதிர்காலத்திற்குச் சிறிய அளவில் இப்பொழுது நாம் எடுத்த கால்கோள் விழாவாக இப்பொருட்காட்சி அமையும் எனமதித்து விஞ்ஞான ஆசிரியர் சங்கம் இதனை மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கின்றது. கல்விவளர்ச்சியில் ஆர்வமுடைய அனைவரும் அவ்வளர்ச்சி குறித்துத் தம் உயரியதிட்டங்களையும் ஒத்துழைப்பினையும் உதவ இன்றே ஒன்று சேர்வார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் சாதனைகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்கு முறையாக ஆராய்ந்து படிக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

இதுவரையில் இத்திட்டத்தினுல் கிடைத்துள்ள பலன்கள் பல. அவற்றுள் இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கத்தில் (C.A.A.S) இத்திட்டத்தின் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஐந்து 1964, 67,-68ல் திரு. எம். அற்புதநாதன், திரு. கே. குகதாசன், திரு, கே. சித்திரவடிவேல் ஆகியோரால் வாசிக்கப்பட்டதும், ஆசிய ஸ்தாபனத்தாரின் (Asia Foundation) நிதி உதவியுடன் பதினெரு ஆராய்ச்சிப் புத்தகங்கள் வெளியீடு செய்வதும் சிறப்புக்குரியனவாகும்.

சங்கத்தின் இன்னெரு முயற்சி வடபகுதி நீரியல் ஆராய்ச்சியிலும் ஒராண்டு காலம் நீர்ப்பாசனப் பகுதியுடன் இணைந்து வடபகுதியிலுள்ள நீர் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருந்தமை.

அதன் புதியதொரு முயற்சியாக உவர்மண் மீட்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டங்கள் விஞ்ஞான நோக்கை வளர்த்து விருத்தி செய்யவும், புதிய பிரச்னைக்குத் தீர்வுகாணும் திறனை உண்டாக்கவும், விஞ்ஞான வழிமுறைகளைப் பிரயோகித்து முடிபுகள் எடுக்கவும் ஆக்கமுறையிற் சிந்திக்கவும் வேண்டிய பயிற்சிகள் அளிக்கும் பெரும் பயன்கள் கொண்டனவாகும்.

இதுதவிர, பாடத்திட்டப் பகுதியிற் சங்கம் செய்துள்ளது பலவாகும். விஞ்ஞான மகாநாடுகள், விஞ்ஞானப் படிப்பு வட்டங்கள், விஞ்ஞான வாத அரங்குகள், விஞ்ஞானப் பரீட்சைகள், விஞ்ஞானிகளின் சிறப்புச் சொற்பொழிவுகள் முதலியன பலவற்றையும் நடாத்தி வருகின்றது. மேலும் ஈராண்டிற்கொருமுறை வடமாநில அங்கத்துவக் கல்லூரிகள் பல ஒன்று சேர்ந்து சிறப்புமிகு விஞ்ஞானப் பொருட்காட்சியையும் விஞ்ஞான மகாநாடுகளையும் நடத்தி வருகின்றது.

சங்கத்தின் முக்கியமான முதலாவது இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு விஞ்ஞான பாடங்களில் தரமான பரீட்சைகள் நடாத்துவது இன்றியமையாததாகும். இதை அடையும்பொருட்டு வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம் ஒரு பரீட்சைப் பகுதியைத் தோற்றுவித்துள்ளது. பௌதிகம், இரசாயனம், உயிரியல், கணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்பதாம் பத்தாம் தர வகுப்புகளுக்குச் சென்ற இரண்டு ஆண்டுகளாகப் பரீட்சை நடாத்தியுள்ளது. வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்களிலுள்ள ஏறக்குறைய பதினையாயிரம் மாணவர் இப்பரீட்சைகளுக்குத் தோற்றிப் பயன் மிக அடைந்துள்ளார்கள். இத் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு பதினெராம் பன்னிரண்டாம் தரங்களுக்குப் பரீட்சை நடாத்தப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதிதாகத் ''திறம்படக் கல்வி புகட்டும் திட்டம்'' Planing For Effective Teac-ing) என்ற ஒன்றையும் ஆரம்பித்து ஆயத்தவேலைகள் நடந்து கொண்டிருக்கிறது.

தொழிற்சங்கச் சார்பற்ற தர்மஸ்தாபனமாகப் (Chari-ty approved) பதியப்பட்டுள்ள வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம் அதன் குழந்தைப்பருவத்தில்தான் இன்றுள்ளது. அதன் வளர்ச்சிக்கு வேண்டிய ஆக்கப்பணிகளில் ஊக்கம் எடுக்கவேண்டியது ஒவ்வொரு விஞ்ஞான ஆசிரியரினதும் கடமையாகும். தக்க வழிகளிற் சங்கத்தைப் பேணி வளர்த்து அதன் பயன்களை நம்நாட்டிற்குஅளிக்க வழிவகுப்பது ஒவ்வொரு குடிமகனினதும் கடமையாகும். குழந்தைப் பருவத்திலேயே இத்துணை நலன்கள் நல்கிய சங்கத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாது தேவைப்படுவன ஒரு விஞ்ஞான நூல்நிலையமும் மத்திய ஆய்வுகூட அலுவலகமும் ஆகும்

இவைகளை உருவாக்கும் நன் முயற்சிகளில் ஊக்கத்துடன் உழைக்கும் ஆசிரிய நண்பர்கள் பலர். பொருளுதவி புரிந்து ஊக்குவித்த பெருந்தகையோர் பலர். பொருளீட்டப் பேருதவி புரிந்த ஸ்தாபனங்கள் பல. அவர்களனைவருக்கும் நன்றிக் கட்டுப்பாடுடையது எமதுசங்கம். விஞ்ஞானநூல் நிலையமும் மத்திய ஆராய்ச்சி அலுவலகமும் கட்டுவதற்கு வேண்டிய நிலமும் கிடைத்துள்ளது. பொருள் போதாக்குறையே பெருங்குறையாகவுள்ளது. அப் பெருங்குன்றையை நீக்குவது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகுமல்லவா?

# நான்கு மணி நேரம் . . .

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

கண்டு, ''நீங்கள் நேற்றிரவு அப்படியேன் பேசினீர்களென்று கேட்டபொழுது, ''அப்படி ஏன் பேசினேனென்று எனக்கே தெரியாது'' என்று சொன்னுராம்.

முப்பத்தைந்து வருடங்களில் பெருமான் எத்தனையெத்தனை பிரசங்கங்கள் செய்திருப்பார். பெருமான் காலத்தில் தமிழில் சுருக்கெழுத்துக்கிடையாது. இதனுல் எங்களுக்கேற்பட்ட நஷ்டம் இவ்வளவென்று சொல்லமுடியாது. சுவாமி விவேகானந்தரின் பிரசங்கங்களை சுருக்கெழுத்தில் எடுத்துக்கொண்டதால் அவை நூல்வடிவம்பெறமுடிந்தன. ஆனுல் நாவலர்பெருமானின் பிரசங்கங்கள் புத்தக உருவம் பெறமுடியாதது எத்தனைநஷ்டம். இப்படியே பெருமானின் கடிதங்களும் தொலைந்துபோனதால் அவற்றை இன்று புத்தகத்தில் காணமுடியாதிருக்கிறது. இராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள் போன்ருேரின் கடிதங்களும் பேச்சுக்களும், மணிமொழிகளும், கட்டுரைகளும் நூல் வடிவில் ஏராளமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவை உலகமக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. பெருமானின் பிரசங்கங்களும், மணிமொழிகளும், கடிதங்களும், கட்டுரைகளும் பேணப்படாததால் இன்று அவை நூலாக்கம் பெறவும் அதன்மூலம் உலக மக்களுக்கு உபயோகப்படமுடியாமற்போய்விட்டமை தமிழ்மக்கள் செய்த துரதிஷ்டமே. (தொடரும்)

# வார்த்தைச் சிக்கனம்

ஒரு பெண் உபயோகப்படுத்தும் வார்த்தைச் சிக்கனத்தைக்கொண்டே அவளுடைய அறிவையும், நல்ல மனைவியாக நடந்து கொள்ள அவளுக்குள்ள தகுதியையும் அளவிட முடியும். இதுதான் இல்லறவாழ்க்கையின் இன்பத்தையும் அமைதியையும் இறுதியில் நிர்ணயிப்பதாகும்.

# சர். பிரான்சிஸ் ஃபொக்கட் — (2)




மரிகொக்கிஸ் என்ற காட்டுச் சாதியினரிடமிருந்து ஃபொக்கட்டும் நண்பர்களும் தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியந்தான்! மரிகொக்கிஸ் என்ற இந்தக் காட்டுச்சாதியினர் தரையில் குழிதோண்டி, அதனுள் வசித்துவந்தனர், மேலே இலை, தழைகளால் மூடிக்கொண்டனர். ஃபொக்கட்டையும் அவரது குழுவினரையும் கண்ட இந்தக்காட்டுச்சாதியினரின்தலைவன், வில்லோடும், அம்போடும், அம்மணமாக இவர்கள்முன் தோன்றிக் குறிபார்த்தான். நல்லவேளையாக ஃபொக்கட் கைத்துப்பாக்கியால் தரையை நோக்கிச் சுட்டவுடன், அதைக் கேட்டும் கண்டும் பயந்தோடி மறைந்துவிட்டனர்.

''பிரேஸில்நாட்டுநூதனக் காட்சிச்சாலையில், 1753-ம் ஆண்டு எழுதப்பட்ட பிரதியொன்றில், ''பிரேஸில்நாட்டில் எங்கேயோ ஓரிடத்தில் நாகரீகமிக்க ஒருநகரம் புதையுண்டு கிடக்கிறது'' என்று காணப்பட்டது. அதை எப்படியும் கண்டுபிடிக்கவேண்டுமென தீர்மானித்தார் ஃபொக்கட்.

ஃபிலிப்பே என்ற நண்பனையும்கூட அழைத்துக்கொண்டு, கால்நடையாக, காடுவழியே, காணுமற்போன தகரைக் கண்டுபிடிக்கக் கிளம்பினர்.

அடாதமழையும், விடாது அடித்த புயலும் இவர்களை அல்லோலகல்லோலப்படுத்தின. கையிருப்பிலிருந்த உணவும் குறைந்துபோயிற்று. பறவைகளையும் குரங்குகளையும் சுட்டுக்கொன்று, சுட்டுத்தின்று பசியாறினர், ஃபிலிப்பேவுக்குக் காய்ச்சல் கண்டது. எனவே பயணத்தை இடைநடுவில் நிறுத்திவிட்டுத் திரும்பவேண்டியதாயிற்று.



காணுமற்போன நகரைக் கண்டுபிடிக்கக் கடைசியாக 1925-ம் ஆண்டு பயணத்தை மேற்கொண்டார். ஃபொக்கட் தனது மூத்தமகன் ஜெக்கையும், அவனது நண்பன் ரவே ரிம்மலையும் அழைத்துக்கொண்டு, குதிரையிலும் படகிலுமாக மாறிமாறிப் பிரயாணம் செய்தனர்.

இந்தப் பயணத்திற்போனவர்தான் ஃபொக்கட் திரும்பி வரவேயில்லை. கானகத்தில் ஏதோ ஓரிடத்தில் இருந்து கடைசியாக இவர் தனது மனைவிக்கு கைப்பட எழுதிய கடிதத்தில், ''தோல்வி ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சாதே!'' என்று [illegible] தார். அதற்கப்புறம் ஃபொக்கட்டைப்பற்றி எந்தச் செய்தியும் கிடைக்கவே இல்லை.

ஃபொக்கட்டைப் போன்ற கிழவனொருவனைக் காட்டிலே கண்டதாகவும், இதைப்போன்ற ஊர்ஜிதமற்ற தகவல்களே கிடைத்[illegible]தயும் மகனும் என்ன ஆனுர்கள் என்று யாராலும்அறியமுடியவில்லை

அமேசன்நதிப் பள்ளத்தாக்கு காணுமற்போன நகரைமட்டும் மறைத்து வைத்திருக்கவில்லை; அதைக் கண்டுபிடிக்கக் கிளம்பிய சர். பிரான்சிஸ் ஃபொக்கட்டையும்கூட மறைத்து வைத்திருக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உன்னையே நீ அறி

# மனச்சாட்சியை மதியாத சமூகத்துக்கு ஏன் மதிப்பளிக்க வேண்டும் ?

[12]

இதுவரை கூறிய விஷயங்களால், ஒருவன் தன்னுடைய மனத்திருப்திக்கேற்ப வாழாமல் பிறருடைய பார்வையில் தான் எப்படி வாழவேண்டும் என்ற அடிப்படையில் வாழ்க்கை நடத்துவதால்தான் வாழ்க்கையில் நிம்மதியை இழக்க நேரிடுகிறது என்ற உண்மையை அறிந்தோம்.

— திருமதி பார்வதி நாகலிங்கம் —

சாதாரண வாழ்க்கை வசதிகள் படைத்த ஒருவன் தான் ஒரு லட்சாதிபதியின் உன்னத வாழ்க்கையை நடாத்துவதாகத் தன் நண்பர்களும் அயலவர்களும் நினைக்கவேண்டும் என்ற தோரணையில் தன் உள் அவலங்களை மூடி மறைத்து நடந்து கொள்கிறுன். கடன் பட்டாவது ஒரு போலி வாழ்க்கையைச் சிருஷ்டித்துக் கொள்கிறுன். இவன் வாழ்க்கையில் நிம்மதி குலைவதற்குக் கேட்க வேண்டுமா?

தவறு செய்த ஒருவன் தான் செய்த தவறு பிறருக்குத் தெரியவந்தால் தனக்கு அவமானம் ஏற்படும் என்று கவலைப்படுகிறுனே தவிர தன் மனச்சாட்சி அதைப்பற்றி என்ன சொல்லுகிறது என்று கவலைப்படுவதில்லை.

இவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டு எத்தனை காலத்திற்கு நிம்மதியாக வாழமுடியும்?

ஆக, வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தனக்காக வாழாமல் பிறருக்காகவே வாழுகிறுர்கள். இதுவும் ஒருவித தியாகம்தானே? பொய் சொல்லுவதும் திருடுவதும் கூடப் பிறருக்காக வென்றுல் இதனை என்னவென்று சொல்வது.

நாம் ஒவ்வொருவரும் முக்கியமாக அறிந்து கொள்ளவேண்டிய உண்மை ஒன்றுண்டு. அதாவது பிறரைத் திருப்திப்படுத்துவதற்காக நாம் வாழக்கூடாது. நமது மனச்சாட்சியைக் கொன்றுவது நாம் பிறரின் நன்மதிப்பைப் பெறவேண்டும் என்று நாம் வாழக்கூடாது. நமது மனத்தின் திருப்திக்காகவே நாம்வாழவேண்டும். நமது மனச்சாட்சிக்காகவே வாழவேண்டும் ஏனெனில் மனச்சாட்சியே நமது கடவுள். நமது மனமே இறைவனின் கோயில். நமது மனதை ஏமாற்றி பிறருக்காகப் போலிவாழ்க்கை வாழ்வது நம்மை நாமே ஏமாற்றுவதுமல்லாமல் இறைவனையும் ஏமாற்றுவதாகும்.

இன்றைய சமுதாயத்தினிடம் பெற்றுள்ள போலி வாழ்க்கைதான் எத்தனை நகைச்சுவை நிரம்பியதாக இருக்கின்றது. இதோ ஒரு உதாரணம்.

ஒருதிருமணத்திற்கு அழைப்பு வந்திருக்கிறது என்றவுடன் ஒரு மனைவி என்ன செய்கிறுள்? நாலு வீட்டுக்கும் ஓடி, காப்பு, மாலை என்று ஒவ்வொன்றுக இரவல் வாங்கிச் சேகரம் செய்கிறுள் யாரிடம் இரவல் கேட்கக்கூடாதென்று மனச்சாட்சி உறுத்துகிறதோ அங்கெல்லாம்கூட, மனச்சாட்சி முன் கூனிக்குறுகிக் கொண்டு நகைகளை இரவல் வாங்கி வருகிறுள். கணவனும் அவளுக்கேற்பத் தன்னைத் தயாராக்கிக் கொள்ளுகிறுன். இருவரும் திருமண வீட்டுக்குச் சென்று கடன் பட்டு வாங்கிக்கொண்டு போன திருமணப்பரிசை மணமக்களிடம் சேர்ப்பித்துவிட்டு வரும்வரை நெருப்பின் மேல் இருப்பதுபோல் இருந்துவிட்டு வீட்டுக்குவந்து இரவல் நகைகளையெல்லாம் திருப்பிப் பத்திரமாகக் கொடுத்தபின்தான் நிம்மதிப் பெருமூச்சு வெளிவருகிறது.

யாருக்காக இவ்வளவு சித்திரவதைப் பட்டுக்கொண்டு மனச்சாட்சியையும் ஏமாற்றிக்கொண்டு இந்த நாடகம் நடிக்க வேண்டும்? சற்று ஆழ்ந்து சிந்தித்தால் நிழலைப் பிடித்த கதைதான். ஏனெனில் திருமண வீட்டில் இவர்களைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும் அவர்கள் போட்டிருப்பது இரவல் நகையென்பது. இவர்களைத் தெரியாதவர்களுக்கு இவர்களைப்பற்றிய அக்கறையே இல்லை. அப்படித்தான் அக்கறை இருந்தாலும் அவர்கள் இவர்களைப் பணக்காரர் என்று நினைப்பதால் இவர்களுக்கு ஒரு தம்பிடியும் லாபம் கிடைக்கப் போவதில்லை குட்டு வெளிப்பட்டதும் மானந் தான் போகும். அப்படியிருக்க எதற்காக இந்தக் கேலிக்கூத்து.

நமது சமுதாயத்தில் பரவியிருக்கும் எத்தனையோ நவநாகரிகமான மூடவழக்கங்களில் இதுவும் ஒன்று. அதாவது போலி ஆடம்பரம். தத்தம் தகுதிக்கேற்பவே நடந்துகொள்வது என்று சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் துணிவுகொண்டால், அப்படி நடப்பவர்களைத்தான் மதிப்பது என்று ஒவ்வொருவரும் உறுதி கொண்டால் இப்படியான கேலிக்கூத்துக்கு இடமில்லாமல் போகலாம்.

தம்முடைய மனத்திருப்திக்கு இல்லாமல் பிறருடைய மனத்திருப்திக்காகச் செய்யும் ஒவ்வொரு காரியமும் இத்தகையது தான். இன்னெருவருக்காகத் தன்னுடைய சௌகரியத்தைத் துறந்து செயல்படுவது எவ்வளவு பேதமை.

வாழ்க்கையில் எந்த ஒரு விஷயத்தில் ஈடுபடும் போதும் அது சமுதாயத்தின் கண்களுக்கு அது எப்படியிருக்கும் என்று பார்ப்பதை விட்டுநமதுமனச்சாட்சியின் கண்களுக்கு அது எப்படியிருக்கும் என்று பார்ப்பதே விரும்பத்தக்கது.

சமுதாயத்தையும், சமுதாயத்தில் உள்ள பிரமுகப் பெருந்தகைகளையும் பொருட்படுத்தாமல் நமது மனச்சாட்சிக்கு மட்டுமே மதிப்புக்கொடுத்து நடப்பதானல், அதற்கு நிறையத் தன்னம்பிக்கை வேண்டும். நமது மதிப்பையும், நமது சக்தியையும் நாம் உணர வேண்டும். உண்மையில் நமது பெருமையை, உணராததாலேயே நாம் சமுதாயத்தின் போலி நடவடிக்கைகளுக்குப் பயந்து நமது மனச்சாட்சியை அடகு வைக்க வேண்டியிருக்கிறது.

## வாழ்க்கையில் நிம்மதி

இது எவ்வளவு அர்த்தமற்றது என்பதை ஒரு நொடியில் நிரூபித்துவிடலாம்.

மனச்சாட்சியை மதித்து நடக்கும் ஒருவன் மனச்சாட்சியை மதியாத ஒரு சமூகத்திற்கும் அந்தச் சமூகத்திலுள்ள பெரிய மனிதர்களுக்கும் எதற்காக மதிப்புக் கொடுக்க வேண்டும்? உண்மையில் பெரிய மனிதன் யார்? மனச்சாட்சியை மதிக்கும் நாமா, அல்லது மனச்சாட்சியை விற்று விட்ட போலிகளா? ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் நமக்கு நிகரானவர் இந்தச் சமூகத்தில் யாருமில்லை என்பது தெரியவரும். மனச்சாட்சியை மதிக்கும் நமது பெருமையும் மதிப்பும் நம்மை எள்ளி நகையாடும் சமூகத்தில் உள்ளவர்களைவிட மேம்பட்டது. மனச்சாட்சியை மதிக்கும் 'நான்' மேலானவன் என்பதைத் தன்னம்பிக்கையோடு நாம் ஒவ்வொருவரும் பற்றிக்கொள்ள வேண்டும்.

சாதாரணமாக 'நான்' என்பதை ஆணவத்தைக் குறிக்கும் பதமாக உபயோகிக்கின்றனர் மக்கள். ஆனல் 'நான்' என்பதற்கு மகத்தானதொருதத்துவப்பொருளுண்டு. ''உன்னையே நீ அறிவாய்'' என்ற தத்துவ மொழியின் விளக்கமாக வரும் 'நான்' கடவுளே தான், ''உன்னையே நீ அறிவாய்'' என்ற கிரேக்க தத்துவஞானி சாக்கிறட்டீஸின் கூற்றில் தொக்கிநிற்கும் மகத்தான உட்பொருள்இதுவே ''உனது சக்தி மகத்தானது; உனக்காகவே நீ வாழ்; உனக்கே நீ உண்மையாயிரு.''

நான், எனது உடல்,எனது கௌரவம், எனது மதிப்பு, எனது உடை என்பவற்றிற்காக எவ்வளவு கவனம் செலுத்துகிறேன். எவ்வளவு பணம் செலவழிக்கிறேன் எவ்வளவு காலத்தை வீணுக்குகிறேன். அப்படியாயின் 'நானுக்கே' நான் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டும். அந்த 'நான்'- சத்தியம்- கடவுள்- எவ்வளவு மகத்சானது, நம்மைப் பற்றி இந்த உணர்வு இருந்தால், சமுதாயத்தின்போலி வேஷத்திற்கு நாம் மதிப்புக் கொடுக்க வேண்டியதில்லை. 'நானுக்கு' மட்டுமே மதிப்புக் கொடுத்து நாம் வாழ முடியும். அதன்மூலம் வாழ்க்கையில் நிம்மதியையும் அடைய முடியும்.

''காயமே கோயிலாக
கடிமனமடிமையாக
வாய்மையே தூய்மையாக
மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலா
நிறை நீரமைய ,ஆட்டி
பூசனை ஈசனுர்க்கே
போற்ற இக் காட்டினேமே.

### முடிவுரை

வாழ்க்கையில் நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளும், இப்படித்தான் நடக்கவேண்டுமென ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டவை. நம் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய இன்ப துன்பங்களை நம்மால் மாற்றமுடியாது. இருப்பினும் நமது மனம் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் எவ்வளவு அங்கலாய்ப்புக்குள்ளாகிறது. 'எல்லாம் அவன் செயல்' என்று இருந்தால் நமக்கு எவ்வளவோ நிம்மதி கிடைக்கும். ஆனல் நம்மால் அப்படி இருக்க முடியவில்லை. வேண்டுமென்றேதான் இறைவன் மனிதமனத்தை அப்படிப் படைத்திருக்க வேண்டும்.

மனத்தை அமைதியாக வைத்திருப்பதற்கு இந்தக் கட்டுரையில் கூறியுள்ள விஷயங்கள் துணைபுரியும் என்பதே எனது நம்பிக்கை.

# கம்பர் கவி விருந்து

(10ம் பக்கத் தொடர்ச்சி)

சபித்துவிட்டான் கௌதமன் என்கிறுன். கௌதம சாபம் என்ற அந்தச் சுடு சொல்லுக்கு, ராமனை நோக்கிச் சொல்லும் கதையில் ராமபாணம் என்ற சுடுசரத்தையே உபமானமாக்குவது எவ்வளவுபொருத்தமானது! ''அந்தச் சுடுசொல் தவருமல் விரைவிலே பலன் தருவதுபோல், ராமா! உனது சுடுசரமும் குறிதவருமல் விரைவிலே துஷ்ட நிக்கிரகம் செய்து வருகிறது, இன்னும் செய்யப்போகிறது!'' என்று ராமனை உற்சாகப்படுத்துவதும் எவ்வளவு சாதுரியமாக நடைபெறுகிறது. கௌதமசாபம் பெற்று அந்தச் சுடுசொல்லால் விகாரமடைந்த உருவத்துடன் இந்திரன் போய்விடுகிறுன். அவன் போனபின்பு அகலிகைக்கும் சாபம் கொடுக்கிறுர் மஹரிஷி.

''மெல்லியலாளை நோக்கி
விலைமகள் அனைய நீயும்
கல் இயல் ஆதி!'' என்றுன்
கடுங்கலாய் மருங்கு
வீழ்வான்.

''காமப்புதுமணமது'' என்று உணர்ந்தபின்னும் ''தக்கது அன்று'' என்று பகுத்தறியும் விவேகத்தையும் சித்த சக்தியையும்இழந்துதாழ்ந்து கிடந்ததால் அகலிகையைக் கல்லாகும்படி சபித்துவிட்டாராம். இப்படிக் கல்லாக்கிய சுடுசொல்லைக்காட்டிலும், ''விலைமகள் அனைய நீயும்'' என்ற ஏச்சாகிய சுடுசொல் அவளை எவ்வளவு அதிகமாகச் சுட்டிருக்க வேண்டும். கல்லாய் விழுவதற்கு முன், இந்தச் சாபத்திற்கு ஒரு முடிவை அனுக்கிரகிக்கவேண்டும்'' என்று அவள் வேண்டிக்கொள்ள, கௌதமர் சாபவிமோசனம் அருளினுராம்.

''பிழைத்தது பொறுத்தல்
என்றும் பெரியவர்
கடனே என்பர்
அழல்தரும் கடவுள்
அன்னய்! முடி(வு)
இதற்(கு) அருளு
கென்னத்
தழைத்துவண்(டு)இமிரும்
தண்தார்த்தசரதராமன்
என்பான்
கழல் துகள் கதுவ இந்சக்
கல்லுருத்தவிர்தி!''

என்றுன்.

கௌதமருடையகோபமும் அக்கினிபோல் இருக்கிறது; அவருடைய சுடுசொல்லாகிய சாபமும் அக்கினிபோலவே சுடுகிறது! எனினும் மாசுகளைச் சுட்டெரித்துத் தூய தங்கமாக்கும் சக்தியும் தூய்மையும் அந்தக்கோபத்திலும் சாபத்திலும் அடங்கிக்கிடக்கின்றனவாம். இத்தகைய கருத்துக்களை உய்த்துணரவைக்கிறது. ''அழல் தரும் கடவுள் அன்னய்!'' என்று அகலிகை தன் கணவரை நோக்கிக்கூறுவது.

(தொடரும்)

# திருவிழா ஆற்றுப்படை

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அடைதலை விட்டாங் கொருபுற மொதுங்கிச்
சேய்மையில் நின்று சேவித் திடுங்கால்
நல்லூர்க் கந்தன் நல்லருள் செய்யக்
கைலாச வாகனத் தெழுந்தருள் கோலம்
அருந்ததி போலத் தெரியும்; அக்கணம்
அப்பெரு மானை அகம்நெகத் தொழுக,பின்,
பிரசா தம்பெற வழியிலை யாதலின்;
கோயில் சென்ற அறிகுறியாகக்
கடலையை யாவது வாங்கிக் கொண்டு
வந்து சேர்''என விளாம்பழப் புலவர்
ஆற்றுப் படுத்திய அறிவுரை யிதனைக்
காய்தலும் உவத்தலுங் கருதா வுளத்தால்
நடுநின் ருய்ந்து நன்மையைக் கைக்கொண்டு
வாழும் அன்பர் ஊழியும்
சைவம் வளர்க்குஞ் சால்பின ராவரே.

[முற்றும்]

### சாப்பிட்ட பின்னர்...

சாப்பாட்டுக்குப் பின்னர் சிறிதுநேரம் உட்கார்ந்து இளைப்பாறுபவன் தொந்திவயிற்றை அடைகிறுன். சாப்பாட்டுக்குப் பின்னர் தூங்குபவன் சுகத்தை அடைகிறுன். சிறிது நேரம் நடப்பவனே நீண்ட ஆயுளை அடைகிறுன். ஓடுகிறவனையோ மரணம் துரத்திச் சென்று ஆட்கொண்டு விடுகிறது.

விக்கிரமாதித்தன் கதைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழநாடு சந்தா**

வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும் தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.


# மகாத்மா மணிமொழிகள்




சத்தியமும் அகிம்சையும் ஒருசிலர் மட்டும் கடைப்பிடிப்பதற்காக ஏற்பட்டதன்று. அதேபோல சுய கட்டுப்பாடும் ஒரு சிலருக்காக ஏற்பட்டதன்று. இம் மூன்றும் மனிதகுலம் முழுவதும் கடைப்பிடிப்பதற்கானவையே.

ஃ

அகிம்சை வழிகாலந் தாழ்த்தி பலன் கொடுக்கக் கூடியதென்று அஞ்சவேண்டாம். அது தான் உலகிலேயே வேகமாகவும் நிச்சயமாகவும் பலன்தரவல்லது.

தலையிலுள்ள அறிவு கீழ் நோக்கி, அதாவது உள்ளத்தை நோக்கி இறங்காவிடில் சிக்கலான சமயங்களில் அந்த அறிவினால் எப் பயனும் ஏற்படாது.

ஃ

சத்தியத்தை நாடுபவன் தூசியையும்விட பணிவுள்ளவனாக வேண்டும். தூசியை உலகம் அதன் காலடியில் அரைத்துத் தள்ளிவிடும். அந்த தூசியால் அரைக்கப்படுமளவிற்கு தன்னைப் பணிவுள்ளவனாக ஆக்கும்போது தான் சத்தியத்தைக் காண முடியும்.






## முன்னேற்றத்..

(13-ம் பக்கத்தொடர்ச்சி)

பலவும் தமிழர்களதைப்பின் பற்றியவையாகவுள்ளன. அவர்களின் தாய்மொழியும் தமிழேயாகும்.

மேலே குறிப்பிட்ட இனத்தவர்களைத்தவிர இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் வம்சாவழியினரான பறங்கியர், மலாயர் ஆகிய சிறு சமூகத்தவர்களும் வசிக்கின்றனர்.

இலங்கையில் தமிழர்களின் அரசாட்சி கி. பி. 2-ம் நூற்றுண்டு தொடக்கம் இருந்துள்ளதென்பது வரலாறு வாயிலாக அறிந்த உண்மை. இந்தஉண்மையை இந்நூற்றுண்டின் பின்னர் வந்த அன்னியநாட்டுப் பிரயாணிகளான கொஸ்மஸ் (6-ம் நூற்றுண்டு) சுலேமான் (9-ம் நூ) அபூசெயிட் (10-ம் நூற்), மார்க்கோபோலோ 13-ம் நூற்), இபன்பதுதா (14 ம் நூற்) ஆகியோரும் ருசுப்படுத்தியுள்ளனர். மகாவம்சா தீபவம்சா ஆகிய முக்கிய பௌத்தநூல்களின் படியும் கி. பி. 2-ம் நூற்றுண்டிலிருந்து அனுராதபுரத்திலிருந்து தமிழ்மன்னர் அரசாட்சி செலுத்தியுள்ளார்கள் என்பது அறியப்படுகிறது.

(தொடரும்)

## நன்றி நவிலல்

பிரம்மஸ்ரீ தி. விஸ்வநாதக் குருக்கள்: காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ தி. விஸ்வநாதக் குருக்கள் (சுன்னகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி முன்னுள் ஆசிரியர்) அவர்களின் மரணச் சடங்குகளில் கலந்துகொண்டும், அனுதாபம் தெரிவித்தும் துயரத்தில் பங்குகொண்ட உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இன்னும் பலவித உதவிகள் புரிந்த எல்லோருக்கும் அன்னாரின் குடும்பத்தினர் தமது நன்றிகளைத் தெரிவிக்கின்றார்கள். ''கணேச வாசம்'' உடுவில்

1303

[4ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்குள் என்ன வேறுபாடு இருந்தாலும் சிங்கள மக்களின் வாக்குகளையும் ஆதரவையும் பெறுவதற்கு தமிழர்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையிலும் முயற்சியிலும் அவர்கள் ஒன்று சேர்ந்துவிடுவார்கள்.

## வாரசாரம்

தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் நலன்களைப் பேணவும் தமிழ்மக்கள் மத்தியில் ஒற்றுமையை உருவாக்கி ஒன்றுபட்டசக்தியைத் திரட்டவேண்டிய தமிழ்த்தலைவர்கள், தங்களுக்கிடையில் வேற்றுமையை வளர்த்து தமிழ் இனத்தையே பிளவுபடுத்தி வைத்திருப்பது வேதனைக்குரியது. தவறை உணர்ந்து நிலைமையைத் திருத்தவேண்டியவர்கள் மேலும் மேலும் பல தவறுகளைச் செய்துகொண்டிருப்பது அதைவிட வேதனை. இருக்கும் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை காண முயற்சி செய்யப்படும் இச்சமயத்தில் புதிய புதிய கட்சிகள் முளைப்பதால் யாருக்கு நன்மை?


Till 14-8-69
MANOHARA
JAFFNA
Daily 4 shows
Kerwin Mathews
as
THE VISCOUNT
(color spy film)
(passes&concessions suspended)

REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya, Pre Poya 4 Shows
Michael Connors, Dorothy Provine
in
KISS THE GIRLS & MAKE THEM DIE


இன்றுமட்டும்
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி பண்டரிபாய்
நடித்த
திரும்பிப்பார்
(புதிய கொப்பி)

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
விஜயா சுரேஷ் கம்பெனியின்
குழந்தைக்காக

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
சிவாஜி ஜெயலலிதா சௌகார் ஜானகி
நடித்த
எங்க ஊர் ராஜா

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) 2-30, 6-30, 9-30 ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)



எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா
மனோகர், அசோகன், விஜயகுமாரி, சோ, மனோரமா, கண்ணன்
நடித்த
கணவன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: ப. நீலகண்டன்

யாழ். வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்



★ ஏ.வி.எம். ராஜன்
★ புஷ்பலதா
★ சிவகுமார்
★ கீதாஞ்சலி
★ நாகேஷ்
★ அஞ்சலிதேவி
வி.எஸ். ராகவன்
மாஸ்டர்பிரபாகன்
ஆகியோர் நடித்த
பால்குடம்
திரைக்கதைஇயக்குனர் மேற்பார்வை: கிருஷ்ணன் பஞ்சு
சந்திரனில் முதல் மனிதன் இறங்கி நடந்த அப்பலோ—11 காட்சியும் தமிழில் காண்பிக்கப்படுகிறது.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 6ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org